
முத்துலட்சுமி ராகவன்
www.cinespot.net
நீராட நதியா
இல்லை..?

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# நீராட நதியா இல்லை?

மின்னூலாக்கம் - அடியேன் ராமனுஜதாஸன்



லட்சுமி பாலாஜி பதிப்பகம்

68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,

சி.ஐ.டி நகர், தி.நகர்,

சென்னை - 600 035

அழைக்க : 95669 42486

மின்னஞ்சல் :bchandar24@yahoo.com

Website : www.muthulakshmiraghavan.com

# நூல் விவரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | நீராட நதியா இல்லை? |
| நூலாசிரியர் | : | முத்துலட்சுமி ராகவன் |
| நூல் உரிமை | : | எழுத்தாளருக்கு |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | முதற் பதிப்பு, அக்டோபர் 2019 |
| தாள் | : | 250 கிராம் |
| நூல் அளவு | : | (H) 19 x (W) 14 x (D) 2 cms |
| பக்கங்கள் | : | 240 |
| விலை | : | ரூபாய் 120.00 |
| பதிப்பகம் | : | லட்சுமி பாலாஜி பதிப்பகம்<br>68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,<br>சி.ஐ.டி நகர், தி.நகர்,<br>சென்னை - 600 035<br>செல் : 95669 42486 |

# முக்கிய அறிவிப்பு

இந்தக் கதை எனது சொந்தக் கற்பனையில் உருவானது. இதன் பதிப்பிற்கான உரிமையை லட்சுமி பாலாஜி பதிப்பகத்திற்கு மட்டுமே தந்திருக்கிறேன்.

இதைத் தழுவி தொலைக்காட்சி தொடர்களையோ. திரைப்படத்தையோ எடுத்தாலும் இணையதளத்தில் என் அனுமதியின்றி வெளியிட்டாலும் நான் சட்ட பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**இப்படிக்கு**

**முத்துலட்சுமி ராகவன்**

# ஆசிரியர் கடிதம்

**எ**ன் பிரியத்துக்குரிய வாசக.. வாசகிகளே..!

நவராத்திரியும், தீபாவளியும் அடுத்தடுத்து வருகின்றன.. எப்போதும் இப்படித்தானே என்று கேட்கிறீங்களா.. அது அப்படி வந்தாலும் நான் இப்படித்தான் எழுதுவேன்.. பழக்கத்தை மாத்த முடியாதுல்ல..

நவராத்திரியில் சின்ன வயதிலே சரஸ்வதி சபதம் சினிமாவுக்குப் போவோம்.. அந்தப் படத்திலே சரஸ்வதி மட்டுமில்லை.. பார்வதியும், லட்சுமியும் தனித்தனியா சபதம் போட்டிருப்பாங்க.. வேற என்னங்க.. எல்லாம் நீ பெரிதா, நான் பெரிதா சண்டைதான்.. முப்பெருந்தேவி களுக்குள் அப்படி சண்டை நடந்ததைக் கற்பனை.. அந்தப் படத்தில் வரும்..

**"கல்வியா..? செல்வமா..? வீரமா..?**

**அன்னையா..? தந்தையா..? தெய்வமா..?**

**ஒன்றில்லாமல் மற்றொன்று உருவாகுமா..?"**

என்ற பாடல் எனக்கு மிகவும் பிடிக்கும்.. தீபாவளிக் கொண்டாட்டமெல்லாம் அப்பா, அம்மா அவர்களுடைய மகளாக மட்டும் இருந்த காலங்களில் இனித்தது.. திருமணமான பின்பு அந்த ஆசைக்குக் கொண்டாட்டமும் எதிர்பார்ப்பும் இல்லை.. ஏன் என்றும் தெரியவில்லை.. பொறுப்பில்லாமல் இருந்ததினால் அவ்வளவு சந்தோஷம் இருந்ததோ..

என்னவோ போங்கப்பா.. அம்மா வீட்டில் தீபாவளிக்குத் துணி எடுக்கக் கடைக்குப் போவதே ஒரு விழா நாள் போல்தான் இருக்கும்.. காலையிலிருந்து மதியம் வரை ஜவுளிக்கடை... மதியம் லஞ்ச் ஓட்டலில் அசைவச் சாப்பாடு.. மேட்னி ஷோ சினிமா.. இரவு வீடு திரும்பும் போது உணவுப் பார்சல்கள் கையில் இருக்கும்..

அடுத்து வரும் நாள்களில் தினமும் புதுத்துணிகளை எடுத்து அழகு பார்ப்பேன்.. (இன்றும் அந்த ஒரு பழக்கம் மட்டும் இருக்கிறது..) தீபாவளியன்று

நள்ளிரவில் அம்மா எழுந்து விடுவாங்க.. 15 வகை பலகாரங்கள்.. விடிவதற்குள் எண்ணைக் குளியல்.. புதுத்துணிகளை சாமி முன்னால் எடுத்து வணங்கியபின் மஞ்சள் தடவி அப்பா எடுத்துத் தருவார்.. உடுத்திக் கொண்டு அவர் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினால் 100 ரூபாய் நிச்சயப் பரிசு உண்டு.. இப்போதோ என்றும் வரும் ஒருநாள் போல தீபாவளியும் ஒருநாள் என்று ஆகிவிட்டது..

எனக்கு மட்டும்தான் இப்படியா..? மற்றவை அடுத்த ஆசிரியர் கடிதத்தில்..

**- நட்புடன்**

**முத்துலட்சுமி ராகவன்.**

# நீராட நதியா இல்லை?

# அத்தியாயம் 1

**ப**ச்சைப் பசேலென்று பசும்கம்பளத்தை விரித்து வைத்திருப்பதைப் போன்ற மலைச்சரிவு.. அதில் கட்டம் கட்டமாக யாரோ கயிறு பிடித்து அளந்து பிரித்து வைத்திருப்பதைப் போல சீரான இடைவெளிகளுடன் கூடிய தேயிலைப் பாத்திகள்.. மலையின் இந்தப் பக்கம் நெடிய ஊசியிலை மரங்களுடன் கூடிய அடர்ந்த காடு.. அதனூடே ஓடும் சின்னஞ் சிறு ஓடைகள்.. நடுவிலிருந்த மலைப்பாதையில் கல்லாக கடினப்பட்டிருநத முகத்துடன் ஜீப்பை ஓட்டிக் கொண்டிருந்தான் விக்ரம்..

**"உலகம் பிறந்தது எனக்காக..**

**ஓடும் நதிகளும் எனக்காக.."**

பக்கத்தில் உட்கார்ந்து உரத்த குரலுடன் பாடிக் கொண்டிருந்த அஜய்யை விக்ரம் திரும்பிப் பார்த்த சிறுபார்வையில் அவன் காண்டாகி..

"பாட்டுத்தானேடா பாடினேன்.. கொலையா பண்ணிட்டேன்..?" என்று நியாயம் கேட்டான்..

"இப்ப நீ சத்தம் போட்டு கொடைக்கானல் மலையில இருக்கிற அத்தனை ஜீவராசிகளையும் அரள வைத்ததுக்குப் பெயர் பாட்டா..?" நிதானமாகக் கேட்டான் விக்ரம்..

"பின்னே..? இல்லையா..?" அஜய் சண்டைக்குப் போனான்..

"இல்லை.." அழுத்தம் திருத்தமாக அறிவித்தான் விக்ரம்..

"இது பாட்டு இல்லைன்னா.. வேற எது பாட்டு..?"

"நீ சத்தம் போட்டதுக்குப் பேரு வசனம்.. ஆமாம்.. அதென்ன, உலகத்தையே உனக்குப் பட்டாப் போட்டுக் கொடுத்திருக்காங்கன்னு டயலாக் விடற..? உலகத்தைத் தூக்கி உனக்குக் கொடுத்திட்டா நாங்கள்ளாம் என்ன பண்றது..? இதில நதிகளையும் விட மாட்டேங்கிற..?"

"நதிகளும் உலகத்தில அடக்கம்தானேடா விக்ரம்..?"

"அப்புறம் ஏண்டா அதை வேற தனியாச் சொல்லனும்..?"

"தெரியாம பாடிட்டேன்.. போதுமா..?"

"போதாது.. மறுபடியும் உன் டயலாக்கை பாட்டுன்னு சொன்ன.. கொலைவெறியாகிருவேன்.."

"சொல்லலைடா மச்சான்.. சொல்லலை.."

அழகாகப் பாடப்பட்ட பாடல் ஆரம்பத்திலேயே துண்டிக்கப் பட்டதில் சோகமானான் அஜய்.. கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை என்று விக்ரமைப் பார்த்துக் கேட்டு விட முடியாது.. அவன் இப்போதுதான் இப்படி.. சில மாதங்களுக்கு முன்பு வரை கை தேர்ந்த பாடகன்.. உற்சாகமயமானவன்.. இதே மலைப் பாதையில், இதே அஜய்யை அருகில் வைத்துக் கொண்டு, இதே பாடலை படு உற்சாகமாக பாடிக் கொண்டிருந்தவன்..

"மலர்கள் மலர்வதும எனக்காக - அன்னை

மடியை விரித்தாள் எனக்காக.."

என்று அவன், காற்றில் முன்னுச்சி முடி பறந்து நெற்றியில் படிய, கண்களைச் சிமிட்டியபடி பாடும் போது ஆண்மகனான அஜய்க்கே விக்ரமின் மீது காதல்

வரும்.. அந்த அளவுக்கு வசீகரமானவன் விக்ரம்.. கவர்ச்சியானவன்..

அந்த விக்ரமாக இன்று அவன் இல்லை.. சிரிக்கக் கூலி கேட்கும் இறுக்கமான முகம்.. கண்டிப்பை மட்டுமே பிரதிபலிக்கும் துளைப்பதைப் போன்ற பார்வை.. கடினமான சுபாவம்..

அவனைச் சுற்றியிருக்கும் இரும்புத் திரையை ஊடுறுவி உள்புக முடிந்தது அறுவர் மட்டும்தான்.. அஜய், விக்ரமின் தங்கை வீணா, விக்ரமின் பெற்றோர்.. விக்ரமின் தாத்தா, பாட்டி அதிலும் வீணா தமையனுடன் போராடுவாள்..

"ஏண்ணா இப்படி இருக்க..?"

"எப்படி இருக்கேன்..?"

"படுத்தாதே.. சிரிக்கக் சேலரி கேட்கிற.."

"ஈஸிட்..?"

"என்ன ஈஸிட்..? கண்ணாடியில் உன் முகத்தைப் பார் அண்ணா.. அது சொல்லும்.."

விக்ரமை இழுத்துக் கொண்டு போய் ஆளுயுயரக் கண்ணாடியின் முன்னால் நிறுத்துவாள் வீணா.. முரட்டு ஜீன்ஸ், காட்டன் சர்ட், ஜெர்கின் கோட்டுமாக இருப்பவனின் கவர்ச்சி அப்படியேதான் இருக்கும்.. சிரிப்பு மட்டும் தொலைந்திருக்கும்.. தன்னைத் தானே வெறிக்கும் தமையனின் கற்சிலை போன்ற தோற்றத்தில் கலங்கிப் போவாள் வீணா..

"இப்படிப் பார்க்காதே அண்ணா.. முன்னேயெல்லாம் நீ இப்படியில்லை.. எவ்வளவு ஸ்போர்ட்டிவ்வா இருப்ப தெரியுமா..?"

"எனக்கொண்ணும் வித்தியாசம் தெரியலை.."

முகம் மாறாமல் சொல்லி விட்டு விலகி விடுவான் விக்ரம்.. அதற்கும் அஜய்யை குற்றம் சாட்டுவாள் வீணா..

"நீங்க சரியில்லை அஜய்.."

"அதுசரி.. உன் அண்ணன் ரொம்பச் சரியா இருக்கான் பாரு.. என்னைச் சொல்ல வந்துட்ட.."

"தெரியுதில்ல..? அண்ணன் சரியா இல்லைன்னு தெரியுதில்ல..?"

"தெரிஞ்சதினாலதான் சொல்றேன்.."

"சொல்ல மட்டும்தான் வாய் கிழியுது.."

"வேற என்ன செய்யனும்..?"

"எதையும்தான் நீங்க செய்யலையே.."

வீணா கோபமாக விலகிச் செல்லப் போவாள்.. அவளது கை பிடித்து இழுத்து நிறுத்தும் அஜய்யின் முகத்தில் விளையாட்டுத்தனம் மறைந்திருக்கும்.. தீவிரம் வந்திருக்கும்..

"ஏய்ய்.. நில்லுடி.."

"வாடி, போடின்னா நடக்கறதே வேற.."

"என்னடி நடக்கும்..? என் வாய் வெத்தலை பாக்கை போட்டுக்குமா..? செய்டி.. காதலி கையிலே அடி வாங்கின காதலனா இருந்துட்டுப் போறேன்.. உனக்கு என் வாயைக் கிழிக்கணும்.. அவ்வளவுதானே.. டு இட்.."

அஜய் வீணாவின் கைகளை எடுத்துத் தன் முகத்தில் பதிப்பான்.. விம்மலுடன் அவன் மார்பில் ஒன்றிக் கொள்ளும் வீணா கோபமாக அவன் மார்பில் குத்துவாள்..

"போடா.."

குத்தும் கையைப் பிடித்து அதில் முத்தம் பதிக்கும் அஜய் காதலுடன்..

"உன்னை விட்டு எங்கேயும் போக மாட்டேண்டி.." என்று கண்களில் காதல் மின்னச் சொல்வான்..

அது வீணாவுக்கும் தெரியும் என்பதினால் அவன் மார்பில் இன்னும் அதிகமாக புதைந்து கொள்வாள்.. அந்தத் தருணங்களில், அவர்கள் இருவரின் மனங்களிலும் எழுந்து நிற்கும் கேள்வி ஒன்றே ஒன்றாகத்தான் இருக்கும்..

'அவள் மட்டும் ஏன் விக்ரமை விட்டுப் பிரிந்து போனாள்..?'

விக்ரமின் காதலை விடப் பெரிதானது உலகில் உண்டா என்ன..? வீணாவுக்குத் தெரியவில்லை.. தன்

தமையன் என்பதினால் அவளுக்கு விக்ரம் உயர்வானவனாகத் தெரிகிறானா..?

"இல்லை.." தலையசைத்து மறுப்பான் அஜய்..

"நானும் அவனும் இன்று நேற்றா ஃப்பிரண்டா இருக்கோம்..? எக்.கே.ஜியில இருந்து பக்கத்து பக்கத்து சீட்டில உட்கார்ந்து சேர்ந்து படிச்சவங்கம்மா.. எம்.பி.ஏ படிக்கப் ஃபாரின் போன போதும் ஒன்றாகத்தான் போனோம்.."

"இப்ப இந்தப் பெருமையை நான் கேட்டேனா..? சைக்கிள் கேப் கிடைச்சாலும் போதுமே.. என் ஃப்பிரண்டப் போல யாரு மச்சான்னு பாட ஆரம்பிச்சிருவீங்களே.."

"பப்பி.. லவ் முதல் கொண்டு.. ஃபாரின் லவ் வரைக்கும் அவனைப் பத்தி எனக்குத் தெரியும்ன்னு சொல்ல வந்தேண்டி.. அதிலும் லண்டன்ல அந்த நீலக்கண் அழகி இருக்காளே.. விக்ரம், விக்ரம்ன்னு இவன் பின்னாலே பைத்தியமா அலைந்தா.."

அஜய் விட்ட பெருமூச்சில் அந்த நீலக்கண் அழகி அவன் பின்னால் அப்படி அலையவில்லையே என்ற ஆதங்கம் அப்பட்டமாக வெளிப்பட்டது.. அதை நொடிப் பொழுதில் இனம் கண்டு கொள்வாள் வீணா..

"என்ன..? உங்ககிட்ட இல்லாத அழகா என் அண்ணனிடம் இருக்குன்னு வெக்ஸ் ஆகிறதைப் போல இருக்கு..?"

'எப்புடி இவ அதைக் கண்டு பிடித்தா..?'

காதலன்களின் மனத் தடுமாற்றத்தை இம்மி கூடப் பிசகாமல் காதலிகள் கண்டு கொள்ளும் மாயம் எதுவாக இருக்கக் கூடும் என்று யோசித்து யோசித்துப் பார்த்தான் விடை கிடைக்கவே இல்லை..

"உன் அண்ணன் யாரிடமும் சிக்கியதே இல்லை வீணா.. அப்சரஸ்கள் போல இருந்த பெண்களை வேண்டாம்ன்னு ஒதுக்கியவன் முகம் தெரியாத ஒரு பெண்ணின் மீது எப்படி காதல் கொண்டான்னு இன்னைக்கு வரைக்கும் எனக்குப் புரியலைடி.. அவ பார்க்க நல்லாவும் இல்லை.. அவ எப்படியிருந்தாலும்

பிடிக்கும்ன்னு காதல் கோட்டை போல டயலாக் விட்டான்.."

"அவ மனசு அழகா இல்லையே.. பணத்துக்காக நிறம் மாறுகிறவளை என்னன்னு சொல்றது..?"

அஜய்யும் வீணாவும் அருவெறுப்புடன் முகம் சுளிப்பார்கள்.. அவர்கள் இருவருக்கும் உயிரான விக்ரமின் வாழ்க்கையில் விளையாடிவிட்ட அந்த கேடுகெட்டவளை நினைத்தாலே அவர்களுக்கு வெறுப்பாக இருக்கும்..

# அத்தியாயம் 2

**கொ**டைக்கானலின் முதன்மையான பணக்காரர் களில் முன்வரிசையில் இருப்பவர் ஜனார்த்தனம்.. அவருடைய அப்பா ஜகந்நாதன் தன்னுடைய பாரம்பர்ய எஸ்டேட்டை புதுப்பித்து விரிவு படுத்தி 'ஜே.ஜே எஸ்டேட்..' என்று பெயர் மாற்றம் செய்து மகனிடம் ஒப்படைத்தார்.. ஜனார்த்தனம் தன் காலத்தில் 'வி.வி. எஸ்டேட்..' என்று புதிதாக ஒரு எஸ்டேட்டை உருவாக்கினார்.. மற்றவர்கள் அவருடைய பிள்ளைகளான விக்ரம், வீணாவின் அடையாளமாக அந்த எஸ்டேட்டை நினைத்தார்கள்.. அவருடைய காதல் மனைவியான விமலாவிற்குத்தான் தெரியும்.. அது அவளுடைய அடையாளம் என்பது..

ஜனார்த்தனம் விமலாவைக் காதலித்து மணந்தவர்.. விமலாவின் பெற்றோர் சேலத்தில் பெரும் பணக்காரக் குடும்பம்.. மறுக்க ஏதும் காரணமில்லையென்பதால் மகன் பெண் தேடும் வேலையைக் குறைத்து விட்டான்

என்று மனதுக்குள் பெருமைப்பட்டபடி, வெளியே தாங்கள் காதலுக்கு மரியாதை செய்வதாகக் கூறிக் கல்யாணத்தை நடத்தி வைத்தார் ஜகந்நாதன்.. அவருடைய மனைவி மட்டும் அதை தனிமையில் அடிக்கடி சொல்லிக் காட்டுவாள்..

"என் மகன், நமக்கு இணையான குடும்பத்தில பெண்ணெடுக்க வைத்திருக்கான்.. இதில நீங்க என்னவோ அவன் காதலை நிறைவேற்றி வைத்ததைப் போல இந்தப் பீற்றல் பீற்றிக்கறிங்களே.."

"இல்லைடி யமுனா.. என் மகன் சிங்கம்டி.."

"பத்து மாதம் சுமந்து பெத்தது நான்.."

"சுமக்க வைச்சது நான்.."

"போதுமே.. மருமக காதில விழுந்திரப் போகுது.. பேரன், பேத்தி எடுத்த பின்னாலும் பேச்சைப் பார்.."

யமுனாவின் முகம் குங்குமமாய் சிவந்து விடும்.. அதற்காகவே இது போன்ற ரகசியப் பேச்சுக்களை அவ்வபோது மனைவியின் காதுகளில் ஓதி விடுவார்

ஜகந்நாதன்.. இப்பேற்பட்ட காதல் ரசம் பொங்கும் பெரியவர்களின் மத்தியில் வளர்ந்தவன் விக்ரம்..

அஜய்யின் அப்பா சந்தீப், ஜனார்த்தனத்திற்கு இணையான பணக்காரர்.. 'எஸ்.எம்.எஸ்டேட்..'டின் சொந்தக்காரர்.. அவரது மனைவியின் பெயர் மாளவிகா.. இவரும் தனது எஸ்டேட்டைப் புதுப்பித்து விரிவுபடுத்தி, பாரம்பரிய எஸ்டேட்டைப் பளபளா என ஆக்கிப் புதுப் பெயர் சூட்டியவர்தான்.. அஜய்யும், வீணாவும் ஒருவரை யொருவர் காதலிப்பதை இரு குடும்பத்தாரும் ஏக மனதாக ஆதரித்தார்கள்.. அது பற்றி விக்ரமின் குடும்பத்தார் உரையாடும் போது, அஜய் பெற்றோருக்கு ஒரே மகன் என்பதை முன்னிறுத்தினார்கள்..

"ஏன் தாத்தா.. ஃபேமிலிக்கு ஒரே ஸன் என்கிறதில அப்படியென்ன பெனிஃபிட் இருக்கு..?" பல்லைக் கடித்தபடி கேட்டாள் வீணா..

"என்னம்மா இப்படிக் கேட்டுட்ட.. ப்ராப்பர்ட்டியை பங்கு போட வேண்டியிருக்காது.."

"உனக்கும் நாத்தனார் தொல்லையிருக்காதில்ல.."

"வெரிகுட்.. நீங்க நினைக்கிறதைப் போல விக்ரம் அண்ணாவுக்குப் பெண் கொடுக்கிறவங்களும் நினைத்துட்டா விளங்கிரும்.."

வீணா சுட்டிக் காட்டும் உண்மையில் அவர்கள் வாயை மூடிக் கொள்வார்கள்.. எது எப்படியோ.. வீணாவுக்கு அஜய்யைப் பிடித்திருந்தது.. அவனுக்கும் அப்படித்தான்.. சிறு வயதிலிருந்தே விக்ரமும், அவனும் நகையும் சதையுமாகப் பழகுபவர்கள்.. விக்ரம் குடும்பத்தில் மருமகனாக நுழையப் போவதில் அவனுக்கு ஆனந்தம் என்றால் ஆனந்தம்.. அப்படியொரு ஆனந்தம்..

"டேய்.. அப்படின்னா உன் ஃபிரண்டோடு கம் போட்டு ஒட்டிக்கணும்னுதான் என்னைக் கரெக்ட் பண்ணியிருக்கிற..?" வீணா முறுக்கிக் கொள்வாள்..

"நீ மட்டும் என்னவாம்..? உன் அண்ணனின் ஃபிரண்ட் என்கிறதினாலதான என்னைக் கன்சிடர் பண்ணியிருக்கிற..?" அவனும் முறுக்கிக் கொள்வான்..

இருவரும் நீ அப்படி, நான் இப்படி என்று பானிபட் யுத்தத்தை நடத்தி முடிப்பார்கள்.. போரின் இறுதியில் களைப்பு மேலிட, நான் போகிறேன் என்று வெற்றிகரமாக யுத்தகளத்தில் இருந்து பின் வாங்குவாள் வீணா.. அவளது பூங்கரத்தை இழுத்துப் பிடித்து நிறுத்தி நீயே எனக்கு சகலமும் என்று சரணாகதியாவான் அஜய்.. அவள் விம்மலுடன் அவன் கழுத்தைக் கட்டிக் கொள்வாள்..

ஊடலில்லாத காதல் உப்புச் சப்பில்லாதது.. ஊடலுக்குப் பின்னான கூடல் அடிக்கரும்பின் இனிப்பையும் சுவையையும் கொண்டது.. இதைப் பொய்யாமொழிப் புலவர் தன் குறள்களில் சொல்லியிருக்கிறார்.. திரையிசைப் பாடல்கள் அடிக்கிற கைதான் அணைக்கும் என்று சொல்லியிருக்கின்றன..

அஜய்யும், விக்ரமும் லண்டனில் எம்.பி.ஏ படிப்பை முடித்துக் கொடைக்கானலுக்குத் திரும்பியவுடன் அவர்களது தனித்துவத்தை வெளிப்படுத்த ஹோட்டல் பிஸினெஸ்ஸில் இறங்கினார்கள்.. சீஸன் காலங்களில் எத்தனை நட்சத்திர ஹோட்டல்கள் கொடைக்கானலில்

இருந்தாலும் அத்தனையும் நிரம்பி வழியும்.. விக்ரம் 'விக்ரமாதித்யா ஹோட்டல்..' ஆரம்பிக்க, அஜய் 'ஆராதனா ஹோட்டல்..' என்று ஆரம்பித்தான்..

நண்பர்கள் இருவரிடமும் தொழில் போட்டி இருந்தில்லை.. அவரவரின் மனதில் தோன்றிய ரசனைகளை மனதில் கொண்டு ஹோட்டல்களை உருவாக்கினார்கள்.. ஒருவரின் கற்பனையை இன்னொருவர் காப்பியடித்ததில்லை..

லண்டனுக்குப் படிக்கப் போவதற்கு முன்னரே வீணாவுடனான காதலில் கட்டுண்டிருந்தான் அஜய்.. அந்தக் காதல் எப்போது ஆரம்பித்தது என்று கேட்டால்..

"சின்ன வயசில இருந்தே எனக்கு அவளைப் பிடிக்கும்.." என்பான்..

விக்ரம் அப்படி எந்தக் காதலிலும் விழுகவில்லை அவனை நோக்கி வீசப்பட்ட கன்னியரின் கடைக்கண் பார்வைகளிலிருந்து கிரேட் எஸ்கேப் ஆகிவிடுவான்.. காதலுக்கும் அவனுக்கும் ஏழாம் பொருத்தமாவே

இருந்து வந்தது.. அது எப்போது பத்துக்குப் பத்துப் பொருத்தமாக உருமாறியது என்று அவனுக்கே தெரியவில்லை.. ஓர் குளிர்நிரம்பிய காலைப் பொழுதின் இளம் வெயிலை அனுபவித்தபடி தேம்ஸ் நதியின் மீது படகில் ஊர்ந்து கொண்டிருந்த அதியற்புதமான வேளையில் அவனது காதுகளில் நுழைந்த தேனிசை.. தேம்ஸ் நதியின் நீர்த்துளிகளை அவன் மீது வாறியிறைத்ததைப் போன்ற சிலிர்ப்பை உண்டாக்கிய அந்த நொடிகளில் அவன் காதலில் விழுந்தான்.. அந்தப் பாடலில் தொலைந்தான்..

**"நீராட நதியா இல்லை..?**

**நிழல் தேட இடமா இல்லை..?**

**பசியாற உணவா இல்லை..?**

**பகிர்ந்துண்ண துணையா இல்லை..?"**

தேம்ஸ் நதியில் மிதந்த படகின் பக்கவாட்டுக் கம்பியின் மீது சாய்ந்து நின்று வெஸ்ட் மின்ஸ்டார் பாலத்தையும், அதன் பிண்ணனி போல வான் முட்ட எழுந்து நின்ற வெஸ்ட் மின்ஸ்டார் அரச மாளிகையின்

மணிக் கூட்டு கோபுரத்தையும் ரசித்துக் கொண்டிருந்த விக்ரமின் மனதின் கதவைத் தட்டித் திறந்து விட்டது அந்தப் பாடல்.

நீராட நதியா இல்லை என்று குழைந்து ஒலித்து மனதை அசைத்த அந்தப் பாடல் வரி அவன் மனதை ஈர்க்க விக்ரம் திரும்பிப் பார்த்து படகில் இருந்த பெண்களில் யார் அந்தப் பாடலை பாடியது என்று விழிகளால் துழாவினான்..

அஜய்யும் விக்ரமும் நின்றிருந்த மேல் தளத்தில் இருந்த அனைவரும் லண்டன் அழகிகள்.. வெள்ளைக்காரப் பெண்கள்.. அவர்களின் பால் வண்ணச் சருமத்தின் பேரழகை ரசித்துக் கொண்டிருந்த அஜய் விக்ரமின் தேடுதலைக் கண்டு..

"யாரைடா தேடற..?" என்று திகைத்தான்..

"இப்ப ஒரு பாட்டுச் சத்தம் கேட்டதே.."

"எப்படி..? 'சிங் ஆன் தி சைங்..'ன்னா..?"

அஜய் வடிவேலுவைப் போல பாடி வெறியேற்றி னான்.. விக்ரம் நண்பனை அன்பாக ஓர் அப்பு

அப்பியதில் தேம்ஸ் நதியில் குப்புறக் கவிழப் போய் விக்ரம் இறுக்கிப் பிடித்து இழுத்து நிறுத்தியதில் மயிரிழையில் தப்பிப் பிழைத்தான்..

"அடேய் பாவி..! நண்பனாடா நீ..? நான் உன் ஃபிரண்டு மட்டுமில்லைடா.. உன் தங்கையின் வுட் பி.."

"அந்தக் கருமத்துக்காகத்தான் ஆற்றில குப்புறத் தள்ளாம பொறுமையா இருக்கறேன்.."

"ஆத்தில தள்ளி விடற அளவுக்கு அப்படியென்னா தப்பு செஞ்சேன்..? ஏன் இந்தக் காண்டு..?"

"கொலைவெறியில இருக்கேன்.. வாயைத் தொறந்த.. வைச்சுச் சாத்திருவேன்.. ஏன்டா.. எப்படியாப்பட்ட பாட்டு அது..!"

"எப்படியாப்பட்ட பாட்டு..?"

"நீராட நதியா இல்லைன்னு பாடறாடா அவ..?"

ரசித்துச் சொன்ன நண்பனை விசித்திரமாகப் பார்த்தான் அஜய்.. தேம்ஸ் நதியை எட்டிப் பார்த்தான்..

"ஐஸ்கட்டி போல இருக்குது இந்தத் தண்ணி.. இதிலயா குளிக்கப் போற..?"

கேள்வியையும் கேட்டு விட்டு, நண்பனின் முகம் கடுகடுப்பதைக் கண்டவுடன் துள்ளிக் குதித்துத் தள்ளி நின்று தற்காத்தும் கொண்ட அஜய்..

"முறைக்காதடா.. 'நீராட'ன்னு சொன்னா, 'குளிக்க'ன்னு தானே அர்த்தமாகுது.. அதான் கேட்டேன்.." என்று புளி போட்டுத் தேய்த்து விளக்கம் வேறு சொன்னான்..

"ஏண்டா இப்படியொரு மடச் சாம்பிராணியா இருக்கிற..?"

"யோசித்து வார்த்தையை விடு விக்ரம்.. இந்த மடச் சாம்பிராணிக்குத்தான் உன் தங்கை வீணா சாம்பிராணி போடாத குறையாக பூஜை பண்ணிக்கிட்டு இருக்கா.."

"அவ ஒரு தத்தி.."

"தத்தைடா அவ.."

"அத்தச் சோம்பேறி.."

"சுறுசுறுப்போட இலக்கணமே அவதான்.. அவளைப் போய் சோம்பேறின்னு சொல்றியே.. ஏண்டா.."

"நடக்க மாட்டாதவன்.. எவனோ அத்தைகாரியைக் காதலிச்சானாம்.."

"அடேய்.. இது உனக்கே ஓவராத் தெரியலையா..? வீணா என்ன எனக்கு அத்தையாடா..?"

"உன்னைச் சொல்லலை.."

'அப்பாடி..' என்று நிம்மதியடைந்தான் அஜய்.. அவனா நடக்க மாட்டாதவன்.. ஓட்டப் பந்தயத்தில் கல்லூரி சார்பாக ஓடி பல்கலைக் கழகத்தின் முதல் பரிசைத் தட்டிச் சென்றவன்..

'என்னைப் போய் இப்படிச் சொல்லிட்டானேன்னு திகிலடிச்சு போயிருச்சு..'

"என் தங்கையைச் சொன்னேன்.."

"அவளை ஏண்டா வம்புக்கு இழுக்கிற..?"

"உன்னைக் காதலிச்சுத் தொலைத்திருக்கிறாளே.."

"அதுக்கு..?"

"இதோ பார்.. கண்ணுக்கு முன்னாலே ஏதோ சுமாரா நீ நடமாடினதில அப்பாம்மாவுக்கும் அண்ணனுக்கும் அலைச்சலைக் கொடுக்க வேண்டாம்ன்னு வீணா உன் காதலை கன்சிடர் பண்ணிட்டா.."

விக்ரமின் விளக்கத்தில் நொந்து போன அஜய் நண்பனை இமைக்காமல் பார்த்தான்.. நண்பனின் பார்வையில் உரத்துச் சிரித்த விக்ரம் மறுபடியும் கேட்ட பாடலில் பரபரப்பாகி பாதியில் சிரிப்பை நிறுத்தி விட்டான்..

**"எனக்காக வா - நான்**

**உனக்காக வா.."**

தேம்ஸ் நதியின் நான்கு திசைகளிலும் எதிரொலித்து அவனை அழைத்த அந்தப் பாடலுக்கு சொந்தக்காரி யார்..?

# அத்தியாயம் 3

**வி**க்ரம் அஜய்யை மறந்து படகின் மேல்தளத்திலிருந்து உள் பகுதிக்குப் பாய்ந்தான்.. அங்கே வெள்ளைக்காரர்களின் மத்தியில் சில இந்திய முகங்கள் தென்பட்டன.. அவர்களில் பாடலைப் பாடிய பெண் யாராக இருக்கக் கூடும் என்று அவனால் கண்டு பிடிக்க முடியவில்லை.. அவர்களின் நுனி நாக்கு ஆங்கிலமும், இந்தியும் அவனைத் தடுமாறச் செய்தன.. தேன் தமிழோசை கேட்கவில்லை.. அதற்குள் படகு கரையைத் தொட்டு நின்று விட.. அஜய் நண்பனை இழுத்துக் கொண்டு கரையில் இறங்கி விட்டான்..

விக்ரம் படகிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த இந்தியப் பெண்களைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி வந்தான்.. அவனது பார்வையில் ஒரு பெண் கேலியாக புருவங்களை உயர்த்தினாள்.. விக்ரமிற்கு என்னவோ போல ஆகி விட்டது.. அவன் பார்வையைத் திருப்பிக் கொண்டு நடந்து விட்டான்..

# நீராட நதியா இல்லை?

இரவு நேரத்தில் லண்டனின் வெஸ்ட் மின்ஸ்ட்டர் பாலத்தைப் பார்ப்பது தனி அனுபவம்.. வண்ண விளக்குகளால் பாலம் மின்னிக் கொண்டிருந்தது..

"நம்ம ஊர் பிருந்தாவன் போல இருக்கில்ல.." என்றான் அஜய்..

"பிருந்தாவன் என்ன நம்ம ஊரிலா இருக்கு..?" இன்னதென்று தெரியாத எரிச்சல் மனதை வியாபித்திருக்க சுள்ளென்று விழுந்தான் விக்ரம்..

"நம்ம நாட்டில இருக்குன்னு சொன்னேன்டா.."

"அப்படித் தெளிவாப் பேசிப் பழகு.."

"அதுக்கென்னடா விக்ரம்.. அப்படியே செய்துட்டாப் போகுது.. உன்னோட பழகின கொடுமைக்கு இன்னும் என்னென்ன நான் பழகணும்னு ஒரு லிஸ்ட் போட்டுக் கொடுத்திருடா மச்சான்.. அதை அப்படியே மெயின்டெயின் பண்ணிக்கறேன்.." பல்லைக் கடித்தபடி பதவிசாகச் சொன்னான் அஜய்..

நண்பனை விக்ரம் முறைக்க.. அவனது கோபத்தை மறக்கடித்தது துள்ளலாக காற்றில் மிதந்து வந்த பாடல்..

**"நதியோரம்..**

**நதியோரம்.."**

விக்ரம் இப்போது விரைந்து நடந்தான்.. தொலைவில் தெரிந்த பெண்கள் கூட்டத்தில் தேன்தமிழ் பாடலைப் பாடும் மாது யாரென்று அறிந்துவிட வேண்டுமென்ற துடிப்பு அவனை ஆட்டிப் படைத்தது..

**"நதியோரம்.. நதியோரம்..**

**நாணல் ஒன்று**

**நாட்டியம் ஆடுது மெல்ல..**

**நானந்த ஆனந்தம் என் சொல்ல..?"**

தேம்ஸ் நதியில் படகில் மிதந்த போது அவன் கேட்ட பாடலையும், இப்போது கேட்கும் பாடலையும் இதற்கு முன் அவன் கேட்டதில்லை.. நதியோடு பிணைந்த பாடலின் வரிகளும், அதை பாடிய குரலில் தொனித்த குழைவும்.. இன்னதென்று விளங்காமல் மனதை ஈர்க்கும் பாடலும் அவனைப் பித்தாக்கின.. அவன் அந்தப் பெண்களை நெருங்கிய போது பாடல்

நின்றிருந்தது.. ஆங்கிலமும் இந்தியும் கலந்த பேச்சுக் குரல்கள் காதுகளில் விழுந்தன.. ஒற்றைத் தமிழ் வார்த்தைகூட அவன் செவிகளில் விழவில்லை..

'எப்படிக் கேட்பது..?' விக்ரம் தயங்கி நின்றான்..

அவனைக் கண்ட பெண்கள் கூட்டம் தங்களுக்குள் இந்தியில் ஏதோ பேசி சிரித்தார்கள்.. அவர்களில் ஒருத்தி அவனைப் பார்த்துப் புருவங்களை உயர்த்தினாள்..

'இவ படகில இருந்து இறங்கினவ இல்ல..'

அவளுடைய உருவம் விக்ரமின் மனதில் பதிந்தது.. அவர்கள் சென்று விட்டார்கள்.. தேம்ஸ் நதியைப் பார்த்தபடி அசையாமல் நின்ற நண்பனின் அருகே வந்து தோளைத் தொட்ட அஜய்..

"நீயாடா இப்படி எமோசனல் ஆகிற..?" என்று வியப்புடன் கேட்டான்..

"ஏண்டா..? நான் எமோசனல் ஆகக் கூடாதா..? ஆஃப்டர் ஆல்.. நானும் ஓர் மனிதன்தானே..?" கரகரத்த குரலில் சொன்னான் விக்ரம்.

"ஓகேடா மச்சான்.. அதுக்காக காரணமில்லாமல் எமோசனல் ஆகிறயே.. இது உன் கேரக்டர் இல்லையேடா.. அதுதான் இடிக்குது.. ஆஃப்டர் ஆல் ஒரு பாட்டு.. அதுக்குப் போய் உன் எமோசனலை வேஸ்ட் பண்றியே.. இதைத்தான் என்னால ஏத்துக்க முடியல.."

'ஆஃப்டர் ஆல்.. ஒரு பாட்டா..?'

விக்ரமின் மனம் அஜய்யின் இந்த வார்த்தைகளை ஏற்றுக் கொள்ள மறுத்தது.. அவன் செவிகளில் தேம்ஸ் நதியின் மீது படகில் நின்றிருந்த போது கேட்ட பாடல் வரிகள் ஒலித்தன..

**"நீராட நதியா இல்லை..**

**நிழல் தேட இடமா இல்லை..?**

**பசியாற உணவா இல்லை..?**

**பகிர்ந்துண்ண துணையா இல்லை..?"**

என்ன மாதிரியான பாடல் இது.. பாலைவனத்தில் சோலையைத் தந்து இளைப்பாற வா என்று அழைக்கும்

பாடல்.. தாகத்தினால் தொண்டை வறளத் தவித்துப் போயிருப்பவனின் வாயில் அமிர்தத்தை ஊற்றும் பாடல்.. எது உனக்கு இல்லை.. எல்லாமுமாக நான் இருக்கிறேன்.. வா என்று அழைக்கும் பாடல்..

**"எனக்காக வா - நான்..**

**உனக்காக வா.."**

அவனுக்காக பிறந்திருக்கும் ஒருத்தி அவனை இனம் கண்டு அழைத்ததைப் போல உணர்ந்தான் விக்ரம்.. அவள் யாரென்றுதான் தெரியவில்லை.. திகில் பிடித்ததைப் போல நின்று விட்ட விக்ரமை அஜய்தான் இழுத்துக் கொண்டு வந்து காரில் திணித்தான்.. அடுத்த ஒரு வார காலமும் விக்ரம் தினமும் தேம்ஸ் நதிக்கு போய் வந்தான்.. அவன் முதுகில் யாரோ ஒருவர் அவனைப் பார்த்துக் கொண்டிருக்கும் குறுகுறு உணர்வு துளைக்கும்.. வேகமாக திரும்பிப் பார்ப்பான்.. கூடியிருக்கும் கூட்டத்தில் யார் அவனைப் பார்ப்பது என்று கண்டு பிடிக்க முடியாது..

அன்று கேட்ட பாடலை அதன் பின் தேம்ஸ் நதியோரம் கேட்க முடியவில்லை என்பதினால் விக்ரம் அங்கே போவதை நிறுத்திக் கொண்டான்.. எப்போதாவது அஜய்யுடன் வெஸ்ட் மினிஸ்ட்டர் பாலத்துக்குப் போவான்.. அங்கே நடந்தபடி தேம்ஸ் நதியில் மிதக்கும் படகுகளைப் பார்ப்பான்.. மறுபக்கம்.. ஓங்கி நிற்கும் வெஸ்ட் மின்ஸ்ட்டர் மாளிகையை உற்று நோக்குவான்.. பெரிய கப்பல்கள் வரும்போது இரண்டாகப் பிளந்து வழி விடும் பாலத்தின் இந்தக் கோடியில் நின்று பெருமூச்சு விடுவான்..

அஜய் பயந்து போனான்.. ஒரு பாட்டு விக்ரமை இந்த அளவுக்குப் பித்தாக்கி விடும் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை..

"என்னடா இப்படி பார்க்க முடியாத பார்வதிக்காக தேவதாஸைப் போல ஆகிட்ட.."

"ம்ப்ச்.."

"இப்படிப் பண்ணாதே விக்ரம்.. நீ நீயாய் இல்லை.. அவ்வளவுதான் சொல்வேன்.."

"அந்தப் பாட்டுடா அஜய்.."

"எந்தப் பாட்டு..? அடிச்சேன்னா பாரு.. மோகினி பாடற பாட்டைப் போலவே இருந்துச்சு.."

அவனை 'வா' வென அழைத்த அந்த மோகினி யார்..? தேம்ஸ் நதி அவனுக்கு விடையளிக்கவே இல்லை.. நாள் போக்கில் விக்ரம் தேம்ஸ் நதிக்குப் போவதை நிறுத்தி விட்டான்.. அந்தப் பாடலை மட்டும் மறக்கவில்லை.. நீராட நதியா இல்லை என்று முடி கோதி மடி சாய்த்த பாடலை அந்த மாயமோகினி பாட இவன் கண்மூடிக் கேட்க ஆசை கொண்டான்.. நிறைவேறாத பல ஆசைகளில் அந்த ஆசையும் ஒன்றாக நிராசையுடன் அந்த ஆசையை மறந்தான்..

அடுத்த சில வாரங்களில் ஓர் விடுமுறை தினத்தில் அஜய்யும், விக்ரமும் ஊரைச் சுற்றியபோது ஹாலண்ட் பார்க்கிற்கு சென்றார்கள்.. விக்ரம் அந்தப் பார்க்கை விரும்பிச் சுற்றுவான்.. அவன் இயற்கையின் ரசிகன்.. அஜய்தான் மண்ணின் மைந்தனாகத் தோள்களைக் குலுக்கி 'உச்' கொட்டுவான்..

"கொடைக்கானலில பிறந்து வளர்ந்தவங்கடா நாம.. நம்ம ஊரில இல்லாத அழகா இங்கே இருக்கு..?"

"நம்ம ஊர் ஓர் அழகு.. இந்த ஊர் வேறு ஒரு அழகு.."

"என்னமோ போடா விக்ரம்.. எனக்கு ஒண்ணும் தோணல.."

"தோணலைன்னா விட்டிரு.."

"ஆஹா.. அதுக்கென்னடா விக்ரம்.. விட்டாப் போச்சு.. நான் இப்படி இந்த பெஞ்சில தாச்சுக்கிறேன்.. நீ பார்க்கைச் சுற்றிட்டு வா.. ஐஸ் ஹவுஸ் போகிறப்ப இந்தப்பக்கம் வா.. ஜாயின் பண்ணிக்கறேன்.."

"அப்ப மட்டும் ஏண்டா வர்ற..?"

"ஏன்னா நம்ம ஊருல குளிர் ஐஸ் மாதிரி இருக்கும்.. ஐஸ் ஹவுஸ் தனியா இல்லையில்ல.. அதான்.."

"அங்கே அத்தனை ஹவுஸும் ஐஸ் ஹவுஸ் மாதிரிதானேடா இருக்கும்.."

விக்ரம் சிரித்தபடி பிரிந்து நடந்தான்.. அஜய் சிமிண்ட் பெஞ்சில் சரிந்து அமர்ந்தான்.. வெள்ளை மயில்கள் சுற்றித் திரிந்ததை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்.. பார்க்கில் நிலவிய தனிமை அதன் சிறப்பம்சங்களில் ஒன்று என்ற நினைவோடு கையிலிருந்த செல்ஃபோனில் கவனத்தைத் திருப்பினான்..

பசுமையான காடுகளைக் கொண்டது ஹாலண்ட் பார்க்.. அதில் நடந்தால் கொடைக்கானலில் நடப்பதைப் போல உணர்வான் விக்ரம்.. அவனே கூறியதைப் போல இரண்டுமே வெவ்வேறு அழகுதான்.. வசந்த காலத்தில் அமேலியாப் பூக்கள் பூக்கும் ஹாலண்ட் பார்க் தங்க இலையுதிர் காலத்தில் பொன்னிற இலைகள் உதிர்ந்து ஹாலண்ந் பார்க்கின் காடுகள் பொன்னிறக் காடுகளாக மிளிரும் அது கோடைக்காலம்.. ரோஜாக்கள் பூத்துக் குழுங்கின..

சிரிக்கும் முயல்களையும் வெள்ளை மயில்களையும் பார்த்தபடி வெகுதூரம் நடந்து விட்டவன் இனித்

திரும்பலாம் என்று யோசித்த போதுதான் பாடல் ஒலித்தது.. அவனுக்குப் பரிச்சயமான பெண்குரல்..

**"மலர்மீது பனி தூங்க..**

**மரம்மீது கனி தூங்க..**

**மலைமீது முகில் தூங்க..**

**மடிமீது நீ தூங்க..**

**எனக்காக வா - நான்**

**உனக்காக வா.."**

விக்ரமின் உடலில் அதிர்வு இறங்கியது.. அவன் வேகமாக மரங்களுக்கு இடையே ஓடினான்.. எங்கே அவள் என்றே அவன் மனம் தேடியது.. தூரத்தில் கூட்டமாகப் போய் கொண்டிருந்த பெண்கள் கூட்டத்தில் ஒருத்தி அவனைத் திரும்பிப் பார்த்தாள்.. அதே பெண்.. அதே புருவங்களை உயர்த்துதல்.. விழிகளில் தெரியும் சிரிப்பு..

'இவள் தான்..'

விக்ரமுக்கு உறுதியாகத் தெரிந்து விட்டது.. அவன் அஜய்யை மறந்தவனாக அந்தப் பெண்களை பின் தொடர்ந்து அவர்கள் தங்கியிருந்த குடியிருப்பைக் கண்டறிந்து விட்டுத்தான் திரும்பினான்.. அவனுக்காக காத்திருந்த அஜய் ஃபோன் போட்டபோது இவன் மயக்கத்துடன் பதில் சொன்னான்..

# அத்தியாயம் 4

"டேய்.. எங்கேடா இருக்க..?"

"இங்கதாண்டா அஜய்.. அவ ஃப்ளாட்டுக்கு முன்னால.." விக்ரமின் பதில் கேட்டு அஜய்க்குத் தூக்கி வாரிப் போட்டது..

"ஃப்ளாட்டுக்கு முன்னாடியா..? ஹாலந்த் பார்க்கில தியேட்டர் இருக்கு.. தெரியும்.. பிளாட் எங்கேடா இருக்கு..?"

"நான் பார்க்கில இல்லடா மச்சான்.."

"ஆனா.. நான் பார்க்கில இருக்கேனேடா.."

"ஓ.. அப்படியா.."

விக்ரம் வெகு இயல்பாக போட்ட 'ஓ'வில் அஜய்க்கு கொலைவெறி வந்தது.. நேரில் மட்டும் விக்ரம் இருந்திருக்க வேண்டும்.. நிச்சயமாக அவனது குரல் வளையை நெறித்திருப்பான்..

"அடேய்.. உனக்கு என்னடா ஆச்சு..? காட்டுக்குள்ள நடந்துட்டு வர்றேன்னுதான போன..?"

"ஆமாண்டா மச்சான்.."

"அப்புறம் எப்புடிடா ஏதோ ஒரு ஃப்ளாட்டு முன்னாடி நிற்கிற..?"

"என்னன்னு சொல்ல..?"

"என்னங்கிறதைச் சொல்லித் தொலை.."

"நான் காட்டுக்குள்ளே வாக் பண்ணிக்கிட்டு இருந்தப்ப அந்தப் பாட்டுக் கேட்டுச்சுடா.."

'போச்சுடா..'

அஜய் தலையில் அடித்துக் கொண்டதை வேடிக்கை பார்த்த வாத்துக்கூட்டம் தங்களுக்குள் பேசிக் கொள்வதைப் போல ஒரிடத்தில் குவிந்தன.. ரகசியம் பேசி முடித்தவுடன் சிரித்தபடி கலைந்து ஓடுவதைப் போல பிரிந்து ஓடின..

"எங்கேயிருந்துடா உனக்கு இந்தப் பித்துப் பிடிச்சது..?"

"தேம்ஸ் நதியில இருந்துடா.."

"உன் லெவலுக்கு நீ இப்படி பிஹேவ் பண்ணக் கூடாதுடா விக்ரம்.."

"காதலில் லெவலாவது ஒண்ணாவது.."

"காதல்ன்னே முடிவு பண்ணிட்டயா..?"

"மனசுக்குள்ள குயில் கூவுதுடா மச்சான்.."

"அங்கேயும் குயில்தான் கூவனுமா..?"

"பாட்டைக் கேட்டதும் யார் பாடறதுன்னு நான் தேடினேன் அஜய்.."

"நீ தேடலைன்னாத்தான் ஆச்சரியம்.."

"அதே பெண்கள்டா.."

"அதே கண்கள்ன்னு கேள்விப் பட்டிருக்கேன்.. இங்கே அதே பெண்களா..?"

"அந்தக் கூட்டத்தில அவ இருந்தாடா.."

"எவ..?"

"அந்தப் பெண்தான்.."

"எந்தப் பெண்தான்டா..?"

"உனக்குப் ஃபோனில் விளக்கம் சொல்ல முடியாது.."

"எனக்கும் விளக்கம் கேட்கணும்னு நேர்த்திக்கடன் இல்லை.. மனசிலாயி.."

இப்படியாகத்தானே அந்தக் கடுப்படிக்கும் உரையாடல் நீண்டு அஜய்யை வெகுவாக சோதித்து வைத்தது.. நண்பன் என்றும் பாராமல் கடுப்பான கடுப்பை அடித்துவிட்டுக் கட்டக் கடைசியில் விக்ரம்..

"சரிசரி.. நம்ம ஃப்ளாட்டுக்கு வந்து சேரு.." என்று திருவாய் மலர்ந்தருளினான்..

"வராம பார்க்கிலேயேவா இருக்கப் போறேன்..?"

"நீ இருக்கணும்னு நினைச்சாலும் இருக்க விடமாட்டாங்கடா மச்சான்.. ஈவினிங்கோட விசிட்டர்ஸ் டைம் முடிஞ்சிரும்.."

"உன் கூட லண்டனுக்குப் படிக்க வந்த கொடுமைக்கு எப்படியெல்லாம் பேச்சுக் கேட்க வேண்டியிருக்கு பார்.."

கோபத்துடன் அவனும் விக்ரமும் தங்கியிருந்த அபார்ட்மெண்டிற்கு வந்த அஜய் விக்ரமிடம் முகம் கொடுத்துப் பேசவில்லை.. அதை கண்டு கொள்ளாமல் தன் செல்ஃபோனில் இருந்த புகைப்படங்களை மயக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் விக்ரம்.. பொறுக்க மாட்டாமல் எட்டிப் பார்த்த அஜய் வெடித்தான்.

"அப்படி அவ மூஞ்சியில என்னடா இருக்கு..?"

"இவ மனசில இருக்கிற ரசனை இருக்குடா..?"

"ரசனையா..?"

உற்றுப் பார்த்த அஜய்க்கு ஒரு மண்ணும் தெரியவில்லை.. அதைச் சொன்னால் நண்பன் அடிக்க வந்து விடுவான் என்பதினால் வாயடக்கித் தப்பித்தான்..

தினமும் அதுபோல வாயடக்கித் தப்பிக்க முடியவில்லை.. ஒருநாள் நண்பன் செல்ஃபோனை உற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த போது.. இவனும் எட்டிப் பார்த்து விட்டு..

"ஓவர் மேக்கப்புடா விக்ரம்.." என்று வாய் விட்டு விட்டு மாத்து வாங்கினான்..

"எப்படிடா அவளை நீ இப்படிச் சொல்லலாம்..?"

"உனக்கே இது தெரிஞ்சிருக்கணும்டா விக்ரம்.. இவ மேக் அப்பைக் கலைச்சான்னு வைய்யி.. பார்க்கச் சகிக்காது.."

விக்ரமுக்கும் அப்படித்தான் தோன்றியது.. ஆராய்ச்சியாகப் பார்த்தவனின் செவிகளில் நீராட நதியா இல்லை என்ற பாடல் வரி ஒலித்தது.. அவனது விழிகள் செருகின..

'எப்பேர்பட்ட வாய்ஸ் அது.. மனதை மயக்கி இழுக்கும் மதுர கானம்.. இவ முகம்தான் ஓவர் மேக் அப்.. மனசு..! அது ரசனைகளால் தளும்புவது..'

அப்புறம் என்ன..? விக்ரம் அந்தப் பெண்ணை விடாமல் பின் தொடர்ந்தான்.. அவள் மும்பையைச் சேர்ந்த மாடல் என்பதைக் கண்டறிந்தான்.. ஒரு விளம்பரப் படப் பிடிப்புக்காக லண்டன் வந்திருக்கிறாளாம்.. படப்பிடிப்புக் குழுவினரோடு ஊர்

சுற்றினாளாம்.. அந்த விளம்பரக் கம்பெனிக்குச் சொந்தமான ஃப்ளாட்டில்தான் படப்பிடிப்புக் குழுவினர் தங்கியிருக்கிறார்களாம்..

"நாலைந்து அட்வெர்டைஸ்மெண்ட்ஸை ஷூட் பண்ணனுமாம்.. எல்லாத்திலயும் இவ இல்லையாம்.. இரண்டில் மட்டும்தான் இருக்கிறாளாம்.. ஷூட் முடிய டூ மன்த்ஸாகுமாம்.. அதுவரை இங்கேதான் இருப்பாளாம்.."

அவள் பெயர் 'ரூபா..' என்று சொன்னான் விக்ரம்.. அவன் அவளைத் துரத்த வேண்டிய தேவையில்லாமல் வெகு எளிதாக அவன் வசப்பட்டாள் ரூபா.. ஓரிரு நாட்களிலேயே விக்ரமின் அபார்ட்மெண்டுக்கே வரும் அளவிற்கு நெருக்கமானாள்.. அவளது எதற்கும் தயார் அசைவுகளில் அஜய்யின் மனதில் மரியாதை தோன்ற வில்லை.. விக்ரமுடன் ஊர் சுற்றிப் பார்ப்பதைவிட அபார்ட்மெண்டில் தனித்திருப்பதையே விரும்பினாள்..

"இந்த ஃப்ளாட்டுக்கு ரெண்ட் என்னன்னு கேட்டா அஜய்.."

விக்ரம் சொன்னபோது அதை இயல்பான கேள்வியென்று அஜய்யால் புறம் தள்ளிக்கடந்து செல்ல முடியவில்லை.. ஏனென்றால் அது விக்ரமின் பெயரில் வாங்கப்பட்டிருக்கும் சொந்த அபார்ட்மெண்ட்.. அஜய்க்கும் அது போன்ற ஓர் அபார்ட்மெண்ட் லண்டனில் இருந்தது.. அவன் நண்பனுடன் தங்க விரும்பி இங்கே இருந்தான்..

"நீ என்ன சொன்ன..?"

"சொந்த அபார்ட்மெண்டுன்னு சொன்னேன்.. ஈஸிட்டுன்னு அவ கண்ணை விரிச்சு என்னைக் கட்டிப் பிடிச்சுக்கிட்டது குழந்தைத்தனமா இருந்ததுடா.."

'குழந்தைத்தனமா..? சாகசத்தனம்..'

அஜய்க்குக் கவலையாக இருந்தது.. நண்பனின் குடும்ப கௌரவமும், பாரம்பர்யமும் குலைந்து விடுமோ என்று அவன் அஞ்சினான்.. அந்த ரூபாவின் மீது சுட்டுப் போட்டாலும் அவனுக்கு நல்ல அபிப்ராயம் வந்து தொலைக்கவில்லை..

"அவ பார்வையும், பேச்சும்.. சேச்சே.. உன் அண்ணனுக்கு ஏண்டி இப்படியொரு மட்டமான ரசனை வந்து தொலைச்சது..?"

வீணாவிடம் ஃபோனில் புலம்புவான்.. அப்போது வீணா கல்லூரியில் இரண்டாம் ஆண்டில் படித்துக் கொண்டிருந்தாள்.. அஜய், விக்ரமை விட ஆறு வயது சிறியவள்.. லண்டனுக்குக் கிளம்புவதற்கு முன்னால் அஜய் அவளிடம் தன் காதலைக் கூறியிருந்தான்.. அவன் லண்டனுக்குச் சென்ற பின்னால் ஃபோனில் அவனுடைய காதலை அங்கீகரித்து ஏற்றுக் கொண்டாள் வீணா..

"ஒரு வேளை உண்மையிலேயே அவ நல்லவள்தானோ என்னவோ.."

"சான்ஸே இல்லை வீணா.. அவளும் அவ மூஞ்சியும்.. நான் சேலன்ஜ் வைக்கிறேன்.."

"அண்ணனுக்கு அவளைப் பிடிச்சிருந்தா நாம என்ன செய்ய முடியும்..?"

"எனக்கென்னவோ அவ, உன் அண்ணனுக்காகப் பழகலை.. இந்த அபாட்மெண்டுக்காகத்தான் பழகறான்னு தோணுதுடி.."

எந்த நேரத்தில் அஜய் இதைச் சொன்னானோ.. அன்று மாலையே விக்ரம் அதைச் சொன்னான்..

"இன்னைக்கு ஒண்ணு நடந்துச்சு அஜய்.."

'இவன் என்ன குண்டைத் தூக்கிப் போடப் போறானோ..' கலவரமானான் அஜய்..

"என்னத்தைடா நடந்தது..?"

"ரூபா என்னிடம் லிமிட்டைக் கிராஸ் பண்ணப் பார்த்தா.." நாசுக்காகச் சொன்னான் விக்ரம்..

'அப்பாடி.. எதுவும் நடக்கலை போல..' நிம்மதியானான் அஜய்..

"நான் அது கூடாதுன்னு சொன்னேன்.. ஏன்னு கொஞ்சினா.. ஹஸ்பெண்ட் அண்ட் வொய்ஃபா ஆகாம லிமிட்டைக் கிராஸ் பண்ண எனக்குப் பிடிக்காதுன்னு சொன்னேன்.. அதுக்கு அவ லிமிட்டைக் கிராஸ்

பண்ணினா ஹஸ்பெண்ட் அண்ட் வொய்ஃப்தா னேங்கிறா.."

'என்ன பெண் இவ..' அஜய்க்கு சள்ளையாக இருந்தது..

"அதுக்கென்ன அவசரம்ன்னு கேட்டா.. அப்போதுதானே இந்த அபாட்மெண்டை என் பெயருக்கு ரெஜிஸ்ட்டர் பண்ணிக் கொடுப்பீங்கன்னு சொல்றாடா.."

'இப்போதாவது இவனுக்கு அவளோட நோக்கம் புரிஞ்சுச்சே..'

அஜய்யின் கணக்குப் பொய்யானது.. விக்ரமுக்கு ரூபாவின் நோக்கம் புரியவே இல்லை..

"இந்தியாவில் எனக்குக் கோடிக் கணக்கில் சொத்து இருக்குன்னு தெரியாம இந்த அபார்ட்மெண்டை மட்டும் வைத்து என்னைக் காதலிக்கிறாளே.. ஷி இஸ் ஸோ நைஸ்டா அஜய்.." என்றான் விக்ரம்..

இந்தியாவில் இருக்கும் சொத்துக்களைப் பற்றி விக்ரம் ரூபாவிடம் சொல்லித் தொலைக்காமல் இருக்க

வேண்டுமே என்றிருந்தது அஜய்க்கு.. நல்ல வேளை.. விக்ரம் தன் பின்புலத்தைப் பற்றி ரூபாவிடம் மூச்சுக்கூட விடவில்லை..

"என்னை எனக்காகவே அவ காதலிக்கணும்டா.." என்று விழிகள் செறுகினான்..

உன்னை உனக்காகவே அவ காதலிக்கவில்லைடா.. மடையா..! லண்டனில் உனக்குச் சொந்தமாக இருக்கும் இந்த அபார்ட்மெண்டிற்காகத்தான் சுற்றிச் சுற்றி வருகிறாள் என்று மனதுக்குள் திட்டித் தீர்த்தான் அஜய்..

திருமணமாகாமல் ரூபாவின் பெயருக்கு அபார்ட்மெண்டை எழுதி வைக்க முடியாது என்று விக்ரம் கூறிவிட்டான்..

"உன்னை என் பேரண்ட்ஸ் தவறாக நினைத்து விடுவார்கள் டார்லிங்.." என்று ரூபாவிடம் கொஞ்சினான்..

அதில் ரூபா முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டாளாம்..

"குழந்தை மாதிரிக் கோவிச்சுக்கிறாடா.."

நண்பனிடம் மயக்கத்துடன் சொன்னான் விக்ரம்.. "அந்த குழந்தை அடுத்த இரு வாரங்களில் அவள் மாடலாக இருந்த விளம்பரக் கம்பெனியின் முதலாளிக்கு இரண்டாம் தாரமாக மாறி விட்டது.."

# அத்தியாயம் 5

"**எ**ன்னடா சொன்ன..?"

அஜய்யின் மீது பாய்ந்து தோள்களைப் பிடித்துக் குழுக்கினான் விக்ரம்.. அவனுடைய முடி கலைந்து, கண்கள் சிவந்து பார்ப்பதற்கே பயங்கரமாக ரௌத்ரத்துடன் இருந்தான்..

"நான் சொல்லலை.. இந்த பேப்பர் சொல்லுது.."

லண்டனில் வெளியாகும் ஆங்கில தினசரி அது.. முதல் பக்கத்தில் இந்தியாவிலிருந்து வந்திருக்கும் மும்பை தொழிலதிபர் அவரது கம்பெனியில் பணிபுரிந்த பிரபல மாடலை லண்டனில் திருமணம் செய்து கொண்ட செய்தி படத்துடன் வெளியாகியிருந்தது.

கன்னத்து சதைகள் தொங்க, தொப்பையுடன் நின்றிருந்த வயோதிகரின் கையுடன் கை கோர்த்துப் பல்வரிசை தெரிய சிரித்தபடி நின்றிருந்தாள் ரூபா..

விக்ரம் இடிந்து போனான்.. ரூபாவைத் தேடிச்சென்று நியாயம் கேட்ட போது அவள் அலட்சியமாகப் பதில் சொன்னாளாம்..

"டூ இயர்ஸா அகர்வாலை கரெக்ட் பண்ண டிரை பண்ணிக்கிட்டு இருந்தேன்.. மும்பையில் பெரிய பணக்காரர்.. வொய்ஃப் இல்லை.. இவரை வளைத்துப் போட்டா வாழ்நாள் முழுவதும் ஹை-டெக் லைஃபை வாழலாம்.. மனிதர் பிடி கொடுக்கவே இல்லை.. லண்டனில் வொர்க்-அவுட் ஆகுமான்னு பார்க்கத்தான் இங்கே வந்தேன்.. வந்த இடத்தில் உனக்குக் கம்பெனி கொடுத்தால் உன் அபார்ட்மெண்டை எழுதி வைப்பன்னு நினைத்தேன்.. நீ வழிக்கு வரலை.. ஆச்சரியத்திலும் ஆச்சரியமா இவர் வழிக்கு வந்துட்டார்.. இவரோட மனசு மாறுகிறதுக்குள்ள மேரேஜை முடிக்க வைச்சுட்டேன்.."

"அடிப்பாவி.. அதற்கு ஏண்டி காதல் நாடகம் ஆடின..?"

"காதலா..? நானா..? உன்னையா..? ஆஃப்டர் ஆல் லண்டனில் ஒரு அபார்ட்மெண்டுக்கு மட்டும் சொந்தக் காரன் நீ.. உன்னைக் காதலிக்க எனக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது..? காதல் என்கிறதெல்லாம் வேஸ்ட்.. சுத்த ஹம்பக் வெர்டு.."

இப்படிப் பேசுகிறவளா அப்படி ஒரு ரசனையுடன் கூடிய பாடலைப் பாடினாள்.. அனுபவதித்துப் பாடினாளே.. எப்படி..?

விக்ரம் வெறுத்துப் போனான்.. அவனை மாய்ந்து மாய்ந்து காதலித்த நீலக்கண் அழகி ஏஞ்சலினாவை ஒதுக்கினான்.. பெண்களிடமிருந்து விலகினான்.. இறுகின முகமும், கற்சிலை போன்ற தோற்றமுமாக மாறிப் போனான்.. அவனை பழைய நிலைக்குக் கொண்டு வர வீணாவும் அஜய்யும் பாடாய் பட்டார்கள்.. முடியவில்லை..

லண்டனில் இருந்த மூன்று வருஷங்களும் விக்ரம் விக்ரமாக இல்லையென்று அஜய் சொல்வான்.. வீணாவுக்கு அடிவயிறு பிசையும்.. குடும்பத்தினருக்கு

விக்ரமின் வாழ்வில் வந்து போன காதல் தோல்வியைப் பற்றி எதுவும் தெரியாது..

குடும்பத்தில் விக்ரமின் திருமணப்பேச்சை எடுத்தார்கள்.. அவன் வீணாவுக்குத் திருமணம் முடியட்டும் என்று சொல்லி விட்டான்.. வீணாவோ அண்ணனுக்குத் திருமணம் ஆகாமல் தன் திருமணம் நடக்காது என்று தடையுத்தரவும் போட்டாள்..

"இதுக்கும் அதுக்கும் என்ன சம்பந்தம்.." விக்ரம் தங்கையிடம் உறுமினான்..

"ஆயிரம் சம்பந்தம் இருக்கு.. நீ வேலையைப் பாரு.." கரறாக சொல்லி விட்டாள் வீணா..

அஜய்யும் காதலியுடன் முரசு கொட்டினான்..

"உன் தங்கையே ஓகே சொன்னாலும், நீ கல்யாணம் பண்ணிக்காம நான் அவ கழுத்தில் தாலியைக் கட்ட மாட்டேன் விக்ரம்.."

"அவ கழுத்தில தாலியைக் கட்டாம வேற எவ கழுத்திலடா தாலியைக் கட்டுவ..?"

"எவ கழுத்திலயும் கட்டமாட்டேன்.. வாழ்ந்தா வீணாவோடுதான் வாழ்வேன்.. எனக்கென்ன உனக்கு வாய்த்ததைப் போல ஓடிப் போகும் காதலியா வாய்த்திருக்கிறாள்..? உன்னதமான காதலி வாய்த்திருக்கி றாடா மச்சான்.."

"டேய்ய்.."

கண்கள் சிவக்க நண்பனின் சட்டைக் காலரைக் கொத்தாகப் பிடித்தான் விக்ரம்.. விலக யத்தனிக்காமல் தன்னை ஒப்புக் கொடுத்த அஜய்யின் செய்கையில் சட்டைக் காலரை விட்டு விட்டு..

"ஏண்டா இப்படிப் படுத்தற..?" என்று தவித்தான்..

"ஈஸி விக்ரம்.." நண்பனைக் கட்டிக் கொண்டு முதுகைத் தட்டிக் கொடுத்தான் அஜய்..

"எனக்குள்ளே கில்ட்டி கான்ஷியன்ஸைக் கொண்டு வருகிற அஜய்.."

"எதுக்கு உனக்கு கில்ட்டி வருது..?"

"உனக்கும் வீணாவுக்கும் இடையில் நான் தடைகல்லா இருக்கிறேனே.."

"ஏன் தடைகல்லா இருக்கிற..? கல்யாணம் பண்ணிக்கிட்டு விலகி வழி விடுன்னுதானே நானும் வீணாவும் சொல்கிறோம்.. விக்ரம்.. நீ தனிச்சு நிற்கிற அளவுக்கு அந்த ரூபா வொர்த் இல்லைடா.. டர்ட்டி வுமன்.. அவளுக்கு மட்டும் நீ கோடிஸ்வரன்னு தெரிந்திருக்கணும்.. உன்னிடம் ஆடிய காதல் நாடகத்தை கண்டினியூ பண்ணியிருப்பா.."

"ச்சீ.."

அருவெறுப்புடன் முகத்தைச் சுளித்தான் விக்ரம்.. அவனால் அதை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.. ரூபாவைப் பற்றிப் பின்னாளில் அவன் சேகரித்த விவரங்கள் குமட்டக் கூடியவையாக இருந்தன.. இளம் வயதிலேயே பணத்துக்காக தடம் மாறி விட்டவளாம்.. மும்பையில் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ள அவள் பணக்கார்களுக்கு கம்பெனியனாக இருக்க ஆரம்பித்தாளாம்.. லண்டனில்

விக்ரமிற்கு வலை வீசியதும் அதற்காகத்தானாம்.. பணம் மட்டுமே கிடைக்கும் என்று நினைத்திருந்தவள் அவனுக்கு லண்டனில் சொந்தமாக அபார்ட்மெண்ட் இருக்கிறது என்று தெரிந்ததும் காதல் நாடகம் ஆட ஆரம்பித்து விட்டாளாம்.. இவற்றையெல்லாம் கேள்விப்பட்டதும் விக்ரம் தூக்கமிழந்தான்.. இப்படியும் ஒருத்தி இருப்பாளா என்பது ஒருபக்கம்.. அவளது சாகசத்தைக் கண்டுணர முடியாத முட்டாளாக அவன் இருந்து விட்டானே என்ற தன்னிரக்கம் மறுபக்கம்.. விக்ரம் வேறு மனநிலைக்கு மாறிப் போனான்.. அவனை மீட்டெடுக்க அஜய்யும் வீணாவும் போராடிக் கொண்டிருந்தார்கள்..

"அவ பேச்சைப் பேசாதே அஜய்.."

"உனக்கே பிடிக்கலைங்கிறப்ப நான் ஏன்டா பேசப் போறேன்..? கல்யாணத்தை ஏன் அவாய்டு பண்ற..?"

விக்ரமுக்கு பதில் சொல்லத் தெரியவில்லை.. அவன் மனது இறுகி விட்டது.. பெண்களைக் கண்டாலே வெறுப்பு வருகிறது என்பதை எப்படி நண்பனிடம்

சொல்வான்..? சொன்னால் உன் தங்கையும், தாயும் பெண்கள்தானே என்று கிளாஸ் எடுப்பான்..

"வேலையைப் பாருடா.." என்று நகர்ந்து விட்டான்..

என் வேலை இதுதான் என்பதைப் போல தினமும் வேப்பிலை அடித்துக் கொண்டிருந்தான் அஜய்.. மலையிறங்குவேனா என்று அடம் பிடித்துக் கொண்டிருந்த விக்ரம்..

அது ஒரு நூதனமான கயிறு இழுக்கும் போராட்டமாக இருந்தது.. விக்ரமின் உணர்வுகளைக் காயப் படுத்தாமல் அவனை மீட்டெடுக்க வேண்டும்.. விக்ரமிற்கும் அதே பிரச்னைதான்.. நண்பனின் மனதைப் புண்படுத்தாமல் மறுப்பைச் சொல்ல வேண்டும்..

கொடைக்கானல் மலைக்கே உரிய இயற்கையழகை சிதைக்காமல் அதன் போக்கில் கட்டப்பட்ட பங்களாவின் கேட் திறக்கப்பட்டது.. விக்ரமின் ஜீப் உள்ளே விரைந்தது.. பெரிய போர்டிகோவில் நான்கு கார்கள் நின்றிருந்தன.. அவற்றுக்கு ஊடே நின்றிருந்த புதிய காரில் விக்ரம் புருவங்களை உயர்த்தினான்..

"யார் வந்திருக்காங்க.. உன் வீட்டில இருந்து அங்கிளும் ஆண்ட்டியும் வந்திருக்கிறாங்களோ..?"

"என் வீட்டுக் கார்களைப் பற்றி உனக்குத் தெரியாதா..? புதுக்கார் வாங்கியிருந்தா உன்னிடம் சொல்லாமல் இருப்பேனா..? வேற யாரோ வந்திருக்காங்க போல விக்ரம்.."

அந்த யாரோ அழகான கண்களும், தீர்க்கமான நாசியும், வட்ட வடிவ முகமும், அடர்ந்த கரிய கூந்தலுமாக அப்சரஸ் போல வீணாவின் பக்கத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தது.. சக்கரங்களைக் கொண்ட பெரிய பெட்டிகள் ஹாலில் இருந்தன.. ஆகாய நீலத்தில் ஜீன்ஸும் வெள்ளை நிறக் காட்டன் சட்டையுமாக அவள் ஸ்வாதீனமான ஸ்டைலுடன் இருந்தாள்.. காபிக் கொட்டை வண்ணத்தில் ஸ்வெட்டர் அவள் மடியில் கிடந்தது..

"பொமரேனியன் டாக்கை மடியில் போட்டுக்கிட்டு உட்கார்ந்திருக்கிறதைப் போல ஸ்வெட்டரை மடியில

போட்டுக்கிட்டு இருக்கா பாரேன்.." ஸ்வராஸ்யமாக அவளை பார்வையிட்டபடி சொன்னான் அஜய்..

விக்ரம் முறைத்ததும் அவசரமாகத் திரும்பிக் கொண்டவன்..

"ஹாய் வீணா.." என்று கையசைத்தான்..

திரும்பிய வீணா அஜய்யை கண்டு கொள்ளாமல்..

"வா அண்ணா.." என்றாள்..

"உன் அண்ணனோடு நானும் இருக்கேன்.." வீணாவைப் பார்க்காமல் அந்த ஜீன்ஸ் சுந்தரியைப் பார்த்தபடி சொன்னான் அஜய்..

"அதுக்கென்ன இப்ப..?" பல்லைக் கடித்தபடி அஜய்யை பார்வையால் எச்சரித்தாள் வீணா..

'படவா.. நான் பக்கத்தில் இருக்கிற போதே இன்னொரு பெண்ணை சைட்டா அடிக்கிற..? இருக்குடா உனக்கு..'

அஜய்யின் மனதில் அலாரம் அடித்தது..

'ஆஹா.. இவ பார்வையே சரியில்லையே.. தனியா அகப்பட்டா மொத்தி எடுத்திருவாளே..'

வீணாவை மட்டும் பார்த்து 'ஹி..ஹி..' என வழிந்தான்.. அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..

"உட்காரு அண்ணா.." புதிதாக வீட்டுக்கு வந்திருக்கிறவனை உபசரிப்பதைப் போல உபசரித்தாள் வீணா..

"உட்காரவா..?" எதிரில் இருந்த பெண்ணை எட்டிக்காயைப் பார்ப்பதைப் போல பார்த்தபடி சொன்னான் விக்ரம்..

அந்தப் பெண்ணின் விழிகளில் வழிதல் இல்லை.. கண்டிப்பான பார்வையைப் பெண்களும் பார்க்கக்கூடும் என்று அன்றுதான் அறிந்தான் விக்ரம்.. பிஸ்கெட் கலர் ஜீன்ஸூம் அடர் நீலத்தில் காட்டன் முழுக்கை சட்டையுமாக இருந்தவன் சட்டையின் கைப்பகுதியை முழங்கை வரை மடித்து விட்டிருந்ததை அந்தப் பெண் கவனித்தாள்..

'சைட் அடிக்கிறாளோ..' அஜய் சம்சயம் கொண்டான்..

அப்படித் தெரியவில்லை.. கூர்மையான அளவிடும் பார்வை.. அதற்கு மேல் எதுவுமில்லை என்பதைப் போலத் திரும்பி வீணாவிடம் பேச்சுக் கொடுத்தபாங்கு..

விக்ரம் யோசனையுடன் அங்கே உட்கார்ந்து விட்டான்..

'பார்டா..' அஜய்க்கு ஆச்சரியமாகி விட்டது..

விக்ரம் ஒரு பெண்ணின் முன்னால் அடங்கி உட்காருகிறானா..? இது உலகமகா அதிசயம் அல்லவா..

அதுதான் சாக்கென்று அவனும் நண்பனின் பக்கத்தில் உட்கார்ந்து விட்டான்..

"வீட்டில யாரையும் காணோமே.." விக்ரம் சுற்று முற்றும் பார்த்தான்..

"ஏன்.. என்னையும், இவங்களையும் பார்த்தா உனக்கு ஆளாத் தெரியலையா..?" வீணா கேட்டாள்..

விக்ரம் கல்லையும் மண்ணையும் பார்ப்பதைப் போல தங்கையின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த பெண்ணைப் பார்த்தான்.. அவளோ அவனைவிட அலட்சியமாக அவனைப் பார்த்து வைத்தாள்.. அஜய்யின் மனதில் அடுத்த 'பாருடா..' வந்தது..

அவளை எந்த வகையில் சேர்ப்பது என்று விக்ரமுக்குப் புரியவில்லை.. கம்பீரமாக அதே சமயம் பெண்மையின் நளினத்தோடு இருந்தாள்.. நேர்கொண்ட பார்வை பார்த்தாள்.. கண்டிப்பான அதே சமயம் மனதைக் கவரும் பார்வை.. அசாத்தியமான தன்னம்பிக்கை.. அதீத அழகு.. கதை சொல்லும் கண்கள்..

'யார் இவள்..?'

# அத்தியாயம் 6

**அ**வளது கண்கள் சொல்லிய கதை என்ன..? விடுகதையா..? சிறுகதையா..? இல்லை தொடர் கதையா..?

அடர்ந்த இமைகளுக்கு அடியில் பேசிய விழிகள் சொல்லிய காவியம்தான் என்ன..?

விக்ரமின் புருவங்கள் சுருங்கியதை வியப்புடன் பார்த்தான் அஜய்.. ரூபாவுடனான கானல் நீர் காதல்(?) விவகாரத்திற்குப் பின் விக்ரம் எந்தப் பெண்ணையும் ஓர் நொடிக்கு மேல் பார்த்ததில்லை.. ஆராய்ச்சியாக ஓர் பெண்ணை நண்பன் பார்ப்பதை அதிசயமாகப் பார்த்தான் அஜய்..

'இது விக்ரமா..?'

அஜய்யின் பார்வையும் வீணாவின் பார்வையும் சந்தித்து சங்கேத மொழியில் பேசிப் பிரிந்தன..

"அப்பாம்மா, தாத்தா பாட்டின்னு யாருமே இல்லாம நீ மட்டும் உட்கார்ந்திருக்கயே.. அவங்கள்ளாம் எங்கே..?"

"நான் மட்டும் உட்காரலை.. கூட கல்யாணியும் உட்கார்ந்திருக்கிறாளே.. உன் கண்ணுக்குத் தெரியலையா..?"

வீணா பக்கத்திலிருந்த பெண்ணைக் கட்டிக் கொண்டாள்.. அவள் காட்டிய அன்யோன்யத்தில் வந்திருப்பவள் வீணாவுடன் படித்த சிநேகிதியாக இருப்பாளோ என்று யோசித்தான் விக்ரம்..

கல்யாணி என்ற பெயருக்கும் அவள் போட்டிருந்த ஜீன்ஸ், சர்ட்டுக்கும் பொருந்தாததில்..

"கல்யாணியா..?" என்றபடி அவளை மேலும் கீழும் பார்த்து வைத்தான்.

அவன் பார்வையைக் கண்டவள் கையிலிருந்த கூலிங் கிளாஸை மாட்டிக் கொண்டு கெத்தாக கால் மீது கால் போட்டு அமர்ந்தாள்..

'இருக்கிற அலப்பறை பத்தாதுன்னு இது வேறா..?'

"வொய்..? என் பெயர் கல்யாணியாக இருப்பதில் உன் அண்ணனுக்கு என்ன அப்ஜெக்ஷன் வீணா..?" விக்ரமைப் பார்வையிட்டபடி கேள்விக் கணையைத் தொடுத்தாள் கல்யாணி..

"சொல் அண்ணா.." வீணா தூண்டினாள்..

"ஜீன்ஸ் போட்டக் கல்யாணியை இப்பத்தான் பார்க்கிறேன்.." விக்ரம் உதட்டை வளைத்தான்.

"குதிரையில் வராமல் ஜீப்பில் வரும் விக்ரமாதித்தனை நானும் இப்போதுதான் நேரில் பார்க்கிறேன்.." கல்யாணி விக்ரமைப் போலவே உதட்டை வளைத்தாள்..

'அட..' விக்ரமின் கண்களில் பாராட்டு வந்தது..

"கல்யாணி எப்பவும் கையில் வீணையைத்தான் வைத்துக்கணும்னு இல்லை.. கூலிங் கிளாஸையும் வைத்துக்கலாம்.." கூலிங் கிளாஸ் இப்போது கல்யாணியின் கையில் வந்து சுழன்றது.

'போட்டுத் தாக்கறாளே..' அஜய் சுவராஸ்யமாக கல்யாணியை பார்வையிட்டான்..

'கொன்னுருவேண்டா ராஸ்கல்.. பக்கத்தில் நானிருக்க இன்னொரு பெண்ணையா சைட் அடிக்கிற..?' வீணா ஒற்றை விரலை உயர்த்தி அஜய்யை பார்வையாலே எச்சரித்தாள்..

'ச்சும்மாடி..' அஜய் சைகை செய்தான்..

"பார்த்துப்பிடி.." யமுனாவின் சப்தம் கேட்டது..

விக்ரம் ஆவலுடன் திரும்பிப் பார்த்தான்.. அவர்கள் வீட்டில் வேலை செய்யும் வேலைக்காரப் பெண் சித்ரா கையில் ஒரு டிரேயுடன் வந்துகொண்டிருக்க, அவளது இரு பக்கமும், யமுனாவும், ஜெகந்நாதனும் வந்து கொண்டிருந்தார்கள்..

'தாத்தாவும் பாட்டியும் ஏன் இப்படி வர்றாங்க..?'

விக்ரம் கேள்வியுடன் தங்கையைப் பார்த்தான்.. வீணா மெல்லச் சிரித்தாள்..

"கல்யாணி ஃபாரினிலிருந்து வந்திருக்கிறாள்ல.. அவளுக்கு நம்ம ஊர் டிஃபன், காபியைச் செய்யச் சொல்லி கொண்டு வர்றாங்களாம்.."

'இவ ஃபாரினிலிருந்து வந்திருக்கிறாளா..?' அவளது தோற்றத்தை மறுபடியும் எடை போட்டான் விக்ரம்..

அவளும் மறுபடியும் அவன் பார்வையை சந்தித்தாள்.. அதே கண்கள்.. அதே பார்வை..

அவளது பார்வை அவனை சுண்டியிழுத்து ஏதோ ஓர் மாய உலகுக்குள் தள்ளுவதைப் போல இருந்ததில் விக்ரமின் உடல் சிலிர்த்தது.. அது புதியதொரு அனுபவமாக அவனுக்கு இருந்தது..

"எனக்கென்னவோ சித்ராவைப் பெண் பார்க்க வந்திருக்கிறதைப் போலவே இருக்கு.."

சித்ராவைக் கைத்தாங்கலாக அழைத்து வருவதைப் போல இரு பக்கமும் அணைவு கொடுத்து வந்த தாத்தா, பாட்டியைப் பார்த்தபடி சொன்னான்..

"ஐயா.." சித்ரா அலறிவிட்டாள்..

திருமணமாகி இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகியிருப்பவள் அவள்.. கணவன் முரடன்.. சட்டெனக் கைநீட்டி விடுவான்..

"அண்ணா.." வீணாவும் கோபம் கொண்டாள்..

"சித்ராவைப் பெண் பார்க்கிற மாப்பிள்ளை யார்..? நீயா இல்லை உன் ஃபிரண்டா..?"

"என்னையேன் இதில் இழுக்கற வீணா..? நான் வாயைத் திறந்து ஒர் வார்த்தை பேசியிருப்பேனா..? சொன்னதெல்லாம் உன் அண்ணன்.. இவனைக் கேளு.." அஜய் கழன்று கொண்டான்..

"இவன் ஒருத்தன்.. பேசவே மாட்டான்.. உர்ருன்னு இருப்பான்.. வாயைத் திறந்தா வெடியைக் கொளுத்திப் போட்டிருவான்.." கல்யாணியிடம் புன்னகை செய்தபடி பேரனின் முதுகில் செல்லமாக ஒரு போடு போட்டாள் யமுனா.. அதை வெகு திருப்தியாக கல்யாணி பார்த்தாள்..

'நான் அடி வாங்கினா இவளுக்கு சந்தோஷமா இருக்கு..' விக்ரம் முதுகைத் தடவியபடி..

"இது விளையாட்டு அடி போல தெரியலையே.." என்றான்..

"நிஜமாத்தாண்டா மொத்தினேன்.. எதைப் பேசறத எதைப் பேசக் கூடாதுன்னு இல்லையா..? இப்படியா சித்ராவைக் கேலி பேசறது..?"

யமுனா பேரனுக்கு பதில் சொல்லியபடி கல்யாணிக்கு டிஃபன் தட்டை எடுத்து நீட்டினாள்..

"தேங்க்ஸ் பாட்டி.." தேனினும் இனிய குரலில் சொல்லியபடி டிஃபனை வாங்கிக் கொண்டாள் கல்யாணி..

"எங்களுக்கெல்லாம் டிஃபன் இல்லையா பாட்டி..?" மூச்சை இழுத்து விட்டு டிஃபனின் வாசனையைப் பிடித்தபடி கேட்டான் அஜய்..

"ஃபாரினிலிருந்து வந்தவர்களுக்கு பகிர்ந்துண்ணத் தெரியாது போல அஜய்.. வா.. நாம கிச்சனுக்குப் போய் கனகாவிடம் நியாயம் கேட்கலாம்.." கேலியாகச் சொன்னான் விக்ரம்..

"சித்ரா.. எல்லோருக்கும் காபி டிஃபன் கொண்டு வாம்மா.." யமுனா சோபாவில் உட்கார்ந்தாள்..

"எனக்கும் சேர்த்துக் கொண்டு வா.." ஜெகந்நாதன் குரல் கொடுத்து விட்டு யமுனாவின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார்..

"என்ன..? நீங்க ரெண்டு பேரும் இங்கே உட்கார்ந்துட்டிங்க.. சித்ராவைக் கைத்தாங்கலாக் கூப்பிட்டுக்கிட்டு வரப் போகலையா..?" கிண்டலாகக் கேட்டான் விக்ரம்..

"நமக்கெல்லாம் யூஷுவல் டிஃபன்.. கெஸ்ட்டுக்கு ஸ்பெஷல் எஃபெக்ட் டிஃபன்.." வீணா சிரித்தாள்..

தங்கையின் முகம் மலர்ந்திருப்பதைக் கவனித்தான் விக்ரம்.. வார்த்தைக்கு வார்த்தை அவள் சிரித்தாள்.. வெகுநாள் பழகிய தோழியிடம் ரகசியம் பேசுவதைப் போல வீணாவின் காதுகளில் ரகசியம் பேசினாள்..

வீணாவின் சந்தோஷத்தில் மனம் லயித்தான் விக்ரம்.. அவளை இத்தனை மகிழ்வாக வெகு நாள்களுக்குப் பிறகு பார்க்கிறான்.. விக்ரம் லண்டனிலிருந்து திரும்பி வந்ததில் இருந்து வீணா சிரிப்பைத் தொலைத்திருந்தாள..

மாடிப்படியில் பேச்சுச் சப்தம் கேட்டது.. ஜனார்த்தனமும் விமலாவும் தாழ்ந்த குரலில் எதையோ விவாதித்தபடி படியிறங்கி வந்து கொண்டிருந்தார்கள்..

"இவங்க என்னடா சீரியஸ் மோடில டிஸ்கஸ் பண்ணிக்கிட்டு வர்றாங்க..?" விக்ரம் அஜய்யிடம் வினவினான்..

"இந்தக் கொடைக்கானல் மலையை விலைக்கு வாங்கிடலாம்ன்னு டிஸைட் பண்ணியிருப்பாங்களோ.." அஜய் சந்தேகம் கேட்டான்..

வீணாவுக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது.. வாயைப் பொத்திக் கொண்டு சிரித்தாள்.. அன்று என்னவோ அவள் சிரிக்கக் காரணம் தேடிக் கொண்டிருந்ததைப் போல இருந்தது.. விக்ரமின் மனம் கனிந்தது..

"இவன் சொன்ன மொக்கையை எல்லாம் ஜோக்குன்னு எடுத்துக்கிட்டு சிரிக்கிற பாரு.. எங்கேயோ போயிட்ட வீணா நீ.." தங்கையிடம் சொன்னான்..

"சும்மாயிரு அண்ணா.. நீ வேற சிரிப்பை மூட்டாதே.." வீணாவுக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை..

"உன் அண்ணன் சான்ஸ் கிடைச்சதுன்னு என்னை கலாய்க்கிறான்.. நீ அதை ரசிச்சுச் சிரித்து என்கரேஜ் பண்ற.." அஜய் குற்றம் சாட்டினான்..

"வீணா.. உன் ரூமுக்குப் பக்கத்து ரூமையே கல்யாணிக்கு ரெடி பண்ணியாச்சு.." விமலா 'உஸ்ஸ் அப்பாடா..' என்ற பாவனையுடன் உட்கார்ந்தாள்..

"உனக்கு ஓகேதானேம்மா..?" ஜனார்த்தனம் கல்யாணியிடம் அபிப்ராயம் கேட்டார்..

இது தன் தகப்பனார்தானா என்று அடையாளம் பார்ப்பதைப் போல விசித்திரமாகத் தந்தையைப் பார்த்த விக்ரம் நண்பனைப் பார்த்தான்..

"இவங்க கொடைக்கானல் மலையை வாங்கறதைப் போல டிஸ்கஸ் பண்ணிக்கிட்டு வந்தது இதைப் பத்தித்தானா..? விக்ரம்.. இந்த கல்யாணி என்ன இங்கிலாந்து மகாராணியா..?" அஜய் முணுமுணுத்தான்..

"ஸேம் டவுட்தான் எனக்கும்.." என்றான் விக்ரம்..

இது போன்ற வேலைகளுக்கு எல்லாம் தாத்தா பாட்டியும், அப்பா அம்மாவும் மெனக்கெட மாட்டார்களே என்றிருந்தது விக்ரமிற்கு.. இருக்கும் இடத்தில் இருந்தபடி வேலையேவிப் பழகியவர்கள் அவர்கள் சொன்னதை விட பத்து மடங்கு அதிகமான பொறுப்புடன் வேலை செய்யும் வேலையாள்கள் மட்டுமே அந்த வீட்டில் நிலைத்திருக்க முடியும்..

'டிஃபன் காபியைச் செய்ன்னா ஒரு செகண்டில் செய்து முடிக்க சமையல்காரக் கனகா.. வீட்டு வேலையில எள்ளுன்னு சொன்னா எண்ணையா வந்து நிற்கும் வேலைக்காரச் சித்ரா.. இவங்க இருக்கிறப்ப தாத்தாவும் பாட்டியும், அம்மாவும் அப்பாவும், எதுக்காக ஸ்ட்ரெயின் பண்ணிக்கிறாங்க..?'

விக்ரம் கேள்வியுடன் கல்யாணியைப் பார்த்தான்,

'அஜய் சொன்னதைப் போல இவளென்ன இங்கிலாந்தின் மகாராணியா..?'

விக்ரமின் பார்வையைக் கவனிக்காமல் வீணாவிடம் எதையோ சொல்லிச் சிரித்துக் கொண்டிருந்தாள் கல்யாணி.. சிரிக்கும் போது அவளது முகம், அன்றுதான் பூத்த புதுமலரைப் போல வெகு அழகாக இருந்தது.. அவள் வீணாவிடம் காட்டும் ஒட்டுதல் விக்ரமின் மனதில் இதத்தைப் பரப்பியது..

"விக்ரம்.. நீ எப்போ வந்த..?"

"இப்போதாவது என்னை நோட் பண்ணினீங்களே டாட்.."

"அங்கிள்.. என் பெயர் அஜய்.. நானும் இங்கேதான் நிற்கிறேன்.."

"ஓ.. கமான் அஜய்.." உரக்கச் சிரித்தார் ஜனார்தனன்..

அஜய்யும் விக்ரமும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்..

"இப்போ எதுக்குடா உங்கப்பா வில்லன் சிரிப்புச் சிரிக்கிறார்..?"

"யாருக்குத் தெரியும்..?"

அசட்டையாக நண்பனுக்குப் பதிலளித்து விட்டு வந்திருக்கும் விருந்தாளிக்கு அது பற்றித் தெரியுமா என்பதைப் போல உற்றுப் பார்த்தான் விக்ரம்..

அவன் என்னவோ அவளை ஸ்வாஹா பண்ண முற்பட்டதைப் போல கல்யாணி கண்ணகியாக மாறி முறைத்தாள்..

# அத்தியாயம் 7

'**தே**வைதான் எனக்கு..'

பதிலுக்கு கல்யாணியை பலமாக முறைத்து விட்டு விக்ரம் மாடியேறப் போனான்..

"வாட் இஸ் திஸ் விக்ரம்..? நம் வீட்டுக்கு கல்யாணி வந்திருக்கிறா.. அவளை நான் இன்ட்ரொடுயூஸ் பண்ணி வைக்கிறதுக்குள்ள நீ உன் ரூமுக்குப் போனா என்ன அர்த்தம்..?" கன்டனம் தெரிவித்தார் ஜனார்த்தனம்..

'இது என்னடா ரோதனையாப் போச்சு..' அலுப்புடன் நண்பனைப் பார்த்துத் தோள்களைக் குலுக்கிய விக்ரம்..

"வந்திருக்கும் கல்யாணியிடம் இன்ட்ரொடுயூஸ் ஆகிக்கிறதில எனக்கு இண்ட்ரெஸ்ட் இல்லைன்ன அர்த்தம் டாட்.." என்றான்..

"இப்படிப் பேசக் கூடாது விக்ரம்.." இப்போது கண்டிப்புடன் பேசியது ஜெகந்நாதன்..

"நீங்களுமா தாத்தா..?"

"நானும்தான்.. கல்யாணியை யாருன்னு நினைச்ச..?"

"யாருன்னும் நினைக்கலை தாத்தா.. கல்யாணியைக் கல்யாணின்னு கூட நினைக்கலை.."

"இந்த விளையாட்டுப் பேச்சை நிறுத்தறியா..?"

"இது விளையாட்டுப் பேச்சா தாத்தா..? நான் சீரியஸாப் பேசறேன்.."

"கல்யாணி ஜனார்த்தனத்தோட நண்பனின் மகள்.. கல்யாணசுந்தரம் மதுரையில் பிறந்து மும்பையில் பிஸினெஸ் பண்ணப் போனான்.. இப்ப லண்டனில் செட்டிலாகிட்டான்.."

"ஹூ இஸ் தட் கல்யாணசுந்தரம்..?"

"நம்ம அபிராமியக் கல்யாணம் பண்ணிக்கிட்டவன்.."

"நம்ம அபிராமியா..? யார் அந்த அபிராமி..?"

"என் ஒன்று விட்ட தம்பிக்கு ரெண்டு விட்ட சகலையோட மூணுவிட்ட அண்ணன் பொண்ணு.."

ஜெகந்நாதன் தந்த விளக்கத்தில் விளக்கெண் ணையைக் குடித்தவன் போலான விக்ரம் அஜய்யைப்

பார்த்தான்.. அவன் 'மாட்டிக் கொண்டாயா..' என்ற பார்வையுடன் சுவராஸ்யமாக கன்னத்தில் கை வைத்து நண்பன் படும் அவஸ்தையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்..

"இப்ப என்னதான் சொல்ல வர்றீங்க..?"

"அபிராமி உன் அப்பனோட நண்பனின் மனைவி மட்டுமில்லை.. உன் அப்பனோட ஒன்று விட்ட தங்கை.. முறை புரியலைன்னா திரும்பவும் விளக்கமாச் சொல்றேன்.."

"நீங்க விளக்கின வரைக்கும் போதும்.. சும்மாவே நீங்க விளக்கெண்ணை போல வழுக்குவீங்க.. இப்பக் கேட்கவே வேணாம்.. அபிராமி என்கிறவர் உங்களுக்கு தூரத்து உறவு.. அவ்வளவுதானே அதை ஏன் இப்பச் சொல்கிறீங்க..?"

"அந்த அபிராமியின் மகளுக்கு நீ கொடுக்கிற இம்பார்ட்டன்ஸா இது..?"

"எங்கோ இருக்கிற அபிராமியின் டாட்டருக்கு நான் என்ன இம்பார்ட்டன்ஸைக் கொடுக்கிறது..?"

எரிச்சலுடன் கேட்டான் விக்ரம்.. அஜய்க்கு சிரிப்புச் சிரிப்பாக வந்தது.. ஒழுங்காகப் பேசினாலே விக்ரம் காதில் போட்டுக் கொள்ள மாட்டான்.. இந்த லட்சணத்தில் ஜெகந்நாதன் உறவு முறை விளக்கப் படத்தை வரைந்து தள்ளினால் புரிந்து கொள்வானா..?

"எங்கேயோ இருக்கும் அபிராமியின் மகளா..? என்னடா விக்ரம் இப்படி ஆகிட்ட..?"

"எப்படி ஆகிட்டேன்..? நான் நல்லாத்தானே இருக்கேன்..?"

"என்னத்தை இருக்கிற..? விடிய விடிய சீரியல் பார்த்துட்டு, விடிந்ததும் நாம் பார்த்த கேம்-ஷோவில யார் ஜெயிச்சான்னு கேட்கிற மாதிரி கேட்டு வைக்கறியே.."

'பார்த்தாயா இந்த ஓல்டு மேன் பண்ற லொள்ளை..'

நண்பனைப் பார்த்தான் விக்ரம்.. அதே ஸ்வராஸ்யமான பார்வையுடன் வேடிக்கை பார்த்தான் அஜய்..

'இருக்குடா உனக்கு..' பல்லைக் கடித்தபடி தாத்தாவின் பக்கம் திரும்பினான் விக்ரம்..

"வரவர ஓவரா கலாய்க்க ஆரம்பிச்சுட்டிங்க தாத்தா.."

"பின்னே என்னடா.. உன் கண் முன்னாடி இருக்கும் அபிராமியின் மகளை எங்கேயோ இருக்கிறான்னு சொன்னா கோபம் வராதா..?"

"கண் முன்னாடி இருக்காளா..?"

விக்ரம் சுற்றும் முற்றும் பார்த்து வைத்தான்.. ஜெகந்நாதன் கோபமாகி..

"இவன் தெரிஞ்சு செய்கிறானா.. இல்லை தெரியாமல் செய்கிறானா..?" என்று மகனிடம் சந்தேகம் கேட்டு வைத்தார்..

"முடியல.." வீணா தலையில் அடித்துக் கொண்டாள்..

அஜய் அதே ஸ்வராஸ்யம்.. அதே வேடிக்கை பார்த்தால் என்று இருந்தான்..

"டேய் விக்ரம்.. கல்யாணிதான் அபிராமியோட பொண்ணு.." விமலா சொன்னாள்..

"நல்லாச் சொல்லு.. கல்யாணுக்கு மட்டும் இது தெரியனும்.. அடுத்த ஃபிளைட்டில லண்டனுக்கு ரிட்டர்ன் ஆகணும்னு ஆர்டர் போட்டிருவான்.." ஜனார்த்தனம் சலித்துக் கொண்டார்..

"கல்யாணா..? கல்யாணியா..?" விக்ரமுக்குத் தலையைச் சுற்றியது..

அஜய்க்கும் அதே கதிதான் என்றாலும், தான் நேரடியாகச் சம்பந்தப்படவில்லை.. நண்பனின் பாடுதான் இது எல்லாமும் என்ற விடுதலையுணர்வுடன் வேடிக்கை பார்ப்பதைத் தொடர்ந்தான்..

"கல்யாணிதான் இங்க இருக்காளே.. இது கல்யாண்.." இது யமுனா..

"கண்ணுக்கு முன்னாடி இருக்கும் கல்யாணியையே இவன் யார்ன்னு கேட்கிறான்.. கல்யானைப் பற்றியா தெரிந்துக்கப் போகிறான்..? " இது ஜெகந்நாதன்..

"கல்யாண் என்னடான்னா உன்னைப் பற்றி இன்ச் பை இன்ச்சா தெரிஞ்சு வைச்சிருக்கிறான்.. நீ இப்படி இருக்கிற.." விமலா கோபித்தாள்..

"ஸோ.. கல்யாணி வேற.. கல்யாண் வேற.." விக்ரம் தன் ஆகப் பெரும் கண்டிப்பைக் கூறினான்..

'பாவம் மச்சான்.. இதைக் கண்டு பிடிக்கவே நாக்குத் தள்ளியிருக்கும்..' அஜய் அனுதாபப்பட்டான்..

"என்னடா இப்படிக் கேட்கிற..?"

"ஹூ இஸ் தட் கல்யாண் டாட்..?"

"இவ்வளவு நேரமும் ஹூ இஸ் தட் கல்யாண சுந்தரம்ன்னு கேட்டுக்கிட்டு இருந்த.. இப்பக் கல்யாணைக் கேட்கிற.."

"ஓ.. கல்யாண சுந்தரத்திற்கு ஷார்ட் நேம் கல்யாணா..?"

"அதுதான் இல்லை.. கல்யாண், கல்யாண சுந்தரத்தின் ஷார்ட் நேம் இல்லை.. ஸன்.. கல்யாணியின் அண்ணன்.."

'என்னடா இது..!'

வெறுத்துப் போனவனாக விக்ரம் அஜய்யைப் பார்க்க அவன் இது உன் பிரச்னைடா நண்பா என்று நமட்டுச் சிரிப்போடு பார்த்து வைத்தான்.. மறுபடியும் ஒரு

'இருக்குடா உனக்கு..' முறைப்பைப் பல்லைக் கடித்தபடி பார்த்துவிட்டு தந்தையிடம்..

"இப்ப என்னதான் சொல்ல வர்றீங்க..?" என்றான்..

"இன்னும் உனக்குப் புரியலையா..?" ஜெகந்நாதன் குதித்துக் கொண்டு விளக்கம் சொல்ல யத்தனிக்க..

"வேண்டாம் தாத்தா.." என்று கையெடுத்துக் கும்பிட்டுத் தடுத்தான்..

"அப்பாவோட ஃபிரண்ட் கல்யாண சுந்தரம் உங்களோட ஆறுவிட்ட தம்பி மகளை மேரேஜ் பண்ணி லண்டனில் செட்டிலாகியிருக்கார்.. அவருக்கு கல்யாண் அப்படின்னு ஒரு மகன்.. கல்யாணின்னு ஒரு மகள்.. அந்தக் கல்யாணிதான் இந்தக் கல்யாணி.. இவளை நான் நலம் விசாரிக்கலைன்னா லண்டனில் இருக்கும்

இவளோட அண்ணன் கோவிச்சுக்கிட்டு அடுத்த பிளைட்டைப் பிடித்துத் தொங்கிக்கிட்டே லண்டனுக்கு ரிட்டர்ன் ஆகச் சொல்லிருவான்.." மூச்சு விடாமல் ஒப்பித்து முடித்து விட்டு..

"போதுமா தாத்தா.." என்று கேட்டான்..

"போதும்டா போதும்.." சிரிப்பை அடக்கிக் கொண்டு சொன்னாள் யமுனா..

"தேங்க்ஸ் பாட்டி.." விக்ரம் ஆசுவாசமாக உட்கார்ந்து கல்யாணியைப் பார்த்தான்..

அவள் சலனமில்லாத முகத்துடன் இருந்தாள்..

"இங்கே இவ்வளவு நேரம் நடந்த அலப்பறைக்கும் உங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையில்ல..?" அடக்கி வைத்த ஆத்திரத்துடன் அவன் கேட்க..

"எனக்கென்ன சம்பந்தம்..?" என்று அமர்த்தலாக அவள் கேள்வி கேட்டாள்.

"ஓ..! வெல்கம் டு அவர் கொடைக்கானல்.."

"கொடைக்கானல் என்ன உங்களுக்கு மட்டும் சொந்தமா..?"

"கேட்டுக்கங்க தாத்தா.. நல விசாரிப்புக்கு உங்க தம்பி பேத்தி சொல்கிற பதிலை.. தேவைதான் எனக்கு.. இதுக்குத்தான் நான் பெண்களிடம் பேச்சே வைத்துக் கொள்கிறது இல்லை.."

"அப்படியா..? இப்ப உங்க பாட்டி, அம்மா, தங்கையிடம் எல்லாம் பேசினீங்களே.. இவங்க பெண்களாச்சே.."

கல்யாணி உடனடியாக மடக்கியதில் வீணா..

"கை கொடு.. கல்யாணி.. குட் பன்ச்.." என்று குதித்தாள்..

விக்ரம் இமைக்காமல் தங்கையைப் பார்த்ததில்..

காதுகள் இரண்டையும் பிடித்துக் கொண்டு..

"ஸாரி அண்ணா.." என்று கெஞ்சுதலாக முகத்தை வைத்துக் கொண்டாள்..

"பிழைத்துப் போ.." விக்ரம் மாடியேறி விட்டான்..

"தப்பா எடுத்துக்காதேம்மா.. அவன் எங்க குடும்பத்துப் பெண்களைத் தவிர வெளிப் பெண்களிடம் பேசவே மாட்டான்.. உன்னிடம் இவ்வளவு பேசியதே அதிகம்.." யமுனா கல்யாணியைச் சமாதானப்படுத்தும் தொனியில் பேசினாள்..

கல்யாணி லேசாக சிரித்து வைத்தாள்.. அந்த சிரிப்புக்கு என்ன அர்த்தம் என்ற யோசனையுடன்..

"அவன்தான் அப்படிங்க.. நான் அப்படியில்லை.. பெண்களிடம் சகஜமாகப் பேசுவேன்.." என்று வாய் விட்ட அஜய், வீணாவின் முறைப்பைக் கண்டதும்..

"நானும் அவனைப் போலதாங்க.." என்று ஜகா வாங்கினான்..

"நீ வா கல்யாணி.. உன் ரூமைக் காட்டறேன்.." வீணா கல்யாணியின் கையைப் பிடித்து விரல் கோர்த்தபடி மாடிப்படியில் ஏறினாள்..

"பார்த்து.. மெதுவா.." அஜய் குரல் கொடுத்தபடி பின் தொடர்ந்ததில் அக்கினியானாள்..

"நீங்க எங்கே வர்றீங்க..?"

"என் ஃபிரண்டைப் பார்க்க வர்றேன்.."

"இவ்வளவு நேரமும் ஒன்றாய்த்தானே சுற்றினீங்க..?"

"அதுக்காக வீடு வரை வந்தவன் ரூமுக்குப் போகாம போனா அவன் என்னைக் கோவிச்சுக்க மாட்டானா..?"

"மாட்டான்.."

"அதை நீ சொல்லக் கூடாது.."

"வேற யார் சொல்லனும்..?"

"விக்ரம் சொல்லனும்.."

அஜய் ஸ்டைலாக தலைமுடியைக் கோதி விட்டுக் கொண்டான்.. கல்யாணியை ஒரு மார்க்கமாகப் பார்த்தபடி இரண்டிரண்டு படிகளாகத் தாவி அவர்களை முந்திக் கொண்டு மாடிக்குப் போய் விட்டான்..

"ஃபிலிம் காட்டறான்.." வீணா கொதித்தாள்..

"ஈஸி வீணா.. ஜென்ட்ஸ் இப்படித்தான் இருப்பாங்க.."

"என் அண்ணன் இப்படி அரை வேக்காட்டுத்தனமா இருக்க மாட்டான்.."

"எல்லோரும் உன் அண்ணனைப் போலவே இருப்பாங்களா..? அவர் ஒரு விசித்திரப் பிறவி.."

"ஊஹூம்.. உனக்குத் தெரிந்தது அவ்வளவுதான்.. ஹி இஸ் ஸோ நைஸ்.."

"ஈஸிட்..?"

நம்ப முடியாது என்ற தொனியில் கேட்டு விட்டு மௌனமானாள் கல்யாணி..

"இதுதான் நீ தங்கப் போகிற ரூம்.."

சற்று நேரம் பேசிவிட்டு வீணா போய் விட்டாள்.. கல்யாணி கதவை அடைத்து விட்டுக் குளியலறையில் புகுந்தாள்.. இதமான வெந்நீரில் குளித்து உடை மாற்றியவள் பெட்டிகளைத் திறந்து துணிகளை அலமாரியில் அடுக்கி வைத்தாள்.. அவளது செயல்களில் ஓர் தெளிவும், முடிவும் இருந்தன..

# அத்தியாயம் 8

**ப**ச்சைப் பசேலென்ற தேயிலைப் பாத்திகள், நடுவில் சீரான இடைவெளி விட்டுக் கட்டம் கட்டியதைப் போல மலைச் சரிவில் படர்ந்திருந்தன.. அதன் நடுவே உற்சாகமாக செல்ஃபோனில் வீடியோ எடுத்தபடி வலம் வந்தாள் கல்யாணி.. அவளது உற்சாகத்தை ரசித்தபடி கூட நடந்தாள் வீணா..

"தேயிலைத் தோட்டம் - நீ

தேவதையாட்டம்..

துள்ளுவதென்ன.. நெஞ்சை

அள்ளுவதென்ன..?

பனி தூங்கும்.. பசும்புல்லே..

மின்னுது உன்னாட்டம் - நல்ல

முத்திரைப் பொன்னாட்டம்..

கார்காலத்தில் ஊர்கோலத்தில்

**காதலன் காதலி செல்ல - நான்**

**அந்த ஆனந்தம் என் சொல்ல..?"**

தேயிலைத் தோட்டங்களைப் பார்வையிட்டபடி மலைப்பாதையில் ஜீப்பில் வந்து கொண்டிருந்த விக்ரம் அதிர்ந்தான்.. பக்கத்திலிருந்த அஜய் நண்பனை வினோதமாகப் பார்த்தபடி..

"என்னடா..?" என்றான்..

"பாட்டு.."

"ஆரம்பிச்சுட்டியா..? இந்தப் பாட்டுக்கு என்ன..?"

"எங்கேயோ கேட்ட பாட்டுப் போல இருக்குடா.."

"அனத்தாதே.. எங்கேயோ கேட்ட குரல்ன்னு படம்தான் இருக்கு.. பாட்டு இல்லை.."

"இல்லைடா அஜய்.. இந்தப் பாட்டை நான் எங்கேயோ கேட்டிருக்கேன்.."

விக்ரம் ஜீப்பை நிறுத்தி விட்டுக் குதித்து இறங்கினான்.. அஜய் தலையில் அடித்துக் கொண்டு ஜீப்பிலேயே உட்கார்ந்திருந்தான்..

"எனக்குக் கால்வலி.. சும்மா சும்மா ஜீப்பில இருந்து குதிக்க முடியாது.. நீயே போய் பார்த்துட்டு வா.."

விக்ரம் மலைச்சரிவில் தேயிலைப் பாத்திகளுக்கு ஊடே இறங்கினான்.. எதிரில் வீணாவும் கல்யாணியும் கலகலத்துப் பேசியபடி வருவதைப் பார்த்ததும் நின்று விட்டான்..

"என்னடா நின்றுட்ட..?" அஜய் எக்கிப் பார்த்தான்..

"ஓ.. இவங்க இங்கேதான் இருக்காங்களா..?" ஜீப்பிலிருந்து குதித்தான்..

"இப்பக் கால்வலி இல்லையா..?"

"இட்ஸ் கான் மச்சான்.."

"நீ இருக்கியே.. உன்னைத் திருத்தவே முடியாதுடா.."

"திருந்தி என்ன செய்யப் போறேன்..?"

"இதை வீணாகிட்ட எடுத்துச் சொல்லவா..?"

"எதுக்குடா என் லவ் மேல அனு குண்டை போடப் பார்க்கிற..? அடங்குடா மச்சான்.."

இருவரும் வழக்கடித்துக் கொண்டிருக்க, மலைப் பாதையில் ஏறிய வீணாவும் கல்யாணியும் அவர்களைப் பார்த்து விட்டார்கள்..

"ஹாய் கல்யாணி.."

அஜய் உற்சாகமாக கையாட்டினான்..

"பக்கத்தில் நானும் இருக்கேன்.." எரிமலையானாள் வீணா..

"கல்யாணி நம்ம கெஸ்ட்டாச்சே.. ஹி.. ஹி.." அஜய் வழிந்தான்..

"நம்ம கெஸ்ட்டில்ல.. எங்க கெஸ்ட்.." வீணா பிழை திருத்தம் செய்தாள்..

"நீயும் நானும் வேறு வேறா வீணா..?" அஜய் உருகினான்..

"ஊஹூம்..? நம்பிட்டேன்.."

கோபம் குறையாத வீணா தமையனிடம் எரிந்து விழுந்தாள்..

"எப்பப் பார்த்தாலும் ஒட்டுப் புல்லைப்போல உன் ஃபிரண்டையும் கூட வைத்துக்கிட்டுத்தான் வேலை பார்ப்பியா அண்ணா..?"

"ஏன்..? இவன் என்கூட இருந்தா உனக்கென்ன..? உன் கூடவும்தான் ஒரு ஒட்டுப்புல் ஒட்டிக்கிட்டு இருக்கு.."

விக்ரம் கல்யாணியை ஜாடையாகப் பார்த்தபடிச் சொல்ல.. அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.. அதே பற்றில்லாத கூர்மையான துளைக்கும் பார்வை.. அந்தப் பார்வைக்குள் ஒளிந்திருக்கும் கதை.. அகன்ற அவளது பெரு விழிகளைப் பார்த்தவனுக்கு..

'காவியக் கண்கள்..' என்ற எண்ணம் மனதில் வந்ததைத் தடுக்க முடியவில்லை..

'இவ பெரிய காவியத் தலைவி..!' அலட்சியமாகத் தலையைச் சிலுப்பினான்.. அடர்ந்த முடி முன் நெற்றியில் கவர்ச்சியாகப் படிந்தது..

அதைப் பார்த்த கல்யாணியின் விழிகளில் கணப்பொழுது ஓர் மயக்கம் வந்து போனதைப் போல இருந்தது அஜய்க்கு..

'இப்படித் தோன்றுவது எனக்கு மட்டும்தானா..?'

பக்கத்திலிருந்த விக்ரமையும் வீணாவையும் பார்த்தான்.. அஜய் ஏன் விக்ரமுடன் இருக்கிறான் என்பதைப் பற்றிய காரசார விவாதத்தில் அவர்கள் இருந்தார்கள்..

'இவன்கூடப் புதுசாவா ஒட்டிக்கிட்டு இருக்கேன்.. இவ எதுக்குப் புதுசா காண்டாகிறா..?'

"அண்ணா.. கல்யாணி நம்ம கெஸ்ட்.."

"அதுக்கென்ன..?"

"அவளுக்கு நான் ஊரைச் சுற்றிக் காட்டிக்கிட்டு இருக்கேன்.."

"காட்டு.. நான் வேண்டாம்ன்னு சொல்லலையே.."

"உன் ஃபிரண்ட் என்ன ஊருக்குப் புதுசா..? நீ என்ன உன் ஃபிரண்டுக்கு ஊரைச் சுற்றிக் காட்டறியா..?"

"நாங்க ஒன்றும் ஊர் சுற்றலை.. எஸ்டேட்டைச் சுற்றிப் பார்த்துக்கிட்டு இருக்கோம்.. அதை முதலில நீ புரிந்துக்க.. ஆமாம்.. இப்ப இங்கே பாட்டுச் சத்தம் கேட்டதே.. யாரு பாடினது..?"

"இவதான் பாடினா.. இதுவா விஷயம்..?"

வீணா மறுபடியும் அஜய்யை விக்ரம் ஓரம் கட்ட வேண்டும்.. ஒதுக்கித்தள்ள வேண்டும்.. என்று கட்டம் கட்ட ஆரம்பித்தாள்.. தங்கை பேசிய எதுவும் விக்ரமின் காதுகளில் விழவில்லை.. அவன் கல்யாணியையே சிந்தனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்..

"நான் சொன்னது உன் காதுகளில் விழுகிறதா இல்லையா..?"

வீணா விக்ரமின் தோள்களைப் பிடித்து உலுக்கினாள்.. அவன் தங்கையின் கையைத் தள்ளி விட்டு..

"நீ பாட்டெல்லாம் பாடுவியா..?" என்று ஆச்சரியத் துடன் கேட்டான்..

"இது சினிமாப் பாட்டு.. யார் வேண்டும்ன்னாலும் பாடலாமே.." அலட்சியத்துடன் உதட்டைப் பிதுக்கித் தோள்களைக் குலுக்கினாள் கல்யாணி..

"சினிமாப் பாட்டுத்தான்.. ஆனா பழைய பாட்டு.. மெலோடி சாங்.. ராப் மியுஸிக் ஜெனரேஷன் இதைப் பாடறது ஆச்சரியம்தான்.."

"நான் இந்த ஜெனரேஷன்.. நீங்க என்ன தடியூண்டற கிழவனா..? இது பழைய பாட்டுன்னு உங்களாலே அடையாளம் சொல்ல முடியறப்ப என்னால் பழைய பாட்டைப் பாட முடியாதா..?"

"எங்க பாட்டிக்குப் பழைய பாட்டுன்னா ரொம்பப் பிடிக்கும்.. அவங்க கேட்கிறப்ப எங்க காதுகளிலயும் கொஞ்சம் விழும்.. அப்படிக் கேட்டுப் பழகியது.."

"என் அம்மாவும் அப்பாவும் பழைய பாடல்களை விரும்பி ரசிப்பாங்க.. அவங்க பழக்கம் எனக்கும் தொற்றிக்கிச்சு.."

"ஈஸிட்..? லண்டனில் செட்டிலானவங்க பழைய பாடல்களை ரசிக்கிறவங்களா..?"

"எங்கே இருந்தா என்னங்க..? மனசு மனசுதானே..?"

இதைச் சொன்ன கல்யாணியின் கண்கள் கலங்கியதோ.. இமைகள் படபடக்க வேறு பக்கம் திரும்பிக் கொண்டவளின் கண்களில் இருந்து எதையும் கண்டு கொள்ள முடியவில்லை..

"இப்ப எனக்கு ரெண்டில ஒண்ணு சொல்லப் போறியா இல்லையா..?"

வீணா உலுக்கிய உலுக்கலில் தங்கையைப் பார்த்தவன்..

"ஏண்டா..?" என்று நண்பனைக் கேட்டான்..

"என்னைக் கேட்டா..? எனக்கென்ன தெரியும்..? இந்த ஒரு வாரமாகத்தான் எண்ணையில் போட்ட கடுகாப் பொரிஞ்சு தள்ளறா.. விடு விக்ரம்.. நான் பேசிக்கறேன்." என்றான் அஜய்..

"என்னத்தைப் பேசப் போறிங்க..?" வீணா அஜய் மீது பாய்ந்தாள்..

"இப்போதைக்கு எதையும் பேசப் போவதில்லை.. கிரேட் எஸ்கேப்.." அஜய் ஜீப்புக்குள் பாய்ந்தான்..

விக்ரம் கல்யாணியைப் பார்த்தான்.. அவள் தேயிலைத் தோட்டத்தை செல்ஃபோனில் சிறை பிடித்துக் கொண்டிருந்தாள்.. இவன் ஜீப்பில் தாவி ஏறினான்.. சட்டென அவனைப் பார்த்தாள்..

காந்தமென அவனைக் கவர்ந்து சுண்டியிழுத்த அவளது கரும் விழிகளின் கட்டளைக்கு கட்டுப்பட்டவனைப் போல தயங்கினான் விக்ரம்..

"டேய்.. ஜீப்பைக் கிளப்புடா.. இல்லேன்னா உன் தங்கை என்னை வீடு கட்டி அடிச்சிருவா.." அஜய் நண்பனை அதட்டிக் கிளம்ப வைத்தான்..

விக்ரம் ஒரு பெருமூச்சுடன் ஜீப்பைக் கிளப்பினான்.. நண்பனை விசித்திரமாகப் பார்த்த அஜய்..

"எதுக்கு இந்தப் பெருமூச்சு..?" என்றான்..

"தெரியலை.." விந்தையாகப் பதில் சொல்லி நண்பனை மிரள வைத்தான் விக்ரம்..

அவன் இப்படிப் பேசுவது புதிது.. தெளிந்த சிந்தனையுடையவன் விக்ரம்.. அவன் ஓர் உணர்வைத் தெரியவில்லை என்று சொல்வது விநோதம்தான்..

அடுத்த இரு நாள்களில் நண்பர்கள் இருவரும் மதுரைக்குச் சென்று விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள்.. சில்வர் ஃபால்ஸின் வெள்ளி அருவி நீர் ஆறாக ஓடிக் கொண்டிருந்தது.. அதனருகே இருந்த பாதையில் ஜீப் விரைந்தது..

"நதியோரம்.."

அதே எங்கேயோ கேட்ட குரல்.. விக்ரம் ஜீப் பிரேக் போட்டு நின்றது..

"என்னடா..?" அஜய் விழித்தான்..

"பாட்டுடா.."

"உன்கூட இதே பிழைப்பாய் போயிருச்சு.."

விக்ரம் நண்பன் சொன்னதைக் கவனிக்கவில்லை.. தேம்ஸ் நதியில் அவன் கேட்ட அதே பாடல்.. பித்துப்

பிடித்தவனைப் போல ஜீப்பை விட்டுக் குதித்து இறங்கி ஊசியிலைக் காட்டுக்குள்ளே ஓடினான்..

"நதியோரம்.. நதியோரம்..

நானல் ஒன்று, நாட்டியம் ஆடுது மெல்ல..

நானந்த ஆனந்தம் என் சொல்ல..?"

பாட்டுச் சப்தம் கேட்ட இடத்தை அடைந்து விட்டான்.. அங்கே குளிர்ந்த நீரில் கால்களை நனைத்து வீணாவும் கல்யாணியும் ஓடி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.. கல்யாணி தொடர்ந்து பாடிக் கொண்டிருநதாள்..

"தேயிலைத் தோட்டம் - நான்

தேவதையாட்டாம்.."

'இந்தப் பாட்டிலதான் இந்த வரிகள் வருதா..? அதனாலதான் எங்கேயோ கேட்ட பாட்டுன்னு எனக்குத் தோணிச்சா..?'

விக்ரம் வந்ததை அவர்கள் கவனிக்கவில்லை.. அவர்களைத் தொந்தரவு பண்ண வேண்டாம் என்று

அவன் திரும்பி நடக்கப் போனான்.. அப்போதுதான் அவள் பாடினாள்..

**"நீராட நதியா இல்லை..?**

**நிழல் தேட இடமா இல்லை..?**

**பசியாற உணவா இல்லை..?**

**பகிர்ந்துண்ணத் துணையா இல்லை..?"**

விக்ரம் ஆணியடித்ததைப் போல அப்படியே நின்று விட்டான்.. அதே குரல்.. அதே உணர்வு.. அதே பாடல்.. ஆனால் எப்படி..?

இந்தப் பாடலைப் பாடி அவனை மயக்கி இழுத்தவள் பொய்யாகிப் போய் விட்டாள்.. இவள் எங்கேயிருந்து வந்திருக்கிறாள்..

# அத்தியாயம் 9

"இன்னும் கொஞ்சம் போட்டுக்கம்மா.."

கல்யாணியின் தட்டில் இடியாப்பத்தை வைத்துத் தேங்காய் பாலை ஊற்றினாள் விமலா.. இது போன்ற உபசரணைகளை எந்த விருந்தினருக்கும் அவள் செய்ததில்லை.. கனகா சமைப்பாள்.. சித்ரா பரிமாறுவாள்.. கல்யாணிக்கு மட்டும் அவள் காட்டிய வாத்சல்யத்தில் சித்ரா அதிசயித்துப் போனாள்.. சமையலறையில் கனகாவின் காதைக் கடித்தாள்.

"ஏன் கனகா..?"

"என்னத்தைக் கண்டுட்ட.. எங்கிட்ட வந்து ஏன் போடற..?"

"அதில்ல கனகா.."

"எது இல்ல..?"

"அட.. நான் சொல்ல வர்றதைத்தான் கொஞ்சம் காதைக் கொடுத்துக் கேளேன்.."

"உங்கிட்டக் காதைக் கொடுத்துட்டு நான் என்ன பண்ண..?"

"உங்காதை வைச்சுக்கிட்டு நான் என்ன பண்ண..? ஒரு மண்ணும் பண்ண முடியாது.. எனக்கு என் காதே போதும்.. சொல்ல வர்றதை மட்டும் கேட்டுக்க.."

"சொல்லித் தொலை.."

வெளியே சலித்துக் கொள்வதைப் போலக் காட்டிக் கொண்டாள் கனகா.. அவள் அப்படித்தான்.. புறம் கேட்பதில் ஆர்வமில்லாததைப் போல நடிப்பாள்.. ஆனால் அடுத்தவரின் வாயசைவைக் கூடக் காதைத் தீட்டிக் கொண்டு கேட்பாள்.. புறம் பேசுவது அவளுக்குப் பிடிக்காததைப் போலக் காட்டிக் கொண்டே ஊடும் பாடும் வத்திக்குச்சியைக் கொளுத்திப் போட்டுப் பற்ற வைத்து விடுவாள்..

"இந்த லண்டன் பொண்ணு என்ன அம்புட்டுப் பெரிய பணக்காரியா..?"

"யாரைச் சொல்ற..? கல்யாணியம்மாவையா..?"

"அதைத்தான் சொல்றேன்.. சின்னப் பொண்ணுதானே..?"

"சின்னப் பொண்ணோ.. பெரிய பொண்ணோ.. முதலாளி குடும்பத்துக்குச் சொந்தக்காரப் பொண்ணு.. மரியாதை கொடுத்துப் பேசிப்பழகு.."

"இல்லேன்னா நீ பத்த வைச்சிருவன்னு சொல்ற.."

"நான்தான் பத்த வைக்கனுமா..? உன்கிட்ட இல்லாத வத்திப் பொட்டியா..? நீ கொளுத்திப் போட மாட்டியா..?"

"பார்த்தியா.. கோவிச்சுக்கிட்ட.. கேட்டதுக்குப் பதில் சொல்லாம சண்டைக்கு வர்றியே.."

"பொழைச்சுப் போ.. லண்டன்காரம்மா கோடிஸ்வரிதான்.. அதுக்காக நம்ம அம்மா ஒண்ணும் ஏப்பை சாப்பையில்லையே.. கோடிஸ்வரப் பரம்பரையில பொறந்தவங்களாச்சே.. இல்லேன்னா நம்ம ஐயாவுக்குக் கட்டிக்கிட்டு வந்திருப்பாங்களா..?"

"அப்புறம் எதுக்காக இந்த லண்டன் பொண்ண விழுந்து விழுந்து கவனிக்கிறாங்க.. இங்கிட்டு இருக்கிற

துரும்பை எடுத்து அங்கிட்டு நகர்த்தி வைக்க மாட்டாங்களே.."

"அம்புட்டுப் பிரியமா இருக்கும்.. நீ வேலையைக் கவனி.."

கனகாவுக்கும் அதே எண்ணம்தான்.. யாருக்கும் முக்கியத்துவம் கொடுக்காத விமலா எதற்காக கல்யாணிக்கு முக்கியத்துவம் கொடுக்கிறாள் என்று தலைமுடியைப் பிய்த்துக் கொண்டுதான் இருந்தாள்.. அதை சித்ராவிடம் ஒப்புக் கொண்டாள் அவள் எப்படி கனகா ஆவாள்..? அது தெரியாத சித்ரா..

"எப்படித்தான் இப்படி எதிலயும் பட்டுக்காம இருக்கியோக்கா.." என்று வியந்து போனாள்..

டைனிங் டேபிளில் நடக்கும் உபசரணையைக் கவனித்தபடி சாப்பிட வந்த விக்ரம் கல்யாணியை உற்றுப் பார்த்தபடி எதிரில் உட்கார்ந்தான்.. அவனைக் கண்டதும் அடர்ந்த அவளது இமைகள் உயர்ந்தன.. அழகிய பெரும் கரு விழிகள் அவனை விழுங்க

முற்பட்டன.. ஆக்டோபஸைப் போல அவனை வளைத்து இழுத்தது அவளுடைய பார்வை..

விக்ரமின் புருவங்கள் முடிச்சிட்டன.. அவளுடைய விழிகள் சொல்லும் கதைதான் என்ன என்று அறிய முற்படுபவனைப் போல அவளையே பார்த்தபடி தட்டில் கை வைத்தான்..

"அங்கே ஒண்ணும் இல்ல.." குரல் கொடுத்தாள் வீணா.

கனவிலிருந்து விழிப்பவனைப் போலத் தங்கையைப் பார்த்தான் விக்ரம்..

"உனக்கு என்ன வேணும்னு அம்மா கேட்டுக்கிட்டு இருக்காங்க.. நீ என்னடான்னா முழித்துக்கிட்டே தூங்கிக்கிட்டு இருக்கிற.. வாட் ஹேப்பன் அண்ணா..? இது டைனிங் டேபிள்.. உன் பெட் இல்ல.."

"விடு வீணா.. அவன் ஏதோ குழப்பத்தில இருக்கான் போல.. சொல்லு விக்ரம்.. டின்னருக்கு பூரி கிழங்கு, இடியாப்பம் தேங்காய் பால் இருக்கு.. நீ ஃபர்ஸ்ட் பூரி கிழங்கு சாப்பிட்டுட்டு நெக்ஸ்ட் இடியாப்பம் தேங்காய்

பால் வைத்துக்கறியா..?" விமலா மகளை அதட்டி விட்டு மகனிடம் இதமாகக் கேட்டாள்..

"அவருக்கு எது பிடிக்குதோ.. அதை சர்வ் பண்ணலாமே ஆண்ட்டி..?"

கல்யாணி சொன்னாள்.. சட்டென விக்ரம் அவளைப் பார்க்க தடுமாறி தலை கவிழ்ந்தாள்.. அவளது இமைகள் கவிழ்ந்து பார்வை தாழ்ந்தது.. முதன் முறையாக அவளைத் தடுமாற வைத்து விட்ட திருப்தி விக்ரமின் மனதில் வந்தது..

"இவனுக்கு இரண்டு அயிட்டமும் பிடிக்கும்மா.. இரண்டையும் விரும்பிச் சாப்பிடுவான்.." விமலா மகனை செல்லமாகப் பார்த்தபடி சொன்னாள்..

"உனக்கும் இந்த இரண்டு அயிட்டமும் பிடித்த அயிட்டங்கள்ன்னு சொன்னியே.." வீணா கேட்டாள்..

கல்யாணியின் பார்வை உயர்ந்து விக்ரமின் பார்வையைச் சந்தித்துப் பிரிந்தது.. விக்ரமின் உடலில் மின்சாரம் பாய்ந்ததைப் போன்ற உணர்வு உண்டானது.. நூதனமான உணர்வுக் குவியல்களில் அவன் சிக்கினான்..

பக்கத்தில் இருப்பவர்களை மறந்து அவளை ஆராய்ச்சியாக பார்க்க ஆரம்பித்தான்..

"அண்ணா இது கல்யாணி.. கமிங் ஃபரம் லண்டன்.. நம்ம வீட்டுக்கு கெஸ்ட்டா வந்து இரண்டு வாரமாச்சு.." கேலியாக நினைவு படுத்தினாள் வீணா..

"இதை எதுக்கு இப்பச் சொல்ற..?"

"இல்ல.. அடையாளம் தெரியாத ஆளைப் பார்க்கிறதைப் போலக் கல்யாணியைப் பார்த்து வைக்கிறயே.. அதான்.. உனக்கு அடையாளம் சொல்றேன்.."

வீணாவின் கேலியில் கலந்து கொண்ட யமுனாவும் விமலாவும் சிரித்தார்கள்.. கல்யாணியின் முகம் சிவந்து விட்டது.. ஜெகந்நாதனும், ஜனார்த்தனமும் சாப்பிட்டு விட்டுச் சென்றிருந்தார்கள்..

"அப்பாவும், மகனும் ஜெட் வேகம்.. தட்டில் விழுந்ததை ஒரு செகண்டில காலி பண்ணிடறாங்க.." வீணா வியந்தாள்..

அவர்கள் தூங்கச் சென்று விட்டதால் மகளிர் மட்டும் அரட்டைக் கச்சேரியுடன் சாப்பிட ஆரம்பித்தார்கள்.. தாமதமாக வந்த விக்ரம் அதில் இணைந்து கொண்டான்..

"இவனும் அப்பா, தாத்தா வர்க்கம்தான்.. ஒரு செகண்டில் சாப்பாட்டை முடிச்சுட்டு ஓடிருவான்.. இன்னைக்கு என்னவோ புதுசு புதுசா பண்றான்.. உன்னை வெறிக்கிறான்.. சாப்பாட்டைக் கொறிக்கிறான்.."

வீணா குறும்பாக கல்யாணியிடம் கண் சிமிட்டினாள்..

கல்யாணியின் சிவந்த முகம் மேலும் சிவந்தது.. ரசனையாக அதைப் பார்த்த விக்ரமுக்கு தேம்ஸ் நதியின் ஞாபகம் வந்தது.. அன்று வந்த அதே உணர்வு இப்போது ஏன் வருகிறது..?

டைனிங் ஹாலின் சுவரில் மாட்டப்பட்டிருந்த டிவியில் கருப்பு வெள்ளைத் திரைப்படம் ஓடிக் கொண்டிருந்தது.. உருவ ஒற்றுமையில் ஒருத்தியைக் காதலித்த கதாநாயகன் அவள் என்று நினைத்துக்

கொண்டு அக்காவைத் திருமணம் செய்து கொண்டு வாழ்கிறான்.. சில வருஷங்களில் அவனது காதலி அவனிடமே நோயாளியாக திரும்பி வருகிறாள்..

"அந்தக் காலத்துக் கதைகள் போல வருமா..?" யமுனா சிலாகித்தாள்..

"இப்பவும் நல்ல படங்கள் வரத்தான் செய்யுது பாட்டி.. நீங்கதான் பார்க்கிறது இல்லை.." என்றாள் வீணா..

"அதை நீயே பாரு.." என்று சொல்லிவிட்டாள் யமுனா..

திரைப்படத்தில் காதலி கதாநாயகனை விட்டு விளாசிக் கொண்டிருந்தாள்..

"நீ காதலித்தாய் என்கிறாயே.. எதைக் காதலித்தாய்..? உருவத்தையா..? மனதையா..? உருவத்தைத்தான் என்றால் என் உருவமும் உன் மனைவியின் உருவமும் ஒன்று போலதான் இருக்கிறது.. மனதையென்றால் இத்தனை ஆண்டுகால மண

வாழ்க்கையில் உன்னுடன் வாழ்வது நானல்ல, வேறு ஒருத்தி என்பதை ஏன் நீ கண்டுபிடிக்கவில்லை..?"

"ஃபெண்டாஸ்டிக்.." கல்யாணியின் கோபக்குரலில் விக்ரம் அவளைப் பார்த்தான்..

"இதிலென்ன ஃபெண்டாஸ்டிக் இருக்கு..? இரண்டு பெண்கள் சேர்ந்து அவன் வாழ்க்கையில் விளையாடி இருக்கிறார்கள்.. பாதிக்கப்பட்டவன் அவன்.. காதலின்னு நம்பி வேறு ஒருத்தியிடம் ஏமாந்திருக்கிறான்.. காலம் கடந்து வந்த காதலி அவனுக்கு நியாயம் செய்யாமல் அவனைக் குற்றவாளியாக்கி லெஃப்ட் அண்ட் ரைட் விட்டுக் கொண்டிருக்கிறாள்.. இது உனக்கு ஃபெண்டாஸ்டிக்கா இருக்கா..?" விக்ரம் எரிந்து விழுந்தான்..

"ஹலோ.. அவ கேட்கிறாளே.. அவளோட அடையாளம் எது.? உருவமா..? மனதா..? இந்தக் கேள்விக்கு உங்களிடம் ஆன்சர் இருக்கா மிஸ்டர் விக்ரம்.."

"இரண்டையும்தான்.."

"இரண்டில் ஒன்றுதானே அவனுக்குக் கிடைச்சிருக்கு.. இன்னொன்று எங்கேயென்று ஏன் அவன் தேடலை..?"

"அவன் என்ன செய்வான்..? நான்தான் உன் காதலின்னு இவ வந்து நின்று விட்டாளே.."

"இது ஒரு ஆன்ஸரா மிஸ்டர் விக்ரம்..? தொலைந்து போன அவனுடைய காதலி எப்படியும் அவன் அவளைத் தேடிக் கண்டுபிடிச்சிருவான்னு நம்பிக்கிட்டு இருந்தாளே.. அந்த நம்பிக்கை பொய்யாப் போனதே.. அவளுடைய காதல் தோற்றுப் போனதே.. அதற்கு நீங்கள் செய்யும் நியாயம் இதுதானா..?"

"நான் எதுக்கு நியாயம் செய்யனும்..? ஹலோ.. இது சினிமா.."

விக்ரம் சொன்னதைக் கல்யாணி காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை.. முச்சிரைக்கப் பேசிக் கொண்டிருந்தாள்.. விமலாவும் யமுனாவும் கவலை யானார்கள்..

"இவன் வேறு ஒருத்தியைத் காதலின்னு நினைத்து அவளுடன் வாழ ஆரம்பிச்சுட்டானே.. அது தெரிஞ்ச காதலி எப்படித் துடிச்சுப் போயிருப்பா.. அந்தத் துடிப்பை உங்களாலே உணர முடியாது மிஸ்டர் விக்ரம்.. ஏன்னா நீங்க ஆண்..! பெண் மனதை உங்களால் புரிந்துக்கவே முடியாது.. உங்களுக்கு ஒன்று தெரியுமா விக்ரம்.. அந்தக் காதலியின் முன்னால் அவளுடைய காதலன் போலவே வேறு ஒருவன் வந்து நின்றால் ஒரு செகண்டில் இவள் அடையாளம் கண்டு பிடித்திருப்பாள்.. ஏன்னா அவ பெண்..!"

கல்யாணி வேகமாக எழுந்து கை கழுவி விட்டு மாடிப் படிகளில் தாவியேறி ஓடி விட்டாள்..

# அத்தியாயம் 10

**ஸ்**வெட்டரை மீறிக் குளிர் துளைத்தது.. அதைப் பொருட்படுத்தாமல் தோட்டத்தில் நடந்து கொண்டிருந் தான் விக்ரம்.. முதல் நாள் இரவில் கல்யாணி விசித்திரமாக நடந்து கொண்டதையே அவனது மனம் அசை போட்டுக் கொண்டிருந்தது.. ஒரு திரைப்படத்தி ற்காகவா அந்த அளவுக்கு உணர்ச்சிவசப்பட்டாள்..?

"ஸாரி.."

இனிமையான பெண்குரலில் திரும்பினான்.. ரோஜா வண்ண நைட்டியும், காபிக் கொட்டைகலர் ஸ்வெட்டருமாக கல்யாணி நின்றிருந்தாள்.. அடர்ந்த கருமையான முடி அவளது முதுகில் பரந்து விரிந்து இடுப்பைத் தொட்டுக் கொண்டிருந்தது.. ஒரு தேவதையின் எழிலோடு தான் இருப்பதை உணராமல் அவனிடம் சோகையாக சிரித்தாள்.. அது அவனை வசீகரித்தது..

"எதுக்கு ஸாரி..?"

"நைட் உங்களிடம் அன்னெசசரியா ஆர்கியூ பண்ணிட்டேன்.."

விக்ரம் அவளை ஊடுறுவதைப் போலப் பார்த்து வைத்தான்.. தீர்க்கமான அவனுடைய பார்வையில் அவள் முகம் சிவந்தாள்..

"அது நெசசரியா இல்லை அன்னெசசரியான்னுதான் நான் யோசிச்சுக்கிட்டு இருக்கேன்.. "

மின்னலொன்று அவளது விழிகளில் வந்து அமர்ந்தது..

"எதனால அப்படித் திங்க் பண்றீங்க..?"

"பிகாஸ்.. உங்களைப் பார்த்தா அன்னெசஸரியா ஆர்கியூ பண்றவங்களைப் போலத் தெரியல.." ஆழ்ந்த பார்வையுடன் சொன்னான்..

"உன்னைன்னே சொல்லலாம்.. திடிர் மரியாதை எதுக்கு..? என்னை 'வா, போ'ன்னுதானே பேசுவீங்க..?" கோபமில்லாமல் அவள் முறுவலித்தாள்.

ஏனோ அவளிடம் பேசிக் கொண்டிருக்க வேண்டும் போல அவனுக்கு இருந்தது.. எதனால் அப்படி தோன்றுகிறது என்று தெரியவில்லை..

"இப்படி உட்கார்ந்து பேசலாமா..?" தோட்டத்திலிருந்த சாய்வான முதுகுப்பகுதியுடன் கூடிய மர பெஞ்சைக் காட்டிக் கேட்டான்..

"ஓ.. ஷ்யூர்.." தயங்காமல் அவள் உட்கார்ந்தாள்..

பக்கத்தில் அமர்ந்து அவள் பக்கமாக திரும்பி ஒரு கையை பெஞ்சின் முதுகுப்புறம் விட்டுக் கால் மேல் கால் போட்டுத் தோரணையாக அமர்ந்தவனின் கம்பீரம் அவளைக் கவர்ந்திருக்க வேண்டும்.. ஓரக் கண்ணால் அவனைப் பார்த்துக் கொண்டாள்..

"நான் லண்டனில்தான் எம்.பி.ஏ படித்தேன்.."

விக்ரமின் மனம் அந்நாள்களில் மிதந்தது.. தேம்ஸ் நதிக்கரையில் அவன் கேட்ட பாடல் காதுகளில் ஒலித்தது..

"தெரியும்.."

ஒற்றை வார்த்தையில் அவள் சொன்ன பதிலில் புருவங்களை உயர்த்தினான்..

"எப்படித் தெரியும்..?"

"இது என்ன கொஸ்டின்..? வீணா சொன்னா.."

வெகு காலமாக பழகிக் கொண்டிருக்கும் தோழியைப் பற்றிச் சொல்வதைப் போல கல்யாணி சொன்னாள்.. விக்ரமுக்கு அவன் அஜய்யைப் பற்றிப் பேசுவதைப் போல அவள் பேசுகிறாளே என்ற ஆச்சரியம் வந்தது..

"நான் ஒன்று கேட்கவா..?"

"ஒன்றென்ன.. ஓராயிரம் கேளுங்களேன்.."

அவள் தலையைச் சாய்த்துச் சிரித்தாள்.. சிரிக்கும் போது அசாத்தியமான அழகுடன் ஈர்த்தாள்.. அவளது சிரிப்பில் அவனும் லேசாக சிரித்து வைத்தான்.. அதில் அவள் அகன்ற விழிகளை மேலும் விரித்து அதிசயித்தாள்..

"ஹௌ நைஸ்..! உங்களுக்குச் சிரிக்கக் கூடத் தெரியுமா..?"

"இதை நீ சொல்லக் கூடாது.."

"ஏனாம்..?"

"டீச்சரைப் போல உர்ருன்னு முகத்தை வைத்துக்கிட்டு முறைப்பாய் பார்த்துக்கிட்டு என்னைச் சொல்கிறாயா..?"

"ஈஸிட்..? நான் அப்படியா பார்க்கிறேன்..?"

அவள் குழந்தை போல வெகு கவலையாக கேட்ட விதத்தில் அவன் வாய் விட்டுச் சிரித்தான்.

"நீ இவ்வளவு இன்னொஸென்டா..?"

"நீங்க மட்டும் இண்டலிஜென்டடா..?"

அவள் சண்டைக்கு வருவதைப் போலக் கேட்கவில்லை.. ஆழ்ந்த குரலில், ஆழமான பார்வையோடு கேட்டாள்..

'ரூபாவை நல்லவள்ன்னு நான் நம்பிப் பழகியதைப் பற்றி இவளிடம் வீணா சொல்லியிருக்கா போல..'

விக்ரமின் சிரிப்பு மறைந்தது.. அவன் மௌமானான்..

"ஸாரி.. உங்க மூடை ஸ்பாயில் பண்ணிட்டேன் போல.." உண்மையான வருத்தத்துடன் சொன்னாள் கல்யாணி..

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை.."

"இருந்திருந்து இப்பத்தான் நீங்க சிரிச்சீங்க.. அதையும் துரத்தி விட்டுட்டேன்.."

"ரிலாக்ஸ்.. எதுவுமில்லைன்னு சொன்னேனே.."

"நீங்க ஒன்றுன்னு சொன்னதும்தான் நினைவுக்கு வருது.."

"எது..?"

"நீங்க ஒன்று கேட்கலாமான்னு ஆரம்பிச்சீங்க.. அதுக்குள்ளே பேச்சு வேற சைடில டிராவல் ஆகிருச்சு.."

"வேற ஒன்றுமில்ல.. வீணாவை இப்போத்தானே பார்க்கிற.. அதுக்குள்ளே க்ளோஸ் ஃபிரண்ட்ஸ் மாதிரி இந்த அளவுக்கு அட்டாச்சாகிட்டிங்களே.. எப்படி..?"

"அது அப்படித்தான்.."

வீணாவின் பேச்சை எடுத்ததும் கல்யாணியின் முகம் மென்மையானது.. அவனுடைய தங்கையின் மீது கல்யாணி காட்டிய உண்மையான பிரியத்தில் விக்ரமின் மனம் கனிந்தது.. கல்யாணியிடம் ஓர் நெருக்கம் உண்டானது..

"சிலரைப் பார்த்தவுடன் பிடித்துப் போகும்.. அவங்களை இதற்கு முன்னால் பார்த்ததே இல்லை என்கிற உண்மை மறந்து போகும்.. பிறந்ததிலிருந்து தெரிந்ததைப் போல ஓர் ரிலேஷன் கிரியேட் ஆகும்.. அது ஏன்னு நமக்குத் தெரியாது.. நீங்க இப்படிப்பட்ட உணர்வை ஃபீல் பண்ணியிருக்கீங்களோ இல்லையோ.. நான் ஃபீல் பண்ணியிருக்கிறேன்.."

கல்யாணி மிருதுவான குரலில் பேசினாள்.. அவளுடைய பார்வை தொலைவில் பதிந்திருந்தது.. அவளது ஆழ் மனதில் அப்போது என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள் என்பதை அறிய விரும்பினான் விக்ரம்.. ஆழம் காண முடியாதது பெண் மனம்

என்கிறார்களே.. அந்த அடி ஆழத்தில் புதைந்திருக்கும் உணர்வுகள் என்னவாக இருக்கக்கூடும்..?

"வீணாவைப் பார்த்ததும் இப்படிப் ஃபீல் பண்ணினாயா..?"

"யெஸ்.."

மென்மையாக தலையை அசைத்தாள் கல்யாணி.. பூவொன்று தலையை அசைப்பதைப் போல இருந்தது.. அவளிடம் ஓர் கடினமும், மென்மையும் கலந்து விரவியிருந்த அதிசயத்தை கண்டுணர்ந்தான் விக்ரம்.. மிக நுண்ணிய உணர்வலைகளுடன் இருந்தாள் கல்யாணி.. மாறுபட்ட இரு குணாதிசியங்களுடன் அவள் இருப்பதை உணராதவளாகவும் இருந்தாள்.. விக்ரமுக்கு மழையும் நீயே, வெயிலும் நீயே என்ற பாடல் நினைவுக்கு வந்தது.. கல்யாணியைப் பார்க்கும் போது பாடல் வரிகள் நினைவுக்கு வருவது ஏன் என்ற விந்தையை மட்டும் அவனால் கண்டுணர முடியவில்லை..

"இதற்கு முன்னால் வேறு யாரையும் பார்த்து இப்படி ஃபீல் பண்ணியிருக்கியா..?"

இயல்பாகத்தான் இந்தக் கேள்வியைக் கேட்டான் அதைக் கேட்டதும் கல்யாணியின் உடலில் ஓர் அதிர்வு வந்தது.. ஏனென்றுதான் அவனுக்குப் புரியவில்லை..

அவளது முகம் கலங்கிச் சிவந்தது.. முகத்தை மறைத்து விழுந்த முடிக் கற்றையை அவள் ஒதுக்கித் தள்ளியபோது மேகங்கள் விலகிய முழு நிலவு போல அவளது முகம் காட்சி தந்தது.. உதட்டைக் கடித்து உணர்வுகளை அடக்கிக் கொண்டவள் சட்டென எழுந்து வீட்டை நோக்கி வேகமாகப் போய் விட்டாள்..

'பேசிக் கொண்டிருக்கும் போதே பாதியில் எழுந்து போகிறாளே.. மரியாதை தெரியாதவள்..' விக்ரமின் மனதில் சினம் துளிர்த்தது..

'இவளிடம் போய் உட்கார்ந்து பேசினேனே.. என்னைச் சொல்லனும்.. இவள் திமிர் பிடித்தவள்..'

விக்ரம் தன் அபிப்ராயத்தில் உறுதியாக இருக்க வேண்டுமென்று தீர்மானித்தான்..

'அவள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள்.. புதிதாக எதையோ பேசினாளே என்று உட்கார்ந்து பேசினேன் பார்.. என்னைச் சொல்லனும்.. பட்டும் உனக்குப் புத்தி வரவில்லை விக்ரம்.. நீ தேற மாட்ட..'

விக்ரம் கோபத்துடன் அறைக்குத் திரும்பினான்.. குளித்து தயாராகி காலை உணவுக்காக கீழே வந்தான்.. ஹாலில் அஜய்யின் உற்சாகக் குரல் கேட்டது..

"என்னடா.. காலையிலேயே வீட்டுப் பக்கம் வந்திருக்க..?" நண்பனிடம் கேட்டான்..

"ஊம்.. உன் ஃபிரண்ட் வீட்டில் செய்கிற பிரேக்ஃபாஸ்ட் வாயில் வைக்கச் சகிக்கலையாம்.. நம் வீட்டுப் பிரேக்ஃபாஸ்ட்டைக் கொட்டிக்கிறதுக்காக வந்திருக்கார்.." அனல் பறக்க விளக்கம் சொன்னாள் வீணா..

"அதுக்கு உனக்கு ஏன் இவ்வளவு காட்டம்..?" தங்கையை விசாரித்தான்..

"நல்லாக் கேளு விக்ரம்.. கல்யாணம் பண்ணிக்கப் போகிற மாப்பிள்ளைங்கிற மட்டு மரியாதை இல்லாம

உன் தங்கை பேசிக்கிட்டு இருக்கிறா.. நம்ம அஜய்யா இருக்கப் போய் ஆச்சு.. வேறு ஒருத்தரா இருந்தா இவ பேசுகிற பேச்சுக்குக் கல்யாணப் பேச்சையே முறித்துக்கிட்டுப் போயிருப்பாங்க.." யமுனா கோபத்துடன் அங்கலாய்த்தாள்..

"வேறு ஒருத்தனா..? பேச்சுக்குக்கூட என் வீணாவை வேறு ஒருத்தன் பெண் கேட்டு வந்திருந்தான்னு சொல்லாதீங்க பாட்டி.. ஐ ஹேட் இட்.." அஜய் கோபமானான்..

கடுமை காட்டிக் கொண்டிருந்த வீணாவின் முகம் ஸ்விட்ச் போட்டதைப் போல ஒளிர்ந்து விட்டது.. அவள் காதலுடன் அஜய்யைப் பார்த்தாள்.. தாழ்ந்த குரலில் முணுமுணுத்தாள்..

"இதுக்கு ஒண்ணும் குறைச்சலில்ல.. அவ்வளவு காதல் இருக்கிறவன் எதுக்காகடா லண்டன்காரிய சைட் அடிக்க ஓடி வர்ற..?"

"நம்ம ஊருக்கு வந்திருக்கிற கெஸ்ட்டுடன் பேசிப் பழகற ஆர்வம் மட்டும்தான் வீணா.."

"நம்ப முடியலையே.."

"நம்புடி.. நம்பிக்கைதான் வாழ்க்கை.."

"நீயெல்லாம் தத்துவம் சொன்னா, தத்துவத்துக்கே மதிப்பில்லாம போயிரும்.. வா.. வா.."

"எங்கே.. எங்கே..?"

"கொட்டிக்கத்தான்.. வேற எங்கே..?"

"கொடைக்கானலில இருந்துக்கிட்டு எங்கேன்னா கேட்கிற..? நாம ஊரைச் சுற்றிப் பார்த்து எத்தனை நாளாச்சு வீணா.."

"இது நீயும், நானும் பிறந்த ஊர்தான்.. எப்போ வேண்டுமானாலும் சுற்றிப் பார்த்துக்கலாம்.. கல்யாணி அப்படியில்லை.. கெஸ்ட்டா வந்திருக்கிறா.. அதனால அவளோட நான் ஊரைச் சுத்தறேன்.."

"நான்..?"

"நீ என் அண்ணனோட சுத்து.."

"அவனாடி என் வுட்-பி..?"

"அவன் தங்கைதான் உனக்கு வுட்-பி.."

அவர்கள் தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்த யமுனா ஜெகந்நாதனிடம் அது பற்றி வியந்து முகவாயில் கை வைத்தாள்..

"இது சின்னப் பிள்ளைகள் சண்டை மாதிரிதான்டி யமுனா.. ஊடே பஞ்சாயத்துப் பண்ணப் போனா நம்மைக் காமெடி பீஸாக்கிட்டு அதுக ஒன்று கூடிக்குவாங்க.." ஜெகந்நாதன் விரிவுரை தந்தார்..

டைனிங் டேபிளில் அவர்கள் எல்லோரும் பேசிச் சிரித்தபடி சாப்பிட ஆரம்பித்தார்கள்.. அஜய்யிடம் எதையோச் சொல்லிச் சிரித்தபடி யதேச்சையாக கல்யாணியைப் பார்த்த விக்ரமின் முகம் மாறியது.. அவள் அவனையே ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.. அவளது பார்வை சொல்லிய கதைதான் என்ன..

# அத்தியாயம் 11

**லே**ப்-டாப்பை மூடி வைத்து விட்டு அவனுடைய பிரத்யேக அறையை விட்டு வெளியே வந்தான் விக்ரம்.. பார்ட்டி ஹாலில் லைட்ஸ் ஒளிர்வதில் ஏதோ பிரச்னை இருந்ததாகச் சொல்லியிருந்தார்களே.. அது சரி செய்யப்பட்டு விட்டதா என்ற யோசனையுடன் ஹாலுக்குள் போனான்.. மேடையின் பின்புறம் முப்பத்தியிரண்டு பதுமைகள் படிகளாய் அமைந்திருக்கும் சிம்மாசனத்தின் மீது கம்பீரமாக அமர்ந்திருக்கும் விக்கிரமாதித்தனின் அழகிய சித்திரம் வரையப் பட்டிருந்தது.. விக்கிரமாதித்தா ஹோட்டலுக்கு வருபவர்கள் அந்தச் சித்திரத்தை பாராட்டாமல் இருந்ததில்லை..

விளக்குகள் சரிசெய்யப் பட்டிருந்ததை உறுதி செய்தவன் ஹோட்டலை விட்டுக் கிளம்பினான்.. அஜய் வரவில்லை.. அவனுடைய ஹோட்டலில் ஏதோ வேலையிருப்பதால் இரவு வீட்டுக்கு வருவதாக ஃபோன்

பண்ணியிருந்தான்.. கொடைக்கானல் இயற்கையோடு இணைந்து குளிர்ச்சியாக இருப்பதை ரசித்தபடி காரை ஓட்டிக் கொண்டிருந்தவன் வீட்டை அடைந்ததும் போர்டிகோவுக்குள் காரைத் திருப்பி நிறுத்தி இறங்கினான்.. தோட்டத்தில் பூச்செடிகளுக்குத் தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தது.. பெரிய கத்தரிக்கோல் மூலம் புற்களையும், புதர்களையும் கத்தரித்துக் கொண்டிருந்தான் கார்மேகம்..

கார்மேகத்திற்கு கார் ஓட்டவும் தெரியும்.. தோட்டக் கலையும் தெரியும்.. வீட்டில் இருக்கும் பெண்கள் வெளியே செல்லும் நேரங்களில் காரோட்டுவான்.. பொதுவாக, அந்த வீட்டின் ஆண்கள் தங்கள் கார்களைத் தாங்களே ஓட்டிச் செல்வதைத்தான் விரும்புவார்கள்.. டிரைவரை அனுமதிக்க மாட்டார்கள்.. வீணாவும் அப்படித்தான்.. யமுனாவும், விமலாவும் வெளியே போய் வர மட்டும் டிரைவரின் உதவி தேவைப்படும்..

"என்ன கார்மேகம்.. புல் அடர்த்தியா வளர்ந்திருச்சு போல.." விக்ரம் தோட்டத்திற்குப் போனான்..

"ஆமாங்கய்யா.." வேலையை முடித்திருந்த கார்மேகம் கத்தரிக்கோலுடன் போய் விட்டான்..

சீராக வெட்டப்பட்டிருந்த புல்வெளியைப் பார்வையிட்டபடித் தோட்டத்துக்குள் நடந்தான் விக்ரம்.. நண்பகலின் வெயில் கொடைக்கானலின் குளிருக்கு இதமாக இருந்தது.. இரு தினங்களுக்கு முன்னால் அவனும் கல்யாணியும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த மரபெஞ்ச் கண்களில் பட்டது..

'ரெண்டு நாளா கண்ணிலேயே படலை.. இந்த வீட்டில்தான் இருக்கிறாளா..?'

அவன் நினைத்து முடிப்பதற்குள்..

**"எனக்காக வா - நான்..**

**உனக்காக வா.."**

என்று பெண்குரல் ஒலித்தது.. விக்ரம் ஸ்தம்பித்தான்.. என்ன இது..? எங்கே சென்றாலும் இந்தப் பாடல் ஏன் அவனைத் துரத்துகிறது..?

பாடுவது கல்யாணிதான் என்று தெரிந்தது.. அவன் வீட்டுத் தோட்டத்தில் வேறு யாருடைய பாடல் ஒலிக்கும்..? அத்துடன் கல்யாணியின் குரல்தான் அவனுக்குப் பரிச்சயமாகி விட்டதே..

'இந்தக் குரல்.. அந்தக் குரலா..?'

அதுதான் அவனுக்கு விளங்கவில்லை.. லண்டனில் தேம்ஸ் ஆற்றங்கரையிலும், ஹாலண்ட் பார்க்கிலும் அவன் கேட்ட பாடல்களை இவளும் பாடுகிறாளே.. எப்படி..? பழைய பாடல்களை இவளும் ரசிக்கிறாள் என்பது சரிதான்.. ஆனால் ரூபா பாடிய அதே பழைய பாடல்களை இவள் திரும்பத் திரும்பப் பாடுவதுதான் எப்படி..?

'எங்கோ இடிக்குது..'

அது எது என்ற ஆராய்ச்சிக்குள் அவனால் இறங்க முடியவில்லை.. குழைந்து ஒலித்த அந்தப் பாடல் கயிறு போட்டு அவனைக் கட்டி இழுத்தது..

**"மலர் மீது பனி தூங்க..**

**மரம் மீது கனி தூங்க..**

**மலை மீது முகில் தூங்க..**

**மடி மீது நீ தூங்க..**

**வா.. வா.. வா.. எனக்காக வா..**

**நான் உனக்காக.. வா.."**

அவனையே அவள் அழைப்பதைப் போல இருந்ததில் அவன் செழுத்தப்பட்டவனைப் போல தோட்டத்துக்குள் விரைந்தான்.. விக்ரம் வீட்டுத் தோட்டம் பெரிதாக இருக்கும்.. மரம், செடி, கொடிகளுடன் மலைபிரதேசத்தின் இயற்கையை உள் வாங்கி, அதைச் சிதைக்காமல் சீரமைக்கப் பட்டிருக்கும்..

சற்றுத் தள்ளியிருந்த மரத்தின் மீது சாய்ந்து நின்று பாடிக் கொண்டிருந்த கல்யாணி, விக்ரமின் காலடி சப்தத்தில் திரும்பினாள்.. அவளது விழிகள் லேசாகக் கலங்கியிருந்தன..

'இவளுக்கு என்ன துயரம்..? ஒரு வேளை லவ் ஃபெயிலியரோ..'

இருக்காது என்று தோன்றியது விக்ரமுக்கு.. அப்படி இருக்கக் கூடாது என்றும் தோன்றியது.. கல்யாணிக்குள் காதல் மலர்ந்திருக்கக் கூடாது என்று அவன் விரும்பி னான்.. அது ஏனென்று புரியவும் இல்லை.. அவள் யாரோ.. அவன் யாரோ.. அவள் யாரைக் காதலித்தி ருந்தால் அவனுக்கு என்ன..? அந்தக் காதல் தோல்வியாகியிருந்தால்தான் அவனுக்கு என்ன..?

"என்னாச்சு..? கண் கலங்கியிருக்கு..?"

அவனது கேள்வியில் அவள் அவசரமாக இமைகளைச் சிமிட்டினாள்.. படபடவென பட்டாம் பூச்சிகள் சிறகடிப்பதைப் போல அவனுக்கு இருந்தது..

"ஒன்றுமில்லையே.. கண்ணில் ஏதும் டஸ்ட் விழுந்திருக்கலாம்.."

"கொடைக்கானல் காற்றில் டஸ்ட்டா..? தூசு, தும்பு இல்லாத இயற்கைக் காற்று இது.."

"ஈஸிட்..?"

அவள் இயல்பு நிலைக்குத் திரும்பி விட்டாள்.. கைகளை முன்னால் கட்டிக் கொண்டு புருவங்களை உயர்த்தினாள்.. விக்ரம் துணுக்குற்றான்..

'ரூபாவின் மேனரிசம் இதுதானே..'

கல்யாணியின் பாடல், மேனரிசம், என்று எல்லாமும் ரூபாவையே நினைவுறுத்தின.. பேச்சும் நடையுடை பாவனைகள் மட்டும் வித்தியாசப்பட்டன.. கல்யாணியின் நேர்கொண்ட பார்வை ரூபாவிடம் இருந்ததில்லை.. ரூபா கள்ளப் பார்வைதான் பார்ப்பாள்.. கல்யாணியின் பேச்சு மிகத் தெளிவாக, ஆணித்தரமான வாதங்களை முன்னிருத்தும்.. ரூபா கொஞ்சிக் கொஞ்சி செயற்கையாக ஹஸ்கி வாஸ்ஸில் பேசுவாள்.. கல்யாணி இனிமையான குரலில் தெளிவாகப் பேசினாள்..

'ச்சே.. யாரை யாருடன் ஒப்பிடுகிறேன் பார்..'

அருவெறுப்புடன் முகத்தைச் சுளித்த விக்ரம் அவசரமாக..

"வேண்டாத ஓர் நினைவு வந்து தொலைச்சிருச்சு டோன்ட் மிஸ்டேக் மி.." என்று கல்யாணியிடம் விளக்கம் சொன்னான்..

"நான் எதுவும் கேட்கலையே.." புதிரான பார்வை யுடன் அவள் முறுவலித்தாள்..

அவள் இணக்கமாகப் பேசியது பிடித்திருந்தாலும் புதிரான அவளது பார்வை சொல்லுவது என்னவென்று தான் அவனுக்குப் புரிந்து தொலைக்கவில்லை..

'நல்லாத்தான் பேசறா.. நம்பிப் பேசினா பாதியிலேயே பிச்சுக்கிறா.. '

ஆராய்ச்சியாகப் பார்க்கிறேன் பேர்வழியென்று அவன் பார்த்த பார்வை மேய்ச்சல் பார்வையாக மாறித் தொலைத்த விந்தையை அறியவில்லை.. கல்யாணியை கூர்ந்து கவனித்த அவனது எக்ஸ்ரே பார்வையில் அவளது முகம் சிவந்தது.. அவளது முகச்சிவப்பைக் கண்டவனின் உடலில் ஓர்வித ரசாயண மாற்றம் ஏற்பட்டது.. அறியாமல் அவளைப் பார்த்தவன் சுவராஸ்யத்துடன் உற்றுப் பார்க்க ஆரம்பித்தான்..

சிவந்த அவளது முகம் இன்னும் சிவந்ததில் அவன் முகத்தில் விவரிக்க இயலாத ஓர் உணர்வுச் சலனம் வந்தது..

அவள் வெட்கத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.. அவள் மனதில் தென்றலடித்தது.. பேச்சைத் தொடர வேண்டும் போல இருந்தது..

"பிறந்து வளர்ந்தது எல்லாம் லண்டன்தானா..?"

அவன் கேள்வியில் அவள் ஆச்சரியப்பட்டுப் போனவளாக இமைகளை உயர்த்தி அவனைப் பார்த்தாள்..

"என்கிட்டேயா கேட்டிங்க..?"

"நீதானே என் முன்னால் நிற்கிற..? உன்னிடம் கேட்காமல் வேறு யாரிடம் கேட்கப் போகிறேன்..? ஊம்..?"

அவன் இப்போது புருவங்களை உயர்த்தினான்.. அவள் விழிகள் விரிய அவனைப் பார்த்த பார்வையில் அவன் கண்களில் மின்னல் வந்தது.. அவள் தடுமாறினாள்..

"யெஸ்.." என்று முணுமுணுத்தாள்..

"லண்டனில் பிறந்து வளர்ந்த பெண் இவ்வளவு தெளிவா தமிழ் பேசறது ஆச்சரியம்தான்.."

"இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கு..? தமிழ் எங்க தாய்மொழி.. லண்டனில் இருந்தா மட்டும் எங்களுக்கு அது அன்னிய மொழி ஆகிருமா..?"

சண்டைக்கோழி போல அவள் சிலிர்த்துக் கொண்டதை அவன் ரசனையுடன் பார்த்தான்.. அவனிடம் வெட்கத்தையும், நிமிர்வையும் மாறிமாறி அவள் காட்டும் விநோதம் அவனை ஈர்த்தது..

"ஆகாதுதான்.. ஆனாலும் தெளிவாப் பேசறது எப்படின்னு தான் புரியலை.."

"உங்களுக்கு இது மட்டுமா புரியலை..?"

அவள் அரைப் பார்வையில் அவனைக் காந்தம் போலக் கவர்ந்து இழுத்துத் தன்வசப் படுத்தியபடி கேள்வி கேட்ட விதத்தில் அவன் தன்னை மறந்தான்..

"வேறு எது புரியனும்..?"

அவளது புதிர் போகும் பார்வை சொல்லும் கதை என்னவாக இருக்கக்கூடும் என்று அவளது மனதைத் துழாவிக் கண்டு பிடிக்க யத்தனிப்பவனைப் போல அவளது பார்வையோடு அவன் பார்வை பிணையக் கேள்வி கேட்டான் அவன்..

"எத்தனையோ புரியலை.. அதில் ஒன்றை மட்டும் தனித்து சொல்லச் சொன்னா எப்படி..?"

"ஊஹூம்..? அப்படிப் புரியாத புதிரா நான்..?"

"ஊஹூம்.. நீங்க புரிந்து கொள்ள வேண்டியதைப் புரிந்து கொள்ளாத புதிர்.."

"ஆக மொத்தம் நான் புதிர்ன்னு பழி போடற.."

"பழியெதுக்குப் போடனும்..? உண்மை அதுதானே.."

"நீ உண்மை விளம்பி.. நான் பொய் சொல்லி.."

"நீங்க பொய் சொல்லியில்லை மிஸ்டர் விக்ரம்.. உண்மை எது.. பொய் எதுன்னு கண்டு கொள்ள முடியாதவர்.."

விக்ரம் துணுக்குற்றான்.. அவன் மனதிலிருந்த உல்லாசம் அகன்று விட்டது.. அவள் இவனை என்ன சொல்கிறாள்..? எதையும் கண்டு கொள்ளும் திறமையற்றவன் என்றா சொல்கிறாள்..?

"மைண்ட் யுவர் வெர்ட்ஸ் மிஸ் கல்யாணி.. என்னை யார்ன்னு நினைத்த.?" சீறினான்..

அவன் சீற்றத்தைக் கண்டு அவள் அஞ்சவில்லை.. உன் கோபம் என்னை என்ன செய்து விடும் என்ற அலட்சியத்துடன் உதட்டைச் சுழித்து..

"யார் சார் நீங்க..? நிழலை நிஜம்ன்னு நம்பி ஏமாந்தவர்தானே நீங்க..?" என்று கேட்டாள்..

"யு.. ஷட் அப்.."

விக்ரம் அவள் கன்னத்தில் ஓங்கி அறைந்து விட்டான்..

# அத்தியாயம் 12

**செ**ல்ஃபோனின் அலாரத்தில் கண் விழித்த விக்ரம் புரண்டு படுத்து செல்ஃபோனை அணைத்தான்.. எழுந்து உட்கார்ந்தவனுக்குத் தலையை வலித்தது.. இரவு வெகு நேரம் உறக்கமில்லாமல் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தவன் விடியலில்தான் கண்ணயர்ந்தான்..

'ச்சை..! சட்டுன்னு கோபப்பட்டுக் கை நீட்டிட்டேனே.. கெஸ்ட்டா வந்த பெண்.. அவளிடம் நின்று பேசியது நான்தான்.. துடுக்குத்தனமா பேசிட்டா.. வாய் வார்த்தையில் கண்டிப்பதை விட்டுட்டுக் கை நீட்டலாமா..? என்ன மனிதன் நான்..'

தன்னையே நொந்து கொண்டான் விக்ரம்.. கல்யாணியை சமாதானப்படுத்தினால்தான் அவன் மனது சமாதானமாகும் போல தோன்றிவிட அறைக் கதவைத் திறந்தான்..

"சின்னய்யா.. காபி.." சித்ரா காபிக் கப்புடன் எதிரில் வந்தாள்.

"கொடு.." வாங்கிக் கொண்டான்..

"மத்தவங்களுக்குக் காபி கொடுத்துட்டியா..?"

விக்ரமின் கேள்வியில் நின்ற சித்ராவுக்கு, விக்ரமின் கேள்வியைக் கேட்டு வியப்பு வந்தது.

'சின்னய்யா இப்படியெல்லாம் கேக்க மாட்டாரே..'

விக்ரம் அதுபோலக் கேட்டதில்லை.. அதற்கெல்லாம் அவனுக்கு நேரம் இருந்ததில்லை.. வீடு தங்குவது குறைவான நேரம்தான்.. எஸ்டேட், ஹோட்டல் என்று கால்களில் சக்கரங்களைக் கட்டிக் கொண்டு சுற்றிக் கொண்டிருப்பவன்.. அவனுக்குக் காபி, டிஃபன் உணவு வேண்டும் என்றே அவனுக்குத் தெரியாது.. அந்தந்த வேலைகளில் யமுனாவும், விமலாவும் அவனை அதட்டி மிரட்டி சாப்பிட வைப்பார்கள்.. அப்படித் தான் சாப்பிட மறந்து போகும் விக்ரம் மற்றவர்கள் சாப்பிட்டார்களா இல்லையா என்று என்றுமே கேட்டதில்லை.. அந்த விக்ரம்தான் இன்று வீட்டில் உள்ளவர்கள் காபி சாப்பிட்டு விட்டார்களா என்று அக்கறையாகக் கேள்வி கேட்கிறான்..

"ஊம்.. கொடுத்துட்டேன் சின்னய்யா.."

"வீணாவுக்குக் கொடுத்தாச்சா..?"

'இது என்ன சின்னய்யா இப்படிக் கேக்கறாக.. எல்லாத்துக்கும் காபி கொடுத்தாச்சுன்னு இப்பத்தானே சொன்னேன்..? எல்லாருக்கும் கொடுக்கிறப்ப வீணாம் மாவுக்கு மட்டும் கொடுக்காம விட்டிருப்பேனா..?'

தேவையில்லாமல் ஒருவார்த்தை கூடப் பேசாத விக்ரம் திருவாய் மலர்ந்தருளிக் கேட்ட கேள்வியில் தலை கிறுகிறுத்தாள் சித்ரா.. அவளுக்கென்ன தெரியும்.. பக்கத்து இலைக்கு பாயாசம் கேட்டால்தான் தனக்கான பாயாசம் கிடைக்கும் என்ற யுக்தியை விக்ரம் பயன் படுத்துகிறான் என்பது..

வீணாவுக்குக் கொடுத்தாகி விட்டதா என்று கேட்ட பின்னால்தான் கல்யாணியைப் பற்றிக் கேட்க முடியும்.. அதனால்தான் பாசமலரை மலர வைத்துக் கரிசனம் காட்டினான் விக்ரம்..

அவனுடைய நல்ல நேரம்.. அவன் கேட்க வேண்டிய அவசியமில்லாமலே பதில் வந்து விட்டது..

சும்மாவும் வரவில்லை.. கண்ணா லட்டு திண்ண ஆசைபடு என்று கையோடு வாய்ப்பை அள்ளித்தந்தபடி வந்தது..

"கொடுத்துட்டேங்கய்யா.. வீணாம்மா ரூமில இருந்தாங்க.. அவங்களுக்குக் காபி கொடுத்துட்டு பால்கனியில இருக்கிற கல்யாணியம்மாவுக்கும் காபி கொடுத்துட்டேன்.."

'என்னது.. கல்யாணி பால்கனியில் இருக்காளா..?'

'வாவ்..' என்று அவன் மனம் துள்ளிக்குதித்தது.. எங்கே அவள், என்றே மனம், தேடுதே ஆவலால் ஓடிவா என்று பாட்டுப்பாடித் தேட வேண்டிய அவசியமின்றி அவள் பால்கனியில் இருப்பதில் அவன் மனம் குதூகலித்தது..

"அப்படியா..?"

அவன் இயல்பாகக் கேட்பதைப் போலக் கேட்டபடி மாடி ஹாலை ஒட்டியிருந்த பெரிய பால்கனியைப் பார்த்தான்.. அங்கே போடப் பட்டிருந்த நாற்காலிகளில்

ஒன்றில் சாய்ந்து உட்கார்ந்து காபியை உறிஞ்சிக் கொண்டிருந்தாள் கல்யாணி..

"சரி.. நீ போ.."

உத்தரவு கிடைத்து விட்ட சந்தோஷத்தில் சித்ரா ஓடோடி விட்டாள்.. அவள் போய் விட்டாள் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டபின்னால் பால்கனிக்குப் போனன் விக்ரம்.. இவன் வருவதைக் கவனிக்காமல் கொடைக்கானல் மலைச்சரிவின் பசுமையை வெறித்துக் கொண்டிருந்தாள் கல்யாணி.. அவள் முகத்திலிருந்த தீவிரம் விக்ரமைத் தாக்கியது.. அவன் அவளை அடித்து விட்ட விவரத்தை அவள் குடும்பத்தினரிடம் தெரிவிக்கவில்லை.. அது அவனுக்கும் அவளுக்குமான பிரச்னை என்பதைப் போல அவள் நடந்து கொண்டது அவனுக்குப் பிடித்திருந்தது..

"குட்மார்னிங்.."

அவனுடைய குரல் கேட்டதும் அவள் மோனம் கலைந்தவளாய் அவனைத் திரும்பிப் பார்த்தாள்.. அவளது கண்களில் வந்த மின்னலில் அவன் மனம்

சிறகடித்தது.. அவளையே பார்த்தபடி பக்கத்தில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தான்.. அவள் முகம் சிவந்ததில் இவனுக்குள் அதிசயம் வந்தது..

"ஐ'ம் ஸாரி.."

அவன் மன்னிப்புக் கேட்டது காதுகளில் விழுகாததைப் போல அவள் பேசாமல் இருந்தாள்..

"என்னன்னு தெரியலை.. இப்போதெல்லாம் சட்டு சட்டுன்னு கோபம் வந்துதுருது.. என்னைக் கண்ட்ரோல் பண்ணிக்க முடியலை.. நேற்று நீயும் அதிகப்படியா வாய் விட்டுட்ட.."

அவன் சுட்டிக்காட்டியதில் அவள் சட்டென இமைகளை உயர்த்தி ஆழமாக அவனைப் பார்த்தாள்.. துயரம் தேய்ந்த, மனவலியை உணர்த்தும் பார்வை.. விக்ரம் விக்கித்துப் போனான்.. அழகிய அவளது கரும் விழிகளில் மொழி சொல்லும் கதைதான் என்ன..?

"உங்களுக்கு அது அதிகப்படியா இருக்கலாம் மிஸ்டர் விக்ரம்.. எனக்கு நான் பேசியது சரியானதுதான்.." என்றாள் கல்யாணி..

விக்ரமின் விழிகளில் சினம் துளிர்த்தது.. வீட்டிற்கு விருந்தாளியாக வந்திருக்கும் பெண்ணைக் கை தொட்டு அடித்து விட்டோமே என்ற குற்ற உணர்வுடன் அவன் பேச வந்தால் அவள் அதை கேட்டுக் கொள்ளாமல் தான் பேசியது சரிதான் என்று வாதாடுவதா..?

'இவளிடம் போய் பேச வந்தேனே.. இவள் மறுபடியும் கை நீட்ட வைத்து விடுவாள் போல இருக்கே..'

"இதைத்தான் நான் சொன்னேன் விக்ரம்.. உங்களுக்குச் சரின்னு தோன்றுவது மத்தவங்களுக்குத் தவறாகத் தோன்றலாம்.. உங்களுக்குத் தவறுன்னு தோன்றுவது மத்தவங்களுக்குச் சரின்னு தோன்றலாம்.."

மறுபடியும் புதிர்.. விடுவிக்க முடியும் என்ற தோற்றத்துடன் விடுவிக்க முடியாத புதிர்..

'இவள் புதிர் போட்டு விளையாட நான் தான் கிடைத்தேனா..?'

விக்ரமின் அக்கினிப் பார்வையை அவள் பொருட் படுத்தாமல் முகம் திருப்பிக் கொண்டாள்.. மறுபடியும்

தொலைதூர தொடுவானின் சூட்சுமத்தைக் கண்டுணர பிரயத்தனம் செய்பவளைப் போல மலைச்சரிவில் பதிந்தது அவள் பார்வை..

எழுந்து போய் விடலாமா என்று நினைத்தான் விக்ரம்.. ஆனால் அவனால் எழுந்து போக முடியவில்லை.. கால்களுக்குத் தளையிட்டதைப் போல அங்கேயே உட்கார்ந்து விட்டான் எப்படியாவது அவள் போடும் புதிரை விடுவித்து உணர்ந்துவிட வேண்டும் என்ற வேகம் வந்தது..

'பக்கத்தில் உட்கார்ந்து பேசினா மட்டும் சொல்லிடுவாளா..? பழகிப் பார்க்கணும்..'

பழகிப் பார்த்து விட வேண்டும் என்று முடிவெடுத்தான் விக்ரம்..

"ஓகே.. லீவ் இட்.. எங்க ஊருக்கு வந்திருக்கிற.. கொடைக்கானலைச் சுற்றிப் பார்க்கலாமா..?" கோபத்தை அடக்கிக் கொண்டு இயல்பாக பேசுவதைப் போல பேசினான்..

"ஆல்ரெடி கொடைக்கானல் முழுதையும் வீணாவோடு சுற்றிப் பார்த்தாச்சு.." முகம் திருப்பாமல் பதில் சொன்னாள் கல்யாணி..

'போடின்னு சொல்லிட்டுப் போய்க்கிட்டே இருக்கலாமா..,'

கல்யாணியின் வெறித்த பார்வை அப்படி அவன் எழுந்து போய் விடாமல் தடுத்தது..

"வீணாவோடதானே சுற்றிப் பார்த்த..? என்னுடன் சுற்றிப் பார்க்கலாமே.."

"உங்களுடன் சுற்றிப் பார்ப்பதால் பார்த்த இடங்கள் புதிதாக மாறி விடுமா..?"

உடனுக்குடன் பதில் வந்தது.. அவளது அந்தப் பேச்சுத்தான் அவனை ஈர்த்தது.. எப்படி இப்படிப் புத்திசாலித்தனமாக பதில் கொடுக்கிறாள்..

"ஏன்..? மாறாதா..?"

அவனது கேள்வியும் புதிதாக இருந்திருக்கும் போல.. அவளது பார்வையின் சுழற்றி அவனைத்

தாக்கித் திரும்பிக் கொண்டது.. ஆக்டோபஸ் போல அவனது பார்வை அவனைச் சுற்றி வளைத்துச் சுழலுக்குள் இருந்தது..

"எப்படி மாறும்..?"

"அதை வார்த்தைகளால் சொல்ல முடியுமா..? ஃபீல் பண்ணித்தான் தெரிந்துக்கணும்.."

அவனது வார்த்தைகளில் என்ன உணர்த்தாளோ அவள் மௌனமாக எதையோ அசை போடுபவளைப் போல இருந்தாள்.. அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.. அழகான அவளது முகத்தில் அப்பியிருந்த சோகத்தின் சாயலைத் துடைத்தெரிய வேண்டும் போல இருந்தது.. திடிர் திடிரென அவள் சோகத்தில் அமிழ்வதற்கான காரணங்கள் என்னவாக இருக்கக் கூடும்..? படபடவென பேசுபவள் மௌனத்திரையின் மறைவினில் ஒளிந்து கொண்ட விசித்திரத்தின் பிண்ணனி என்ன..?

அவள் ஓர் பெருமூச்சுடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்..

'எதுக்கு இந்தப் பெருமூச்சு..? என்னுடன் வெளிய வருவது அவ்வளவு பெரிய கொடுமையானதா..?'

இந்த ரதியுடன் ஊர்சுற்றிப் பார்க்கத்தான் வேண்டுமா என்று சினம் கொண்டான் விக்ரம்.. போடி என்று எழுந்து கொள்ள முனைந்த போது அவள் கேட்டாள்..

"ஃபீலிங்ஸ்..! உணர்வுகளுக்கு வேல்யூ இருக்கா..?"

அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.. இது போன்ற ஆழமான கேள்விகளிலும் ஆழமான பார்வைகளிலுமே அவனை அவள் பிணைத்துத் தொலைக்கிறாளே.. அதன் மர்மம்தான் என்ன..?

மறைந்திருந்தே தாக்கும் மர்மம் என்ன என்று பாடாத குறையாக அவளைப் பார்த்தவன்..

"வேல்யூ இருக்குன்னுதான் நான் நினைக்கிறேன்.." என்று சொன்னான்..

அதைக் கேட்டவள் உதட்டை வளைத்துச் சிரித்த இகழ்ச்சிச் சிரிப்புக்கு பொருள் என்னவென்றுதான் புரியவில்லை.. எந்த நேரமும் விக்ரமின் கோபம் கரையுடைத்து வெளிக் கிளம்பும் அபாயம் இருந்ததில்

அவன் அங்கே நின்று கொண்டிருந்தால் வேலைக்கு ஆகாது என்று நகரப் போனவன்..

"ஓகே.. நான் உங்களுடன் வருகிறேன்.."

அவளது குரல் அவனைத் தடுத்து நிறுத்தியது..

# அத்தியாயம் 13

அடர்ந்த கானகத்தில் ஜீப் போய் கொண்டிருந்தது.. இருபுறமும் கரும்பச்சை இலைகளுடன் கூடிய மரங்கள்.. நடுவில் இருக்கும் பாதையைத் தவிர மற்ற இடமெல்லாம் சிறுசிறு கற்களும் பெரும் பாறைகளுமாக இருக்கும் தரை.. மரங்களின் இடையே ஓடி வரும் நீரோடை.. நீரோடையின் கரையோரம் அடர்ந்திருக்கும் பூச்செடிகள்..

"இந்த இடத்துக்கு வீணா அழைத்து வரலையே.."

சுற்றிலும் ஆர்வமாகப் பார்த்தபடிச் சொன்னாள் கல்யாணி.. எட்டு ஏக்கர் பரப்பளவில் இருந்த கானகப் பகுதிக்குள் ஜீப் நுழைந்தது.. தனிமையான மலைப்பகுதி.. மனிதர்களின் நடமாட்டம் இல்லை..

"இங்கேயெல்லாம் அவ வர மாட்டா.."

"ஏன்..?"

"இங்கே அசாத்திய அமைதி இருக்கில்ல.. அதுக்கு பயப்படுவா.."

"ஓ.. அப்படின்னா வீணா இங்கே வந்ததே இல்லையா..?"

"கொடைக்கானலில் பிறந்து வளர்ந்தவ இங்கே வராம இருப்பாளா..? இந்த இடத்தோட அமைதியையும், தனிமையையும் பார்க்காம எப்படி உணர முடியும்..?"

விக்ரம் கேட்ட கேள்வியில் அவன் முகம் பார்த்தவளின் விழிகளில் புதிர் குடி வந்தது..

'என்னவோ சொல்லப் போறா..'

"ஏன் விக்ரம்..? பார்க்காம எதையும் ஃபீல் பண்ண முடியாதா..?"

இந்த கேள்விக்குள் என்ன ஒளிந்திருக்கிறது என்பதை உணர்ந்து விட வேண்டும் என்ற வேகம் அவனுக்கு வந்து விட்டது.. அது என்ன.. இவள் எடுத்ததற்கெல்லாம் புதிர் போட்டு அவனிடம் பூச்சாண்டி காட்டிக் கொண்டிருக்கிறாள்..?

"அது எப்படி முடியும்..?"

"உங்களால் முடிந்திருக்கிறதே.."

"வாட் டு யு மீன்..?"

"உங்கள் காதலைப் பற்றி எனக்குத் தெரியும் விக்ரம்.."

விக்ரமின் கண்கள் நெருப்புக் கங்குகளாக ஜொலித்தன.. அவன் கடுங்கோபம் அடைந்தான்.. அவனுடைய அந்தரங்கத்தை எட்டிப் பார்க்க அவளுக்கு என்ன உரிமையிருக்கிறது..?

"யார் சொன்னது..?" சீறினான் விக்ரம்..

"வீணா சொன்னா.."

"இன்றைக்கு இருக்கு அவளுக்கு.."

"ஏன் இவ்வளவு கோபம் விக்ரம்..?"

"என்னுடைய மோஸ்ட் பெர்ஸனல் மேட்டரை தேர்ட் பெர்ஸனிடம் அவள் எப்படிச் சொல்லலாம்..?"

சடாரென அவனைத் திரும்பிப் பார்த்த அவளது விழிகளில் தெரிந்த வேதனையில் அவன் வாயடைத்துப் போனான்.. கண்டிப்பும் கறாரும் நிரம்பியிருக்கும் அவளது விழிகளில் அடிக்கடி இந்த வேதனை வந்து நிரம்புவது ஏன்..?

"ஒருவேளை அவளுக்கு என்னைப் பார்த்தால் தேர்ட் பெர்ஸனாகத் தெரியாமல் இருந்திருக்கலாம்.."

மெல்லிய குரலில் அவள் முணுமுணுத்ததில் அவனுக்கு என்னவோ போல ஆகிவிட்டது..

"ஐ'ம் ஸாரி.." வருத்தத்துடன் சொன்னான்..

அவள் அதற்கென்ன என்று சொல்லாமல் பசும் காட்டை வெறித்தாள்.. தனிமையை விரும்பி அதில் நுழைந்து கொள்ள விரும்பியவளைப் போன்ற அவளது சோர்ந்த தோற்றத்தில் அவன் தன்னைத்தானே நொந்து கொண்டான்..

"அவள் சொல்லனும்னு நினைச்சுச் சொல்லலை மிஸ்டர் விக்ரம்.. என் பாட்டைக் கேட்டா நீங்க ஒரு

மாதிரி ஜெர்க் ஆகறிங்க.. அது ஏன்னு கேட்டேன்.. அதுக்குப் பதில் சொன்னா.. தட்ஸ் ஆல்.."

"இட்ஸ் ஓகே கல்யாணி.. லீவ் இட்.. நான் மிக மோசமாக சறுக்கி விழுந்த இன்ஸிடென்ட் அது.. என் மனதின் காயம் இன்னும் ஆறலை.. தோல்வியைப் பற்றி ஞாபகப் படுத்தினால் யாருக்கும் கோபம் வரும்.. ஹியூமன் நேச்சர் அது.."

"மனதின் காயம் ஆறலையா..? ஏன்..? அந்த ரூபாவை மறக்க முடியலையா..?"

அவன் முகம் பார்க்காமல் அவள் கேட்டாள்..

"சீச்சீ.."

அருவெறுத்த அவனது குரலில் அவனைப் பார்த்த அவளது பார்வையில் தெரிந்தது என்ன..? பரவசமா..? சிலிர்ப்பா..?

அது எதுவாக இருந்தாலும் சில்லென்ற பனித் துகள்களின் சிதறல்கள் மேலே தெறித்து விழுவதைப் போன்ற நூதனமான ஓர் உணர்வை உணர்ந்தான் விக்ரம்..

"அவளைக் காதலித்ததாகச் சொன்னீங்களே.."

அப்புறம் எதற்காக இந்த அருவெறுப்பு என்ற மறைமுகத் துணைக் கேள்வி அவளது இந்தக் கேள்வியில் தொக்கி நிற்பதை உணர்ந்தான் விக்ரம்..

"அவளைக் காதலிக்கலை கல்யாணி.. அவள் பாடிய பாடலைத்தான் நான் காதலித்தேன்.."

மறுபடியும் பனித்துகள்களின் ஜில்லிப்பை சிதற விடும் மின் வெட்டும் பார்வை.. நுண்ணிய உணர்வுகளால் வேயப்பட்ட சுகமான ஓர் பூமாலை அவள் கழுத்தில் விழுந்தது..

"பாடலையா..?"

"யெஸ்.. பாட்டியும், அம்மாவும் பழைய பாடல்களை விரும்பிக் கேட்பாங்க.. அவங்களிடம் இருந்து எனக்கும் அந்தப் பழக்கம் தொற்றிக்குச்சு.. பட்.. அவ பாடிய பாடலை அதுக்கு முன்னாலே நான் கேட்டதே இல்லை.. அதை ரசிச்சுப் பாடின விதமும்.. அந்தப் பாடலின் வரிகளை உணர்ந்து பாடிய லயமும் என்னை இம்ப்ரெஸ் பண்ணிருச்சு.."

அவளது இறுக்கமான முகம் அவள் அவனுடைய காதல் கதைகளைக் கேட்க விரும்பவில்லை என்பதைக் காட்டியது.. அதுவும் அவனுக்குப் பிடித்திருந்தது..

"வீணா இங்கே வந்திருக்கா.. தனியா இல்லை.. ஃபேமிலியோட, என்னோட, அஜய்யோடன்னு வருவா.. அப்பவும் பயப்படுவா.."

கல்யாணி அந்த மலைப்பகுதியைச் சுற்றிப் பார்த்தாள்.. எட்டு ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்திருந்த புல்வெளி.. காதலர்கள் ஓடிப்பிடித்து விளையாட தோதான இடம்.. இப்படிப்பட்ட இடத்தை அஜய் விரும்பியிருப்பதில் ஆச்சரியமேதுமில்லை என்று நினைத்தவளின் இதழோரம் சிரிப்பு முகிழ்ந்தது..

"என்ன..?" விக்ரம் புருவங்களை உயர்த்தினான்..

"அஜய்யும் வீணாவும் லவ்வர்ஸ்தானே..?"

"வீணா சொல்லியிருப்பாளே.."

"சொன்னா.. லவ்வரோட 'பைண் வெல்ஸ்' வந்தா பயம் வருமா..?"

"இதைத்தான் அஜய்யும் சொல்வான்.. அவ கேட்க மாட்டா.."

தங்கையைப் பற்றிப் பேசும்போது அவன் முகம் மிருதுவாக மாறியதைக் கவனித்தாள் கல்யாணி.. அவளது முகமும் மிருதுவானது..

"மலை ஏறுபவர்கள், இயற்கையை ரசித்துப் பார்ப்பவர்கள் விரும்பும் இடம் இது.."

ஜீப் மூலம் சுற்றிக் காண்பித்தபடி சொன்னான் விக்ரம்.. நீலகிரிக் குரங்குகள், இந்தியக் காட்டெருமைகள், மலபார் ராட்சச அணில்கள் என்று எல்லாவற்றையும் காட்டினான்.. டால்மென் சர்க்கிருக்கும் போன போது..

"ஆதி மனிதன் வாழ்ந்த வாழ்க்கைக்கு நம்மை அழைத்துச் செல்லும் இடம்.." என்று அடையாளம் சொன்னான்..

குகைகளுடன் இருந்த அந்த இடம் அப்படித்தான் இருந்தது.. கல்யாணி சிறு குழந்தையின் ஆர்வத்துடன்

விழிகள் விரியப் பார்த்தாள்.. அவளது ஆர்வத்தைப் பார்த்த விக்ரம்..

"லண்டனின் ஹாலண்ட் பார்க்கையெல்லாம் பார்த்து வளர்ந்திருக்க.. எங்க ஊரை இப்படி ரசிக்கிறயே.." என்றான்..

"அது லண்டன்.. இது இந்தியா.."

"அங்கேயும் ஹில் ஸ்டேஷன் இருக்கு.."

"இருக்கட்டும்.."

"தேம்ஸ் நதி இருக்கு.."

பேச்சுவாக்கில் சொன்னவன் சட்டென மௌனமானான்.. கல்யாணியும் மௌனமாகி விட்டாள்.. பேசுவதற்கு எதுவுமே இல்லையென்பதைப் போல இருவரும் ஜீப்பை நோக்கி நடந்தார்கள்.. அடர்ந்த மௌனம் அவர்களைப் போர்வையாக போர்த்திக் கொண்டது.. ஜீப்பைக் கிளப்பிய விக்ரமிடமிருந்து நீண்ட பெருமூச்சு வெளிப்பட்டது.. கல்யாணி திரும்பிப் பார்த்தாள்.. விக்ரம் புருவங்களை உயர்த்தி..

"என்ன..?" என்றான்..

"நத்திங்.." என்றவள்..

"இது உங்க மேனரிசமா..?" என்று கேட்டாள்..

"எது..?"

"இப்படி ஐப்ரோஸை ரெய்ஸ் பண்றது..?"

"மேனரிசம்ன்னு சொல்ல முடியாது.. தானா வருகிறதுதான்.. பட்.. இந்த மேனரிசத்தினால்தான் நான் அவளை நோட் பண்ணினேன்.."

"எவளை..?"

"ரூபாவை.."

விக்ரமை ஆழ்ந்து பார்த்த கல்யாணியின் விழிகள் சொல்வது என்ன..? துயரம் தோய்ந்த அந்த மௌனப் பார்வையின் பிண்ணனி எதுவாக இருக்கக் கூடும்..?

அது எதுவாக இருந்தாலும் கல்யாணி துயரப்படக் கூடாது என்று விக்ரம் நினைத்தான்.. அந்த மனநிலையில் இருந்து அவளை வெளிக்கொணர வேண்டும்.. விக்ரம் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தான்.

"ஒன்றைக் கவனிச்சியா..?"

"இங்கே ஆயிரம் ஒன்று இருக்கிறது.. அந்த ஆயிரம் ஒன்றில் எந்த ஒன்றைப்பற்றி நீங்க கேட்கறீங்கன்னு தெரிந்தால் தேவலை.."

"இடக்கு..?"

"யெஸ் மிஸ்டர் விக்ரம்.."

நிமிர்வாகப் பதிலளித்தாள் கல்யாணி.. அவளது நேர்கொண்ட பார்வையில் கண்டிப்பும், கறாரும் திரும்பி யிருந்தன.. மற்ற பெண்களிலிருந்து வித்தியாசப்படுத்தும் நிமிர்வு அது.. ஒரு மகாராணிக்கே உரிய கம்பீரம் அவளிடம் தென்பட்டது.. அந்த வித்தியாசம்தான் விக்ரமை ஈர்த்தது..

"நம்ம இந்தியாவில் இருக்கிற ஹில் ஸ்டேஷன்களின் அழகை இங்கிலீஸ்காரன்தான் முதலில் கண்டுபிடித்தான்.. பார்க்குகள்ன்னு ஃபார்ம் பண்ணிருவான்.."

"அதுக்கு ஒரு ரீஸன் இருக்கு.."

"என்ன ரீஸன்..?"

"அவங்க குளிர் பிரதேசத்தில இருந்து பழக்கப் பட்டவங்க.. இந்தியாவின் வெப்பத்தை அவங்களாலே தாங்கிக்க முடியாது.. அதனால நம்ம ஊர் மலைகளைக் கண்டுபிடித்து அங்கே டவுனை ஃபார்ம் பண்ணினாங்க.."

கல்யாணியை வியப்புடன் பார்த்தான் விக்ரம்.. அவள் சொல்லிய கோணம் அருமையாக இருந்தது.. இவள் புத்திசாலி என்று நினைத்துக் கொண்டான்.. அவளது பார்வையும், பேச்சும், நிதானமும் காணக் கிடைக்காததாக இருந்தது..

"கொடைக்கானலை உருவாக்கியது ஆங்கிலேயர் தான்.."

"வால்பாறை, ஊட்டி, மூணார்ன்னு எல்லா ஹில் ஸ்டேஷனையும் அவங்கதான் உருவாக்கியிருப்பாங்க.. பட்.. இயற்கையோட அழகை சிதைக்காம அழகு படுத்தியிருப்பாங்க.. அவங்க கண்டுபிடிச்சுக் கொடுத்த இயற்கையை காப்பாத்தாம நாம பிஸினெஸ் மைண்டா பில்டிங் மேல பில்டிங்கா கட்டிக்கிட்டு இருக்கோம்.."

கல்யாணியின் இலகுவான பதிலில் வாய்விட்டுச் சிரித்தான் விக்ரம்.. அவன் சிரிப்பையே அள்ளிப் பருகுவதைப் போல ஆசையுடன் பார்த்தாள் கல்யாணி.. அதை விக்ரம் கவனிக்கவில்லை..

"நீங்க அடிக்கடி சிரிக்கிறதில்லை.. ரேராச் சிரிக்கறிங்க.. இப்படி சிரித்த முகமாய் இருக்கலாமே.."

தன்னையறியாமல் சொல்லிவிட்டாள் கல்யாணி.. விக்ரமின் புருவங்கள் வியப்புடன் உயர்ந்தன..

# அத்தியாயம் 14

**வி**க்ரமுக்கும் கல்யாணிக்கும் இடையில் ஓர் புரிதல் வந்திருந்தது.. இருவரும் இயல்பாகப் பேசிப் பழக ஆரம்பித்தார்கள்..

வீணாவைச் சமாதானப்படுத்த அஜய் அவளுடன் நேரத்தைச் செலவிட, இவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து ஊரைச் சுற்றினார்கள்..

கல்யாணியின் கண்டிப்பையும் கறாரையும் தாண்டி வெளிப்பட்ட பல குணாதிசியங்கள் இனிமையானவையாக இருந்தன.. அவள் சிரித்தாள்.. அவனைச் சிரிக்க வைத்தாள்.. இயற்கையை ரசித்தாள்.. அது குறித்த அவளது பிரமிப்பை மறைக்காமல் வியந்தாள்.. வாதம் செய்தாள்.. புரிதலுடன் பேசினாள்..

ஒரு பெண்ணுடன் பேசிப் பழகுவது இவ்வளவு இதமாகவும், இன்பமாகவும் இருக்க முடியுமா..? விக்ரம் பெண்களை அறியாதவன் அல்லவே.. ரூபாவைக்

காதலித்தவன்.. அவளுடன் பேசிப் பழகியது இத்தகைய உணர்வைத் தரவில்லையே..

தினம் ஒரு இடம் என்று சுற்றினாலும் தவறாமல் ஏரியில் படகு சவாரி செய்து விட்டு பிரியண்ட் பார்க்கில் உலாவியபடி பேசுவதை வழக்கப்படுத்திக் கொண்டார்கள்..

அப்படி ஏரியில் படகுசவாரி செய்த ஓர் மாலை நேரத்தில் தன்னை மறந்து பாடினாள் கல்யாணி..

**"எனக்காக வா - நான்..**

**உனக்காக வா..**

**என்னைக் காணவா - என்னில்**

**உன்னைக் காண வா.. வா.."**

விக்ரம் அசைவற்றுப் போனான்.. நீரின் சலனம்கூட அவளது பாடலை இடையூறு செய்து விடக் கூடும் என்று படகை இயக்காமல் நீரில் மிதக்க விட்டான்..

**"மலர் மீது பனி தூங்க..**

**மரம் மீது கனி தூங்க..**

மலை மீது முகில் தூங்க..

மடி மீது நீ தூங்க..

எனக்காக வா - நான்

உனக்காக வா.."

இருகரம் நீட்டி அவனை அழைக்கும் பாடல்.. அவளது மடிமீது தலைசாய்க்கும் ஆவலைத் தூண்டும் பாடல்.. அனைத்தையும் மறந்து அவளிடம் அடைக்கலமாகி விடத் தூண்டும் பாடல்..

"நீராட நதியா இல்லை..?

நிழல் தேட இடமா இல்லை..?

பசியாற உணவா இல்லை..?

பகிர்ந்துண்ண துணையா இல்லை..?

எனக்காக வா - நான்

உனக்காக வா.."

கரைக்குத் திரும்பிய இருவரும் பேசிக் கொள்ளவில்லை.. பேச்சற்ற மௌனம்கூட சில தருணங்களில் நன்றாக இருக்கும்..

"கோக்கர்ஸ் வாக் போகலாமா..?"

கல்யாணி தலையை அசைத்தாள்.. இருவருக்குமே நீண்ட பாதையில் நடக்க வேண்டும் போல இருந்தது.. முதலில் பேசாமல்தான் நடந்தார்கள்.. விக்ரம்தான் பேச்சை ஆரம்பித்தான்..

"இந்தப் பாட்டுத்தான் என்னை இம்பரெஸ் பண்ணுச்சு.."

கல்யாணி அப்படியா என்று கேட்கவில்லை.. இடப்பக்கமாகத் தெரிந்த மலைச்சரிவை வெறித்தாள்..

"இதே பாட்டைத்தான் அவ பாடினா..?"

வெகுண்டு திரும்பினாள் கல்யாணி.. விக்ரம் திகைத்தான்.. அவன் தவறாக ஏதும் சொல்லி விட்டானா..?

"எவ பாடினா..?"

"ரூபா.."

"அவதான் இந்தப் பாடலைப் பாடினான்னு உங்களுக்குத் தெரியுமா மிஸ்டர் விக்ரம்..?"

உதட்டை வளைத்து இகழ்ச்சியாக அவள் கேட்டாள்.. தன் உணர்வுகள் அலட்சியப் படுத்தப்படுவதைப் போல விக்ரம் உணர்ந்தான்..

"யெஸ்.. ஐ நோ.."

"ஊஹும்..?"

மறுபடியும் அதே கேலி.. உதட்டுச் சுழிப்பு..

"உங்களுக்கு அவ்வளவு நிச்சயமாத் தெரியுமா..?"

"பாட்டைக் கேட்டது நான்.. பழகிப் பார்த்து நான்.. எனக்குத் தெரியாதா..?"

"எல்லோருக்கும் எல்லாமும் தெரிந்து விடாது விக்ரம்.. நீங்க அவளிடம் பழகிப் பார்த்திருக்கலாம்.. அவள் இந்தப் பாடலைப் பாடிக் கேட்டிருக்க முடியாது.. ஏன்.. அவ பாடியே நீங்க கேட்டிருக்க மாட்டிங்க.."

கல்யாணி விரைந்து நடந்து விட்டாள்.. விக்ரம் சிலையாக சமைந்து நின்றான்.. கல்யாணி சென்று வெகு நேரமாகி விட்டது என்பதை மனது அறிவுறுத்த காருக்குத் திரும்பினான்.. அவள் கார் மீது சாய்ந்து நின்றிருந்தாள். அவன் வருவதைக் கவனிக்கவில்லை.. பனி மூடிய மேற்கு மலைச்சாரல்மீது அவளது பார்வை படிந்திருந்தது.. அவளது பார்வையின் தீவிரத்தில் அவனது புருவங்கள் முடிச்சிட்டன.. ஏன் இந்தத் தீவிரம்..? அவள் எதைச் சொல்ல வருகிறாள்..? எதைச் சொல்ல விழைகிறாள்.. விடுகதையே.. விடைதான் என்ன..?

காரில் வரும்போது இருவரும் பேசிக் கொள்ள வில்லை.. அவளது கோப முகத்திலிருந்து அவனால் எதையும் கண்டறிய முடியவில்லை.. அவளுக்கு யார்மீது கோபம் என்று கேட்டறியவும் முடியவில்லை.. எதனால் அவள் பாதிக்கப்பட்டிருக்கிறாள் என்று வெளிப்படையாக கேட்க முடியாமல் தவித்தான் விக்ரம்..

எது எப்படியிருந்தாலும் ஒன்றை மட்டும் மிகத் தெளிவாக உணர்ந்தது அவன் மனம்.. அவனால்

கல்யாணியின் மௌனத்தையும் கோபத்தையும் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்பதுதான் அது..

மறுநாள் கொஞ்சம் தெளிவாக இருந்தாள்.. அவன் வெளியே போகலாமா என்று கேட்டபோது மறுக்காமல் கூட வந்தாள்.. குறிஞ்சி ஆண்டவர் கோவிலுக்குப் போனார்கள்.. கல்யாணியின் மனக் கலக்கத்திற்கு கோவிலுக்கு அழைத்துச் செல்வது நல்லது என்று விக்ரமுக்குத் தோன்றியது..

முருகக் கடவுளை தரிசித்து வெளியே வந்தபோது விக்ரம் சொன்னான்..

"இங்கே பனிரெண்டு வருஷங்களுக்கு ஓர்முறை மலரும் குறிஞ்சி மலர் இருக்கிறது.. உன் சிரிப்பைப் போல அது அரிதானது.."

அவள் முகத்தையே கூர்மையாக பார்த்த வண்ணம் அவன் சொல்ல, அவள் மெல்லச் சிரித்தாள்..

"என் சிரிப்பு அரிதானதா..?"

"அரிதானது மட்டுமில்லை.. குறிஞ்சி மலரைப் போல அழகானதும் கூட.."

"நல்லாத்தான் பேசறிங்க.. இவ்வளவு கெட்டிக்காரத் தனமாய் பேசுகிறவர் ரூபா மாதிரிப் பெண்ணிடம் ஏமாந்ததுதான் ஆச்சரியம்.."

'அவ பேச்சை இப்ப எதுக்குப் பேசறா..?'

விக்ரம் முகம் மாறினான்.. அவனது பலவீனமான பக்கத்தை கல்யாணி சொல்லிக் காண்பித்துக் கொண்டே இருப்பதைப் போல உணர்ந்தான்.. அதை அவன் விரும்பவில்லை.. அவனுக்கும் கல்யாணிக்குமான பேச்சின் இடையே ரூபாவைப் பற்றிய பேச்சு ஏன் வர வேண்டும்..? அதற்கான தேவையே இல்லையே..

"என்ன செய்வது..? பெண்களின் நடிப்பைப் பற்றித் தெரியாததினால் ஏமாந்து விட்டேன்.."

"பெண்களின் நடிப்பா..? எப்படி ஒட்டு மொத்தப் பெண்களையும் நீங்கள் சொல்லலாம்..?"

"நான் ரூபாவைப் பற்றித்தான் சொன்னேன்.. அவளும் உன்னைப் போல ஒரு பெண்தானே.."

"என்னைப் போலவா..?"

கல்யாணியின் முகம் மாறியது.. விக்ரம் மனதுக்குள் திருப்தியாக உணர்ந்தான்.. அனுபவி ராணி அனுபவி.. இது போலதானே எனக்கும் இருந்திருக்கும்..? என் மனமும் வலித்திருக்கும்..?

"வீட்டுக்குப் போகலாம்.."

"ஏன்..? இப்படியே சில்வர் ஃபால்ஸ் வரைக்கும் போய் வரலாமே.."

"எனக்குத் தலையை வலிக்கிறது.."

அப்படியா என்று குதூகலித்தது விக்ரமின் மனம்.. தலைவலியா வருது தலைவலி..? வரட்டும்.. வரட்டும்.. நன்றாக வெற்றிலை பாக்கை வாங்கி வைத்து வரவேற்கிறேன்.. குரூரமாக நினைத்துக் கொண்டான்..

பங்களா ஹாலில் வீணா சோபாவில் சரிந்து செல்ஃபோனை நோண்டிக் கொண்டிருந்தாள்.. யமுனாவும், விமலாவும் லேடிஸ் கிளப்பைச் சேர்ந்த பணக்காரப் பெண்மணி ஒருத்தியைப் பற்றிப் புறம் பேசிக் கொண்டிருந்தார்கள்.. விக்ரமும், கல்யாணியும் உம்மென்று உள்ளே வருவதைக் கண்டதும் வீணா

செல்ஃபோனையும், விமலாவும், யமுனாவும் புறம் பேசுவதையும் மறந்து நிமிர்ந்து உட்கார்ந்தார்கள்..

"என்ன கல்யாணி.. இப்பத்தான் அவுட்டிங் போனிங்க.. அதுக்குள்ளே திரும்பி வந்துட்டிங்க..?"

"ஹெட் ஏக் வீணா.."

கல்யாணி தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார யமுனா பரிவுடன் பக்கத்தில் வந்தாள்..

"அடடா.. ரொம்பத் தலைவலிக்குது போல.. விமலா.. சித்ராகிட்டச் சொல்லிக் காபி கொண்டு வரச் சொல்லு.."

'அதை அவகிட்ட சொல்லச் சொல்லி என்னிடம் சொல்வதற்கு நீங்களே சொல்லிவிட வேண்டியதுதானே..'

மனதுக்குள் கோபம் வந்தாலும், அதை கல்யாணி இருப்பதால் மறைத்துக் கொண்ட விமலா.. தேனினும் இனிய குரலில்..

"இதோ அத்தை.." என்று சொல்லி வீணாவுக்கு மயக்கத்தை வர வைத்தாள்..

நீதானா அந்தக் குயில் என்பதைப் போல இமைகளைக் கொட்டி அம்மாவை அடையாளம் பார்த்த வீணா..

"மம்மி.." என்ற ஆச்சரியம் காட்டினாள்..

"உன் மம்மியை இப்போத்தானே புதிதாப் பார்க்கிற.. போவியா.." மகளை மிரட்டிய விமலா..

"சித்ரா.. சூடா ஒரு கப் காபி கொண்டு வா.. நம்ம கல்யாணிக்கு தலை வலிக்குதாம்.." என்று சித்ராவுக்குக் குரலும் கொடுத்தாள்..

"எங்கேடா போனீங்க..?" பேரனிடம் சந்தேகமாக விசாரித்தாள் யமுனா..

"எதுக்கு இந்த டவுட்..? சூஸைட் பாயிண்டுக்கு ஒன்றும் கூப்பிட்டுக்கிட்டுப் போகலை.. குறிஞ்சி ஆண்டவர் கோவிலுக்குத்தான் போனோம்.." விக்ரம் எரிந்து விழுந்தான்..

"சரியாப் போச்சு போ.. வயசுப் பெண்ணைக் கண்ட கொடைக்கானல்காரன், லேக், பார்க்குன்னு சுத்துவான்.. உன்னைப் போல கோவில் கோவிலாவா சுற்றுவான்..?"

யமுனா முகவாயில் கை வைக்க, வீணா விழுந்து விழுந்து சிரித்தாள்.. காபி கொண்டு வந்த சித்ரா சிரிப்பை அடக்க முயன்றதில் விக்ரமின் ரத்த அழுத்தம் எகிறியது.. அவன் முறைத்த முறைப்பில் சித்ராவின் சிரிப்பு ஓடிவிட, அடுத்த அவளும் ஓடோடினாள்..

# அத்தியாயம் 15

'**எ**ல்லாம் இவளால் வந்தது..'

அவன் கல்யாணியை முறைத்தான்.. அவளோ நடந்து கொண்டிருப்பதற்கும் அவளுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்பதைப் போல ஒட்டாத பார்வை பார்த்து வைத்தாள்..

'பகல்ல பூரா கொடைக்கானலில ஜோடி போட்டுச் சுற்றிட்டு சாயங்காலமா வீட்டுக்கு வந்ததும் 'யார் நீ'ன்னு பார்வை பார்க்க இவளால் மட்டும்தான் முடியும்..'

அவ்வாறு நீ யாரோ, நான் யாரோ என்று பார்த்து வைத்ததுடன் நிறுத்திக் கொண்டாளா என்றால் அதுவும் செய்யவில்லை.. அவனுடன் பேச்சு வார்த்தையே கிடையாது என்பதைப் போல முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.. அந்த நொடிகளின் ஆகப் பெருஞ்செயல் காபி அருந்துதல் என்று உறுதி படுத்துவதைப் போல காபியைச் சொட்டுச் சொட்டாக ரசித்து உறிஞ்சினாள்.. உறிஞ்சி, உறிஞ்சி காபி குடிப்பதை ஒலிம்பிக்

விளையாட்டில் அவள் கலந்து கொண்டிருப்பதைப் போல ஆழ்ந்து பார்த்து அயர வைத்தாள் யமுனா..

"காபி குடிச்சாச்சா..?" என்று அதை உறுதி படுத்திக் கொள்ளவும் செய்தாள்..

"குடிச்சுட்டேன் பாட்டி.." கல்யாணி காலி காபிக் கப்பை டீப்பாயின் மீது வைத்தாள்..

"விமலா.. கல்யாணி காபி குடிச்சுட்டா.."

யமுனா குதூகலிக்க..

"விழா எடுக்கப் போறிங்களா பாட்டி..?" என்று சிரிக்காமல் கேட்டு வைத்தான் விக்ரம்..

"போடா.. உனக்குப் பொறாமை.."

"எனக்கு..? பொறாமை..? இவள் மீது..?"

"ஆமாம்டா.. ஆமாம்.."

விக்ரம் கால்மீது கால் போட்டு உட்கார்ந்து கல்யாணியை ஒரு மார்க்கமாகப் பார்த்தான்.. அவள் அதே கண்டிப்பும் கறாரும் மிக்கக் கனிவில்லாத முறைப்பைத் தந்து விட்டு..

"நான் மாடிக்குப் போறேன் பாட்டி.." என்று யமுனாவிடம் சொன்னாள்..

"போ கண்ணம்மா.. போய் தூங்கு.." யமுனா ஆதரவாக கல்யாணியின் தலைமுடியைக் கோதிவிட..

"தொட்டில் கட்டிப் போட்டு ஆட்டி விடலாமே.." என்று ஆலோசனை சொன்னான் விக்ரம்..

"உனக்கேண்டா இந்தக் காண்டு..?" விமலா கோபித்துக் கொண்டாள்..

"பாட்டியோட நீங்களும் கூட்டுச் சேர்ந்தாச்சா.." கிண்டலாகக் கேட்டான் விக்ரம்..

"நானும்தான் கூட்டணி.. இப்ப என்னாங்கிற..?" வீணா போர் முரசு கொட்டினாள்..

"ஆக.. வீட்டு மகன் தனிச்சு நின்னாச்சு.. எங்கிருந்தோ வந்தவங்க எல்லாம் இம்பார்ட்டண்ட் மெம்பர் ஆகியாச்சு.." விக்ரம் தோள்களைக் குலுக்கினான்..

கல்யாணி விருட்டென்று எழுந்து மாடியில் ஏறினாள்.. விக்ரம் குரல் கொடுத்தான்..

"பார்த்து.. படி வழுக்கி விடப் போகுது.."

கல்யாணி திரும்பி உக்கிரமாக முறைத்து விட்டுப் போய் விட்டாள்.. விக்ரம் செய்வது சரியில்லை என்று விமலா குற்றப் பத்திரிக்கை வாசித்தாள்.. அதை வீணா ஆமோதித்தாள்.. யமுனா ஏற்றுக் கொண்டாள்..

"லண்டன் போய் படிச்சுட்டு வந்து என்ன பிரயோஜனம்..? என் பேரன் மேனர்ஸ்ன்னா கிலோ என்ன விலைன்னு கேட்கிறான்.."

"பாட்டி.. வேண்டாம் சொல்லிட்டேன்.."

"இதுவரைக்கும் சொன்னது போதாதா..? இதுக்கு மேலேயும் சொல்லிருவியா..?"

"அவ ஆடற டான்ஸுக்கு வீடே ஜிங்க்ச்சா, ஜால்ரா போடுவீங்களா..?"

"ஆமாண்டா.. நாங்கள்ளாம் தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகள்தான்.. சொல்ல வந்துட்ட.."

"சொல்ல வந்தா, நீங்க எல்லோரும் கேட்டுட்டுத்தான் வேறு வேலை பார்ப்பீங்க..?" விக்ரம் கோபத்துடன் எழுந்தான்..

"என்னடா செய்யப் போற..? கோவிலுக்குக் கூப்பிட்டுக்கிட்டுப் போய் அந்தப் பெண்ணுடன் சண்டை போட்டுத் தலைவலி வர வைத்தது போதாதுன்னு ரூமுக்குப் போய் அதட்டப் போறியா..?" யமுனா வழி மறித்தாள்..

"அவளுக்குத் தலைவலி வர வைத்தது நான்தான்னு முடிவே பண்ணிட்டிங்களா..?"

விக்ரம் தலையில் அடித்துக் கொண்டு வெளியே கிளம்பினான்.. விமலா கேள்வியாகப் பார்க்க..

"ஹோட்டலுக்குப் போகிறேன்ம்மா.." என்று உறுமினான்..

"அதை மெதுவாத்தான் சொன்னாலென்ன..?"

"எங்கே..? நீங்க மெதுவாய் பேச விட்டால்தானே.."

விக்ரம் எரிச்சலுடன் போர்டிகோவுக்குப் போனான்.. கார் கதவைத் திறக்கப் போனவனைத் தடுத்து நிறுத்தியது வீணாவின் குரல்..

"உனக்கும் கல்யாணிக்கும் இடையில் எதுவும் பிராப்ளமா அண்ணா..?"

விக்ரம் கார் கதவை மூடிவிட்டு மூச்சை இழுத்து விட்டுத் தன்னை ஆஸ்வாஸப்படுத்திக் கொண்டான்.. முடிந்தவரை நிதானப்படுத்திக் கொண்டவன்..

"முதலில் இதுக்குப் பதில் சொல்லு. எனக்கும் அந்தக் கல்யாணிக்கும் இடையில் என்ன இருக்கு..?" என்று பல்லைக் கடித்தான்..

"தோடா.. எதுவும் இல்லாமல்தான் தினமும் அவளுடன் ஒட்டுச் சேர்ந்துக்கிட்டு ஊர் சுற்றுகிறா யாக்கும்..? நான் இதை நம்பனுமாக்கும்..?"

"ஹேய்.. நீ நம்பினால் நம்பு.. நம்பா விட்டால் போ.. ஐ டோன்ட் கேர்.."

"அவளை மட்டும் கேர் பண்ணுவ.."

"யாரு..? நான்..? அவளை கேர் பண்றேன்..?"

"யெஸ்.. மை டியர் பிரதர்.."

"அந்த முசுட்டு மூஞ்சியுடன் டைம் ஸ்பெண்ட் பண்றதே பெரிது.. இதில அவளை கேர் பண்ணி.. ஸ்ஸ்ப்பா.. கண்ணைக் கட்டுது.."

"யார் உன் கண்ணைப் பொத்தி விளையாடியது..? கல்யாணியா..?"

"ஆமாம்.. சூஸைட் பாயிண்டில் நானும் அவளும் கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடினோம்.. நீ பார்த்த.."

"அதுக்கு ஏன் சூஸைட் பாயிண்டுக்குப் போற..? பிரெண்ட் பார்க் எதுக்கு இருக்கு..?"

"இரு.. பார்க்குகிட்டக் கேட்டுட்டு வந்து சொல்றேன்.."

"ஜோக்கு..? சிரிப்பு வரல.."

"நானும் எதிர்பார்க்கல.."

"உனக்கு ஏன் கல்யாணியைப் பிடிக்கல..?"

வீணாவின் கேள்வியில் தங்கையைக் கூர்ந்து பார்த்தான் விக்ரம்..

"கேள்வி கேட்டாப் பதில் சொல்லனும்.. இப்படி எக்ஸ்ரே பார்வை பார்க்கக் கூடாது.." தமையனை அதட்டினாள் தங்கை..

"எனக்கு ஏன் அவளைப் பிடிக்கணும்..?"

"இதோபார்.. நான் கேள்வி கேட்டா, என்னை எதிர் கேள்வி கேட்டு மடக்காதே.. நம் வீட்டுக்கு கெஸ்ட்டா வந்திருக்கிற ரிலேட்டிவ் அவ.. அவளை ஏன் பிடிக்கலைன்னு கேட்டா, ஏன் பிடிக்கணும்னு குதர்க்கமாக் கேட்கிற.."

"லுக் வீணா.. அவளிடம் சொல்லி வை.."

"எவளிடம்..? கல்யாணியிடமா..?"

"யெஸ்.."

"என்ன சொல்லி வைக்கணும்..?"

"என்னிடம் பேசறப்ப யோசித்துக் கவனமாப் பேசனும்னு சொல்லி வை.. பாவம்.. நம் வீட்டுக்கு

கெஸ்ட்டா வந்திருக்கிறாளேன்னு பார்த்தா அவ ரொம்பத்தான் ஃபிலிம் காட்டறா.."

"நம்ம வீட்டுக்கு கெஸ்ட்டா வந்தா அவ பாவம்தான்.."

"நான் என்ன சொல்றேன்.. நீ என்ன பேசற..? பி சீரியஸ் வீணா.."

"நீ ஒருத்தன் சீரியஸா இருக்கறதையே வீடு தாங்கலை.. இதில நானும் சீரியஸா இருந்தா விளங்கிரும்.."

"நீயாச் சொல்லி வைத்தா அவளுக்கு நல்லது.. நான் சொன்னேன்னு வை.. அவ தாங்க மாட்டா.."

விக்ரம் கோபத்தைக் கக்கியதில் வீணா யோசனையானாள்..

"உனக்கு எதுக்கு இவ்வளவு கோபம் வருது..?" என்று தமையனிடம் கேட்டாள்..

"இவ யாரு ரூபாவைப் பத்திப் பேசறதுக்கு..?"

"ரூபாவைப் பற்றிப் பேசினாளா..?"

வீணா புதிதாகக் கேட்பதைப் போலக் கேட்க விக்ரம் எரிமலையானான்..

"ஓங்கி ஒரு அறை விட்டேன்னா உன் ஒன்பத்தியிரண்டு பல்லும் உதிர்ந்துரும்.."

"அவ்வளவுதான்.. பச்சரிசிப் பல் வரிசையோடு இருக்கிற போதே உன் ஃபிரண்ட் கண்ட்ரோலில் இருக்க மாட்டேங்கிறான்.. இருக்கிற பல்லும் உதிர்ந்திருச்சுன்னா திரும்பிக் கூடப் பார்க்க மாட்டான்.. கிழவின்னு பட்டம் கட்டிட்டுப் போய்கிட்டே இருப்பான்.."

"சிரிக்காதே வீணா.. ரூபாவைப் பற்றிக் கல்யாணியிடம் அத்தனையையும் சொல்லிவிட்டு இப்ப ஒன்றும் தெரியாதவளைப் போலக் கேட்கிறயா..? உன்னை யார் என் பெர்ஸனல் விஷயத்தைப் பற்றி அவளிடம் பேசச் சொன்னது..?"

"இல்லையே அண்ணா.. நான் ரூபாவைப் பற்றிக் கல்யாணியிடம் சொல்லவே இல்லையே.."

"என்னது..?"

விக்ரமிற்கு அவன் செவிகளை நம்பமுடியவில்லை.. கல்யாணி அப்படித்தானே சொன்னாள்.. ரூபாவைப் பற்றி வீணா சொன்னதாக சொன்னாளே.. வீணா சொல்லவில்லையென்றால் அவளுக்கு ரூபாவைப் பற்றி எப்படித் தெரியும்..?

"ஆர் யூ ஷ்யூர்..?"

"யெஸ் அண்ணா.. ஐ ஆம் ஷ்யூர் எபௌட் இட்.. உன் பெர்ஸனலைப் பற்றிக் கல்யாணிக்கு எப்படிப் பேசுவேன்..? அவள் நல்லவள்தான்.. அதற்காக உன் பெர்ஸனலைப் பற்றி அவளிடம் பேசி விடுவேனா..? நீ எப்படி அண்ணா நான் சொன்னதாக நினைக்கலாம்..?"

"நானாக நினைக்கலை வீணா.. அவள்தான் அப்படிச் சொன்னாள்.."

"யார்..? கல்யாணியா..?"

"ம்ம்ம்.."

"நான் அவளிடம் கேட்கவா..?"

"வேண்டாம்.. நானே அவளிடம் கேட்டுக் கொள்கிறேன்.. உனக்கு இதைப் பற்றித் தெரியாததைப் போல இருந்துவிடு.."

"ஏன்..?"

"அவள் விளையாடுவது என்னிடம்.. பதிலடியை நான்தான் கொடுக்கணும்.."

விக்ரம் வீணாவின் கையைத் தட்டிக் கொடுத்து விட்டுக் ஹோட்டலுக்குப் போய்விட்டான்.. மனமெல்லாம் கல்யாணியைப் பற்றிய நினைவுதான்..

# அத்தியாயம் 16

"**அ**தோ தெரிகிறது பார்.. அதுதான் பழனிமலை.."

வீணா சுட்டிக்காட்டிய திசையில் தெரிந்த மலையைப் பார்த்த கல்யாணி கன்னத்தில் போட்டுக் கொண்டாள்.. இளநகையுடன் அதைக் கவனித்த வீணாவிடம்..

"ஏன் அப்படிப் பார்க்கிற..?" என்று கேட்டாள்..

"லண்டனில் பிறந்து வளர்ந்தாலும் நம்ம ஊர் பெண் போல கடவுள் நம்பிக்கையோட இருக்கிறயே.. கல்ச்சர் மாறல.."

"எங்கே பிறந்து வளர்ந்தாலும் நம்ம ஊர் பழக்க வழக்கங்களோடு வளர்ந்தா நம்ம ஊர் கல்ச்சர்தானா வந்திட்டுப் போகுது.. இது ஒரு பெரிய விஷயமா..?"

"கேசுவலாச் சொல்லிட்ட பாரு.. அங்கே நிற்கிற நீ.."

"இல்லையே நான் இங்கேதான் நிற்கிறேன்.."

'முகத்தில் துளிக்கூட சிரிப்பில்லாமல் ஜோக்கடிக்க இவளால்தான் முடியும்..' என்று நினைத்துக் கொண்டாள் வீணா..

இதுவே விக்ரம், அஜய்யாக இருந்தால் சிரிப்பு வரலை என்று சொல்லியிருப்பாள்.. சொன்னது கல்யாணி என்பதால் போனால் போகிறது என்று உதட்டை வளைத்து வைத்தாள்..

கல்யாணி சோர்ந்து தெரிந்தாள்.. அடிக்கடி பெருமூச்சு விட்டாள்.. எதையோ தொலைத்து விட்டுத் தேடுவதைப் போல தொடுவானையே வெறித்தாள்.. இரண்டு நாள்களாக அப்படித்தான் இருக்கிறாள்.. குறிஞ்சி ஆண்டவர் கோவிலுக்குப் போனோம்.. அடுத்து கோக்கர்ஸ் வார்க்கிற்குப் போய் தலைவலியை இழுத்துக் கொண்டு வந்தோம் என்று விக்ரமும் அவளும் வந்து சேர்ந்ததிலிருந்து அவளும் விக்ரமும் பேசிக் கொள்வதில்லை.. டைனிங் ஹாலில் இருவரும் சந்தித்துக் கொள்வார்கள்தான்.. அப்போதும் கல்யாணி வீட்டுக்குள் எதிர்படும் தருணங்களிலும் என்னவோ அவள் விக்ரமின் சொத்துக்களையெல்லாம் கொள்ளையடித்து விட்டதைப்

போல அவன் அவளை உறுத்துப் பார்ப்பான்.. பதிலுக்கு துறவறம் வாங்கிக் கொண்டு மேற்கு தொடர்ச்சி மலைச்சாரலில் கிழக்குப் பார்த்து உட்கார்ந்து தவம் செய்கிறவளைப் போல அவள் வெறுமையாகப் பார்த்து வைப்பாள்.. அவனது புருவங்கள் முடிச்சிடும்.. உற்றுப் பார்ப்பவனை யாரோ எவரோ என்று வழியில் போகும் வழிப்போக்கனைப் பார்ப்பதைப் போலப் பார்த்து விட்டு அவள் நகர்ந்து விடுவாள்..

'இது என்னுடைய பங்களாவா.. இவளுடைய பங்களாவா..? இந்த வீட்டுக்கு கெஸ்ட்டா வந்திருக்கிறது இவளா.. இல்லை நானா..?' விக்ரமுக்கு சந்தேகம் வந்து விடும்..

"வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்காம வெளியே போய்ட்டு வாம்மா.." யமுனா வற்புறுத்தினாள்..

"யெஸ்.. யெஸ்.. டேய் விக்ரம்.. இவளை அவுட்டிங் கூப்பிட்டுக்கிட்டுப் போ.." விமலா மகனுக்கு உத்தரவிட்டாள்..

விக்ரம் கல்யாணியைப் பார்த்தான்.. அவள் எங்கோ பார்த்தாள்.. அவன் எரிச்சலுடன் குடும்பத்தையே முறைத்து விட்டுப் போய் விட்டான்.. அவனது முதுகை வெறித்தபடி அசைவில்லாமல் உட்கார்ந்திருந்தாள் கல்யாணி..

"இவன் ஏன்டி இப்படிப் போறான்..?" யமுனா வீணாவிடம் விசாரணைக் கமிஷன் வைத்தாள்..

"அதை உங்க பேரனிடம்தான் கேட்கணும்.. என்னிடம் ஏன் கேட்கறிங்க..?" வீணா சண்டைக்குக் கிளம்பினாள்..

"அவனிடம் கேட்க யாருக்கு தைரியமிருக்கு..?" விமலா அலுத்துக் கொண்டாள்..

"ஈஸிட்..? உனக்கு இல்லையா..?" ஜனார்த்தனம் மனைவியை வம்பிழுத்தார்..

"ஓ.. என்னிடம் கொஸ்டின் பண்றீங்களே.. உங்களுக்கு இருக்கா..?" விமலா மடக்கினாள்..

"விடுடி.. விடுடி.." ஜனார்த்தனம் ஜகா வாங்கினார்..

"என் பேரன் போல யாரு உண்டு..?" ஜெகந்நாதன் பெருமையாகப் பாடினார்..

"அவனுக்கு வளர்ந்திருக்கிற வாலு எங்கேயிருந்து வந்திருக்குன்னு நினைக்கிற..? எல்லாம் உங்க தாத்தா விடமிருந்து வந்ததுதான்.." யமுனா வீணாவிடம் புகார் சொன்னாள்..

"நீ பேசாம வீணாவுடன் அவுட்டிங் போ கல்யாணி.." என்றாள் விமலா..

"ஆமாமாம்.. விக்ரம்கூட அவுட்டிங் போனா தலைவலியை வாங்கிக்கிட்டு வரனும்.. வீணாவோட வெளியே போனா ஊரையே விலைக்கு வாங்கிட்டு வரலாம்.." யமுனா உற்சாகமாக ஆலோசனை சொன்னாள்..

அதைக் கேட்டுக் கொண்டிருந்த சித்ரா 'களுக்' கென்று சிரித்துவிட, அப்போதுதான் மாடியிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த விக்ரம் அவளைக் கொலை வெறியோடு பார்த்தான்..

'ஆத்தி.. ஐயா வர்றாரு..'

மறுநொடியில் சித்ரா அங்கிருந்து மாயமாக..

"இது என்னடி விட்டலாச்சார்யா கதை மாதிரி இருக்கு..?" என்று முகவாயில் கை வைத்தாள் யமுனா..

மாடிப்படியிலிருந்து வெளிப்பட்ட விக்ரமைக் கண்டதும் விமலா யமுனாவிடம் அவனைக் காட்ட..

"இவன் வர்றதைப் பார்த்துத்தான் அவ மாயமானாளா..?" என்று சந்தேகம் தெளிந்தாள்..

விக்ரம் கல்யாணியைப் பார்த்தபடி வெளியே போய் விட்டான்.. அவனது கார் கிளம்பும் ஓசை கேட்டது.. கல்யாணியின் விழிகளில் கண்ணீர் ததும்பியது.. அதை மற்றவர்கள் பார்த்து விடாமலிருக்க தலையைத் தாழ்த்தி இமைகளைச் சிமிட்டினாள்.. ஆனால் வீணா அதைக் கவனித்து விட்டாள்.. அவள்தான் விக்ரம் கேட்ட கேள்வியிலிருந்து கல்யாணியைக் கண்காணிப்பதையே ஓர் வேலையாக வைத்திருக்கிறாளே..

அவளும் கல்யாணியும் வெளியே கிளம்பினார்கள்.. பொத்தாம் பொதுவாக ஊர் சுற்றினார்கள்.. வீணா மேற்குத் தொடர்ச்சி மலைகளைக் காட்டும் போது பழனி

மலையையும் காட்டினாள்.. இளம் வெயில் இதமாக உடலில் படிய கல்யாணியுடன் பேசியபடி நடந்தவள்..

"அண்ணா வர்றான்.." என்றாள்..

"எங்கே..?" பரபரப்புடன் கல்யாணி திரும்பிப் பார்த்தாள்..

அவளது கண்களின் தேடலை மனதில் பதிய வைத்துக் கொண்ட வீணா..

"அவனில்லை.. இது வேறு யாரோ.." என்றாள்..

கல்யாணியின் முகம் வாடியது.. அப்பட்டமான ஏமாற்றம் தென்பட்டது.. விட்டேற்றியாக நடந்தாள்..

"அட.. அவன்தான்.." கல்யாணியைப் பார்த்தபடி சொன்னாள் வீணா..

கல்யாணி திரும்பவில்லை.. அருகில் வந்ததும் இவன் அவனில்லை என்று சொல்லப் போகிறாள் என்ற நினைவுடன்..

"ச்ச்.." கொட்டினாள்..

"கொடைக்கானல் மலைக்குப் பல்லியைக் கூப்பிடத்தான் வந்தாயா..?"

விக்ரமின் குரலில் உள்ளம் துள்ள கல்யாணி ஆவலுடன் திரும்பினாள்.. அவளது ஆவலை அவதானித்த வண்ணம் அழுத்தமான காலடியுடன் அவளை நெருங்கினான் விக்ரம்.. கூடவே அஜய்யும் இருந்தான்.. கல்யாணியைக் கண்டதும்..

"ஹாய்.." என்றான்..

அதற்குள் தன் தேடலையும் ஆவலையும் மறைத்து விட்ட கல்யாணி பழைய யாரோ எவரோ பார்வையை விக்ரமை நோக்கி வீசியபடி அஜய்யிடம்..

"ஹாய்.." என்றாள்..

அஜய்.. அவளுடைய ஹாய்யைக் கவனிக்கவில்லை.. அவன் வீணாவையே பருகு பருகு என்று பார்த்துக் கொண்டிருந்தான்.. அதில் வீணாவுக்கு மகா பெருமை.. அவள் விழிகளால் ஏதோ அதட்ட, அஜய் இமைகளைச் சிமிட்டி இல்லையென்று மறுத்தான்.. அவள் இல்லையில்லை.. இது செல்லாது, செல்லாது

என்பதைப் போலத் தலையைக் குழுக்க, அஜய் இரண்டு காதுகளிலும் கைகளை வைத்துத் தோப்புக்காரணம் போட்டான்.. வாடா, வைத்துக்கறேன் என்று வீணா விழிகளால் மிரட்ட, நீ எவ்வளவு வேண்டுமானாலும் மொத்திக் கொள் என்பதைப் போல அஜய் முதுகைக் காட்டினான்.. அடங்க மாட்டாயா என்று அவள் விழிகளை உருட்ட, அவன் அம்பேல் என்று இருகைகளையும் உயர்த்தினான்.. போனால் போகுது.. பிழைத்துப்போ என்று கையை விரித்து அவனுக்கு அபயம் அளித்து ரட்சித்தாள் வீணா..

"வாட் எ ரொமாண்டிக் சீன்..!" கிண்டலாகச் சொன்னான் விக்ரம்..

வீணா கண்ஜாடை காட்ட, அஜய் திடிரென்று நினைவுக்கு வந்தவனைப் போல..

"மறந்துட்டேன் பார்த்தியா.." என்று கையை உதறினான்..

"வாட் எ டிராமா..!" கேலியாக சொன்னான் விக்ரம்..

"டேய் விக்ரம்.."

"என்ன்ன்ன..?"

"மம்மியும் டாடியும், உன் மம்மிடாடியிடம் ஒன்றைச் சொல்லச் சொன்னாங்கடா.."

"ஏனாம்..? அதை செல்ஃபோனில் அவங்களே சொல்லியிருக்கலாமே.."

"அது மரியாதையா இருக்காதாம்.."

"இதைப்பாருடா.. வருஷக்கணக்கா உங்க ரெண்டு பேரோட கல்யாணப் பேச்சு ஓடிக்கிட்டு இருக்கு.. இதில புதுசா உன் மம்மிடாடி பேச்சு வார்த்தை நடத்தச் சொன்னாங்களா..?"

"ஆமாண்டா விக்ரம்.."

"நடத்து.. நடத்து.."

"வா வீணா போகலாம்.."

"எங்கே..?"

"உன் வீட்டுக்குத்தான்.."

"கல்யாணி..?"

"விக்ரம் ஊரைச் சுற்றிக் காட்டுவான்.."

அஜய் விக்ரமைக் கைகாட்ட.. அவன்

"டேய், என்னை ஏண்டா கோர்த்து விடற..?" என்று கோபமில்லாமல் கோபப்பட்டான்..

"முக்கியமான பேச்சுடா விக்ரம்.."

"உடனே பேசியாகனுமா..?"

"யெஸ்.. யெஸ்.."

"அந்த உடனே என்கிறது ஆறுமணி நேரம் கழித்துத்தான் வரும்.. இல்லையா அஜய்..?"

விக்ரமின் கேள்வி காதுகளில் விழுகாததைப் போல அஜய் வீணாவை இழுத்துக் கொண்டு போய்விட்டான்.. விக்ரம் கல்யாணியையே இமைக்காமல் பார்த்தான்.. அவள் மனம் படபடக்க தலை குனிந்தாள்.. அவன் விழிகளில் மின்னல் வந்தது.. பார்வையில் ஓர் தீர்க்கம் வந்தது.. அவளது மனதைத் துருவித் தோண்டித் துழாவி உண்மையை வெளிக்கொண்டு வந்து விடுவதைப் போல அவன் பார்த்த துளைக்கும் பார்வையில் அவள்

தடுமாறினாள்.. முகம் சிவக்க அவனை ஏறிட்டுப் பார்ப்பதும் தலை குனிவதுமாக இருந்தாள்..

"யார் நீ..?"

விக்ரம் நிதானமாகக் கேட்ட கேள்வியில் தூக்கிவாரிப் போட தலை நிமிர்ந்தாள் கல்யாணி.. இருவரின் பார்வைகளும் பின்னிப் பிணைந்தன.. பார்வையை விலக்கிக் கொள்ளாமல் இருவரும் அசையாமல் ஒருவரையொருவர் பார்த்த வண்ணம் அப்படியே நின்று விட்டார்கள்..

# அத்தியாயம் 17

**ம**லைப்பிரதேசத்திற்கே உரிய ஊசிக்காற்று உடலைத் துளைத்தது.. கல்யாணி அந்தக் குளிருக்குப் பழக்கப் பட்டவள்தான்.. லண்டனில் இல்லாத குளிரா..? எனவே அசையாமல் நின்றிருந்தாள்..

விக்ரமின் பார்வை மேய்ச்சல் நிலத்தைக் கண்டு விட்ட காளையின் பார்வையாக இருந்தது.. அவளை பாதாதிகேசம் முதல் பார்வையால் அளந்தான்.. அவன் பார்த்த லேசர் பார்வையில் அவள் முகம் சிவந்தது..

கல்யாணி ஜீன்ஸ், டி-ஷர்ட்டில் இருந்தாள்.. மேலே ஸ்வெட்டர்.. கழுத்தைச் சுற்றித் தொங்கிய மப்ளர்.. அடர்ந்த தலைமுடி இடுப்பைத் தொட்டுத் தொங்கியது.. காதோரம் வெட்டி விடப்பட்ட கற்றைக் குழல்.. அகன்ற கண்கள்.. அதில் தெரியும் ஓர்விதக் கறார் தன்மை..

கல்யாணியின் வசீகரம் தனித்துவமானது.. உயரமாக, ஒல்லியாக, நளினத்துடன் கூடிய கம்பீரமாக, அரசியைப் போல அவனை ஆகர்ஷித்தாள்.. அவளைக்

காதலிக்கவும், ஏன், பார்வையிடவும் கூட ஓர் தகுதி வேண்டும் என்பது போல இருந்தாள்.. அவளைப் போன்ற பெண்ணைப் பார்ப்பதும், பேசுவதும், பழகுவதும் ஓர் தனிசுகம் என்பதை கடந்த சில நாள்களில் விக்ரம் உணர்ந்திருந்தான்..

புதிராக, புதிர் போடும் கதைகளை விழியாலே பேசும் பெண்கள் அரிதானவர்கள்.. கல்யாணி அவர்களில் ஒருத்தி..

"சொல்.. யார் நீ..?" விக்ரம் கேள்வியை நினைவுபடுத்தினான்.

"கல்யாணி..!" அவள் உதட்டைச் சுழித்து கெத்தாகப் பதில் சொன்னாள்..

அகப்பட்டுக் கொண்ட பதட்டம் துளியளவும் இல்லாமல் அனாசியமாக அவனது கேள்வியை அவள் எதிர் கொண்ட விதம் அவனை ஈர்த்தது.. அவன் கேட்ட கேள்வியில் தூக்கிவாரிப் போட நிமிர்ந்தவளிடம் பயமில்லை.. அவள் சொன்ன ஏதோ ஒன்றை அவன் கண்டு பிடித்திருப்பானோ என்ற சம்சயம் இல்லை..

ஹா..! நீ அப்படி வருகிறாயா.. நான் இப்படி வருகிறேன் என்று அவனை எதிர்நோக்கும் கம்பீரம்தான் இருந்தது..

சுற்றி வளைக்கும் பகைவரின் வியூகத்தில் அச்சமின்றி வாள் சுழற்றும் தேவசேனையாக அவள் அவன் எதிரே நின்றாள்.. அதை அவன் வெகுவாக விரும்பி ரசித்தான்..

"கல்யாணி..? குட் ஆன்சர்.. இந்தக் கல்யாணிக்கு விக்ரமின் காதல் கதையைப் பற்றி எப்படித் தெரியும்..? வீணா சொன்னான்னு மறுபடியும் பொய் சொல்லாதே.. அவ சொல்லைன்னு சொல்லிட்டா.."

"அதைப் பொய்ன்னு எப்படிச் சொல்கிறிங்க மிஸ்டர் விக்ரம்..? ஐ டோன்ட் லைக் தட் வெர்டு.."

"ஒருவர் சொல்லாததைச் சொன்னதாச் சொல்வது பொய்தான் மிஸ் கல்யாணி.."

"அவ சொன்னதாச் சொன்னது வேண்டும்ன்னா இல்லாம இருக்கலாம்.. ஆனா, சொன்னதாச் சொன்ன செய்தி உண்மைதானே..? நீங்கள் ரூபா என்கிற ஏமாற்றுக்காரியிடம் ஏமாறவில்லையா..?"

விக்ரம் நிதானம் இழந்தான்.. கல்யாணி வெகு நிதானத்துடன் கேள்வி கேட்டாள்.. அவள் கேட்கும் கேள்வி அவனைப் பாதிக்கும் என்கிற அறிவற்றவளா அவள்..? இல்லையே.. அவள் புத்திசாலி.. சராசரிப் பெண்களிடமிருந்து வித்தியாசப்படும் தனித்துவம் கொண்டவள்.. பார்க்கும் பார்வை முதற்கொண்டு அனைத்திலும் நேர்த்தியுடன் கூடிய கண்டிப்பு நிறைந்தவள்..

"ஷட் அப் மிஸ் கல்யாணி.. அது என் பெர்ஸனல் மேட்டர்.. அதைப்பேச உனக்கு ரைட்ஸ் இல்லை.."

"யார் சொன்னது..?"

இப்படி முரட்டுப் பிடிவாதத்துடன் எதிர் கேள்வி கேட்கிறவளை என்ன செய்தால் தேவலாம் என்ற கொலைவெறிக்கு ஆளானான் விக்ரம்..

"ஹேய்.. என்ன பேசறன்னு தெரிந்துதான் பேசறயா..?"

"தெரிந்துதான் பேசறேன் விக்ரம்.. தெரியாமல் பேசுவது நீங்கதான்.."

"எதை தெரிந்துக்கலை..?"

"ரூபாவைத் தெரிந்துக்கலை.."

"அவளைப் பற்றி நீ பேசாதே.."

விக்ரம் சீறினான்.. கல்யாணியின் பார்வையில் தெரிந்த ஓர்வித வலியில் வாயடைத்துப் போனான்.. தன்னிகரற்ற கம்பீரமான பெண்ணின் பார்வையில் ஏன் இப்படியொரு வேதனை தெரிகிறது..?

"ஏன் விக்ரம்..? அவளைப் பற்றிப் பேச எனக்கு அருகதையில்லையா..?"

துடிக்கும் இதழ்களுடன் கேட்டவளை இழுத்து அணைத்துத் தன் வேதனைகளைச் சொல்லிக் குமுற வேண்டும் போல இருந்தது விக்ரமுக்கு.. யாருக்கு அருகதையில்லை..? கல்யாணிக்கா..? அவள் தேவதை..! ரூபாவைப் போன்ற தரம் கெட்டவளைப் பற்றி கல்யாணி பேசலாமா..?

"ஓ நோ.. நீ ப்ளே பண்ணும் கண்ணாமூச்சி விளையாட்டில் நான் தொலைந்து கொண்டிருக்கிறேன் கல்யாணி.. ப்ளீஸ்.. இது போல பேசாதே.. நீ எங்கே..

அவள் எங்கே..? டோன்ட் ப்ளே வித் மீ.. டெல் மீ.. ஹூ ஆர் யு..?"

கல்யாணியின் விழிகளால் தெரிவது திருப்தியா இல்லை பெருமிதமா..? கண்கள் கலங்க ஏன் அவள் அவனை ஏக்கத்துடன் பார்க்கிறாள்..?

'உன் மனதில் என்னதான் இருக்குது.. சொல்லித் தொலைடி என் தெய்வீகப் பெண்ணே..!'

"தப்புத்தான் விக்ரம்.. நான் உங்களுடன் கண்ணாமூச்சி விளையாட்டை விளையாட நினைத்தது தப்புத்தான்.."

"நீ நினைக்கலை கல்யாணி.. விளையாடிக் கொண்டிருக்கிறாய்.."

விக்ரம் நினைவு படுத்தினான்.. கல்யாணி தலையாட்டி அதை மறுத்தாள்..

"இல்லை விக்ரம்.. இப்போது நான் விளையாட வில்லை.. அதற்காக இங்கே வரவுமில்லை.. ஓர் நாளில் நான் விளையாடிய கண்ணாமூச்சி விளையாட்டில் நானே தொலைந்து போய் விட்டேன்.. எனை மீட்க வழி

கிடைக்குமா என்கிற பரிதவிப்போடு கொடைக்கானலுக்கு வந்திருக்கிறேன்.. இனியும் விளையாட என் உடலிலும் மனதிலும் சக்தியில்லை விக்ரம்.. நான் விளையாட இங்கு வரவில்லை.. தேடி வந்திருக்கிறேன்.. தேடுதலோடு வந்திருக்கிறேன்.. பாடி வந்திருக்கிறேன்.. என் பாடலோடு வந்திருக்கிறேன்.. என் அடையாளம் எதுவென்று உணர முடியாத உங்களுக்கு அதை உணர்த்த வந்திருக்கிறேன்.. உங்கள் தோல்வியைச் சொல்லிக் காட்ட வரவில்லை விக்ரம்.. தோற்றுப்போய் வந்திருக்கிறேன்.. காதல் தோல்வி என்பது மீள முடியாத படுகுழி விக்ரம்.. அதில் விழுந்து விட்டேன்.. ஆற்ற முடியாத ரணத்தோடு, தேற்ற முடியாத மனத்தோடு ஆறுதலை நாடி வந்திருக்கிறேன் விக்ரம்.. உங்களைக் காயப்படுத்த வரவில்லை.."

கல்யாணி உடைந்து அழுதாள்.. ஓர் எட்டில் அவளை அணுகிய விக்ரம் அவளை தோள்சாய்த்துக் கொண்டான்.. சாய்ந்து கொள்ளத் தோள் கிடைப்பது வரம்.. அந்த வரம் கிடைக்கப் பெற்ற நெகிழ்ச்சியில் கல்யாணி தேம்பினாள்.. கண்ணீரில் தன் மன

சோகங்களைக் கரைத்தாள்.. அவன் தோளில் தலை சாய்த்து தன் மனத்துயரங்களைக் கொட்டினாள்..

அழுது முடித்தவள் விலகி நிற்கத் தன் கைக்குட்டையால் அவளது முகம் துடைத்து விட்டான் விக்ரம்.. கலங்கிச் சிவந்திருந்த அவளது கன்னத்தில் தட்டினான்.. காதோரம் தொங்கிய குழல் கற்றையை ஒதுக்கி விட்டான்..

"பார்க்குக்குப் போகலாமா..?"

ஒப்புதலாக தலையாட்டினாள் கல்யாணி.. அவன் காட்டிய பரிவில் மனம் லயித்தாள்.. அவளுக்காக அவன் கார்க்கதவைத் திறந்து விட்டான்.. பிரியண்ட் பார்க்கை அடையும் வரை கல்யாணியிடம் பேச்சுக் கொடுக்காமல் காரை ஓட்டினான்..

முந்நூற்றி இருபத்தி ஐந்து வகையான மரங்களை உடைய பிரியண்ட் பூங்காவில் அவர்கள் நடந்தார்கள்.. நூற்றி ஐம்பது வயதைத் தாண்டிய போதி மரத்தைக் கடந்தார்கள்.. போதி மரமென்று அழைக்கப்படும் அந்த

யூகலிப்ட்ஸ் மரம், அவர்களது வருகையை அறிந்ததைப் போல அமைதியாக இலையசைத்து வரவேற்றது.

எழுநூற்றி நாற்பது வகையான மலர்கள் மலர்ந்திருக்கும் பூங்காவின் மத்தியில் இடையூறு இல்லாத தனிமையில் சாய்வான மரபெஞ்சில் உட்கார்ந்தான் விக்ரம்.. கால் மேல் கால் போட்டு கல்யாணியின் பக்கமாக திரும்பினான்..

சோர்ந்திருந்தாள் கல்யாணி.. அந்தச் சோர்வு விக்ரமைத் தாக்கியது.. அவள் காதல் தோல்வி யடைந்தவள் என்ற உண்மை அவனைக் காயப் படுத்தியது.. அவனைப் போல்தான் அவளும் என்று நினைக்க முடியாமல், அவள் மனதைக் கவர்ந்த ஆண்மகன் யாராக இருக்கக் கூடும் என்ற பொறாமை யில் அவன் வெந்து போனான்.

"ஸோ.. என்னைப் போல்தான் நீயும்.."

அந்த நிலையிலும் இகழ்ச்சியாக அவள் உதட்டை வளைத்தாள்.. இந்தக் கம்பீரம்தான் இவளது

அடையாளம் என்று நினைத்துக் கொண்டான் விக்ரம்.. அதை ரசிக்கவும் செய்தான்..

"ஊஹும்.. என் காதல் வேறு மிஸ்டர் விக்ரம்.. நான் காதலிக்கும் மனிதர் உயர்வானவர்.. உண்மையானவர்.."

"காதலிப்பவரா..? இன்னும் அவனை நீ காதலிக்கிறாயா..?"

அவள் விழிகளுக்குள் உற்றுப் பார்த்து அவன் கேட்க அவள் தயங்காமல் பதில் சொன்னாள்..

"யெஸ் மிஸ்டர் விக்ரம்.. ஸ்டில் ஐ லவ் ஹிம்.."

"காதல் தோல்வின்னு சொன்னாயே.."

"அது உண்மைதான்.. நான் காதலிக்கும் மனிதர் வேறு ஒரு பெண்ணின் நிழல் தோற்றத்தை கண்ணசைத்து நம்பி அவள் பின்னால் போய் விட்டார்.."

"அவன் நிழல் தோற்றத்தை நம்பினான்னு எப்படிச் சொல்கிற..?"

"முகத்தைப் பார்த்து யாரையும் அடையாளம் கண்டு கொள்ள முடியாது மிஸ்டர் விக்ரம்.."

விக்ரமுக்குக் கோபமான கோபம் வந்தது.. அது எதனால் என்று தெரியவில்லை.. கல்யாணியின் குழப்பம் தரும் பதிலுக்காக வந்ததா.. இல்லை அவள் வேறு ஒருவனைக் காதலித்திருக்கிறாள்.. இன்னமும் காதலிக்கிறாள் என்பதற்காக வந்ததா என்று இனம் காண முடியாமல் அவன் ஆவேசமடைந்தான்..

"உனக்குத்தான் பேசத் தெரியும் என்பதைப் போல பேசாதே.. முகத்தை வைத்துத்தானே ஒருவரை இன்னார்ன்னு அடையாளம் காண முடியும்..?"

"அப்படித்தான் நீங்க ரூபாவை அடையாளம் கண்டிங்க மிஸ்டர் விக்ரம்.. அது பொய்முகம்.."

"வாட் டு யு மீன்..?"

"உங்களை இம்ப்ரெஸ் பண்ணிய பாடலைப் பாடியது ரூபா இல்லை விக்ரம்.. நான்தான்.."

# அத்தியாயம் 18

'**எ**ன்ன..?'

நான் கேட்பது உண்மைதானா என்று அயர்ந்து விட்டான் விக்ரம்.. அவன் காண்பது கனவா இல்லை நனவா..? அவன் காதுகளில் விழுந்த வார்த்தைகள் உண்மையாகவே கல்யாணியின் வாய்மொழி உதிர்த்த வார்த்தைகள்தானா..?

மலர்களே.. மலர்களே இது என்ன கனவா என்று பாடாத குறைதான்.. அவர்களைச் சுற்றி ஆடிய மலர்களை வெறித்த வண்ணம் ஓர் திடுக்கிடலுடன் அவன் பார்த்த பார்வையில் கல்யாணி கண் கலங்கினாள்..

"யெஸ் மிஸ்டர் விக்ரம்.. தேம்ஸ் நதிக்கரையில் நான் பாடிய பாடலைத்தான் நீங்க கேட்டிங்க.. படகில டிராவல் பண்ணினப்போ நான் பாடின பாடல் அது.. அடுத்து தேம்ஸ் நதியின் வெஸ்ட் மின்ஸ்ட்டர் பாலத்தில்

பாடினேன்.. ஹாலண்ட் பார்க்கின் ஃபாரெஸ்ட் ஏரியாவில் பாடியதும் நான்தான்.."

"பட்.. நான் உன்னைப் பார்க்கலையே.."

"நான் உங்களைப் பார்த்தேன்.. நாங்க கூட்டமா இருந்தோம்.. அந்தக் கூட்டத்தில் இருந்து டிஃபரண்டாக் காட்டி உங்களைக் கவர் பண்ண, என்னோட மேனரிசத்தை ரூபா யூஸ் பண்ணினான்னு எனக்குத் தெரியாது.."

"உன்னுடைய மேனரிசமா..?"

"யெஸ்.. புருவங்களை உயர்த்தி இறக்குவது என்னுடைய மேனரிசம்.. அதை ரூபா காப்பி அடிச்சுட்டா.."

விக்ரமுக்கு அதிர்ச்சியாக இருந்தது.. அவனுடன் பழகிய நாள்களில் ரூபா அவளை அடையாளப் படுத்திக் கொண்ட அந்த மேனரிசத்தைத் தொடரவே இல்லை என்பது அவன் நினைவுக்கு வந்தது.. அவனை மோகத்துடன் பார்ப்பாள்.. அவளது பார்வையில் ஓர் அழைப்பிருக்கும்.. இவள் ஏன் இப்படிப் பார்த்துக்

தொலைக்கிறாள் என்றுகூட விக்ரம் நினைத்திருக்கிறான்.. காதலியின் பார்வை கிறக்கத்தைத்தான் தர வேண்டும்.. கிளர்ச்சியைத் தரக் கூடாது.. அதைக் காதலனின் பார்வை தந்தால் நன்றாக இருக்கும்..

'ரூபாவோட ஆக்ட்விட்டிஸ் எதுதான் நன்றாக இருந்தது..?'

கவர்ச்சிகரமான கைக்குட்டை போன்ற உடைகள்.. முகத்தில் கை வைத்தால் வழித்துக் கொட்டும் அளவுக்கு கிரிம்.. கண்களில் சொக்க வைக்கும் தூண்டில் பார்வை..

"நான் சொல்கிறேன்னு தப்பா நினைத்துக்காதடா விக்ரம்.. இந்த ரூபாவைப் பார்த்தா ஆராதனா போலத் தோணலை.. அயிட்டம் மாதிரித் தோணுது.." என்று சொல்லி விட்டு அஜய் விக்ரமிடம் மொத்து வாங்கிய தினங்கள் ஏராளம்..

யோசித்துப் பார்க்கும் போது எந்தப் பாடல்களால் அவன் ரூபாவிடம் பழக ஆரம்பித்தானோ அந்தப் பாடல்களில் ஒரு வார்த்தையைக் கூட அவள் உச்சரித்ததில்லை என்பதும் நினைவுக்கு வந்தது..

"உங்களுடைய காதலுக்கு அடிப்படை.. பாடல்கள் ன்னா அந்த அடிப்படையே ரூபாவிடம் இல்லை யென்பதை நீங்க ஏன் தெரிந்துக்கலை விக்ரம்.. உங்கள் காதலின் அடையாளம் பாடல்கள்ன்னா இப்போது தெரிந்த கொள்ளுங்கள் விக்ரம்.. ரூபாவின் அடையாளம் இந்தப் பாடல்கள் இல்லை.. அதையும் நீங்க தெரிந்துக்கலை.."

"ஐ கான்ட் பிலிவ் இட்.. ரூபா. ஃபேக்கா..?"

கல்யாணி இகழ்ச்சியாக நகைத்தாள்.. இப்போது அவளது இகழ்ச்சி விக்ரமைப் பாதிக்கவில்லை.. தவறு செய்துவிட்ட குழந்தை தாயின் கண்டனத்தை வாய்மூடி ஏற்றுக் கொள்வதைப் போல அவன் கல்யாணியின் நகைப்பை ஏற்றுக் கொண்டான்..

"ரூபா.. ஃபேக்கா இல்லாம உங்களிடம் உண்மையா இருந்தாளா..?"

"கல்யாணி.. நான் அப்படி மீன் பண்ணவில்லை.. ரூபா ஃபேக்தான்.. ஆனா அவ பாடியதாகச் சொன்னது ஃபேக்ன்னு நான் நினைக்கலை.."

"ஏன் நினைக்கலை விக்ரம்.. இது நீங்க ஃபேவரிசம் காட்டின பாடல் வரிகளுக்கு செய்கிற ஜஸ்டிஃபிகேஷன் இல்லையே.."

விக்ரம் குற்ற உணர்வுடன் பேசாமல் இருந்தான்.. கல்யாணியை நிமிர்ந்து பார்க்க சங்கடப்பட்டான்.. அதை உணர்ந்த கல்யாணி..

"ரிலாக்ஸ் விக்ரம்.. நீங்க ஃபீல் பண்ண வேண்டாம்.. உங்களை இப்படிப் பார்க்க நான் விரும்பலை.." என்று கனிவுடன் சொன்னாள்..

"நீ பேசியதற்காக நான் ஃபீல் பண்ணலை கல்யாணி.. இப்படி ஓர் ஏமாளியா இருந்திருக்கிறேனேன்னுதான் ஃபீல் பண்றேன்.."

"இதைச் சொல்லிக் காட்டனும்னு நான் நினைத்ததில்லை விக்ரம்.. பட்.. சொல்லிக்காட்டாம என்னால் இருக்க முடியாது.. நான் பாதிக்கப்பட்டவள்.. உங்களால் என் வேதனையை உணர முடியாது விக்ரம்.. எனக்கான அடையாளத்தை இன்னொருத்தி திருடிக் கொள்கிறாள்.. எனைத் தேடும் ஓர் நல்லவரிடம் அதை

பிரதிபலித்து இம்ப்ரெஸ் செய்கிறாள்.. அந்தக் கெட்டிக் கார நல்லவர் அதை உணராமல் ஏமாந்து போகிறார் என்றால் கோபம் வராதா..?"

கட்டாயம் வரும் என்று சொல்ல வந்ததைச் சொல்ல முடியாமல் கல்யாணியைப் பார்த்தான்.. பார்க்கப் பார்க்கப் பரவசம் வந்தது.. புது ஆனந்தத்துடன் அவன் பார்க்க அந்தப் பார்வையை விரும்பாதவளைப் போல பார்வையை விலக்கிக் கொண்டாள் கல்யாணி.. அவள் முகத்திலிருந்த வேதனையையும் துயரத்தையும் கண்டவனுக்கு மனம் பிசைந்தது.. அவனது ஓர் பார்வையைத் தாங்க முடியாமல் முகம் சிவந்த கல்யாணியா இவள்..?

"வீணா சொன்னான்னு உண்மையில்லாததைச் சொல்லனும்னு நான் நினைக்கலை விக்ரம்.. ரூபாவைப் பற்றிப் பேசி விட்டேன்.. உனக்கு எப்படித் தெரியும்ன்னு நீங்க கேட்டப்ப எனக்கா தெரியாதுன்னு மனம் துடித்தது.. வாயில் வந்ததைச் சொல்லி வைத்தேன்.. தட்ஸ் ஆல்.."

"அவ்வளவுதானா..?"

அர்த்தத்துடன் கேட்டான் விக்ரம்.. கேட்ட தொனி அவளை அசைத்திருக்க வேண்டும்.. தாபத்துடன் அவனைப் பார்த்தாள்.. விக்ரமின் விழிகள் மின்னின.. அந்த மின்னலில் கல்யாணியின் கண்களில் தவிப்பு வந்தது.. வேதனை வந்தது.. விக்ரம் கரம் நீட்டி அழைத்தான்.. நீட்டிய அவன் கரங்களை அவள் வெறித்தாள்.. மறுப்பாக தலையை ஆட்டினாள்..

"ஏன்..?"

அதட்டலான அவனது கேள்விக்கு விரக்தியுடன் புன்னகைத்தாள்.. விக்ரமுக்கு புரியவில்லை.. அவள்தான் அவன் தேடிய பெண் என்பதைச் சொல்வதற்கு முன்னால் உடைந்து அழுது அவன் தோள்களில் சாய்ந்து ஆறுதல் தேடியவள், அவள்தான் அவன் தேடிய பெண் என்ற உண்மையைச் சொன்ன பின்பு அவன் கரங்களுக்குள் வர மறுக்கிறாள்..

'இவள் விசித்திரமானவள்..'

கல்யாணி புருவச் சுளிப்புடன் மலர்ச்செடிகளை வெறித்தாள்.. இந்த வெறித்த பார்வையிலிருந்து இவளை மீட்க முடிந்தால் நன்றாக இருக்கும்.. எங்கே.. அவள்தான் அதற்கு இடம் கொடுக்க மறுக்கிறாளே..

"நான் படகில் தேடினேன் கல்யாணி.."

"நீங்கள் தேடியதை நானும் பார்த்தேன்.. எனக்கு ஆச்சரியமாக இருந்தது.. லண்டனில் பழைய தமிழ்ப் பாட்டை ரசிப்பவங்களும் இருப்பார்கள்.. பாடலைக் கேட்டவுடன் அதைப் பாடியவர்களைத் தேடுவார்கள்.. என்பதே இன்ட்ரெஸ்டிங்.. நீங்கள் பார்த்தக் கூட்டத்தில்தான் நானும் இருந்தேன்.. என்னைத்தான் நீங்க தேடுகிறீங்கன்னு என் ஃபிரண்ட் சொன்னா.. நான் அவளுக்குப் பின்னால் மறைந்து கொண்டேன்.."

விக்ரம் அன்றைய நாளை நினைத்துப் பார்த்தான்.. படகின் மேல் தளத்தில் அவன் நின்றிருந்தான்.. பாடலைக் கேட்டதும் கீழ் தளத்திற்குப் போனான்.. அங்கே இந்தியப் பெண்கள் சிலர் இருந்தார்கள்..

அவர்களுக்கு மத்தியில் கல்யாணியை அவன் பார்க்கவே இல்லை..

"பார்த்திருக்கலாம் விக்ரம்.. பட்.. உங்களைத் தேட விடாம ரூபா புருவங்களை உயர்த்தி இறக்கிக் கண்சிமிட்டி உங்க கவனத்தைக் கவர்ந்துட்டா.. நீங்க அவளை மட்டும் பார்த்திங்க.. எங்களைப் பார்க்கலை.. அதுதான் அவளோட டிரிக்.. பாட்டுப் பாடியவள் அவள்தானோன்னு உங்களை நினைக்க வைத்துட்டா.."

"வாட் எ கிரிமினல் ஷி இஸ்..? செல்ஃபிஷ்.."

"இந்த உலகம் ரூபாவைப் போன்றவர்களால்தான் நிரப்பியிருக்கிறது விக்ரம்.. உண்மை எது.. பொய் எதுன்னு நாம்தான் கண்டு பிடிக்கணும்.. மத்தவங்களை குறை சொல்லக் கூடாது.."

"வாட் கேன் ஐ டூ..? பாலத்திலும் நான் தேடிய போது அவளைத்தான் பார்த்தேன்.."

"அவ பார்க்க வைத்தா.. நீங்க பாலத்தில் நிற்பதை நாங்க பார்த்துட்டோம் விக்ரம்.. நான் உங்களை நோட் பண்ணுவதை அவ நோட் பண்ணிட்டா.. என் மீது

அவளுக்கு ஜெலஸ்.. நான் என்று இல்லை.. பணக்காரப் பெண்கள் என்றாலே அவள் காய்வாள்.. நான் நோட் பண்ணுகிறேன் என்பதற்காகவே அவ உங்களுக்கு இம்பார்ட்டன்ஸ் கொடுத்தா.. என்னை நீங்க கண்டு பிடித்து விடக் கூடாதுன்னு ஊடே புகுந்தா.. உங்களுக்கு லண்டனில் சொந்தமா அபார்ட்மெண்ட் இருக்கிறதை தெரிந்து கொண்டதும் அதை கைப்பற்றனும்னு பிளான் போட்டா.."

"ஹாலண்ட் பார்க் ஃபாரெஸ்ட்டிலும் பாடலைக் கேட்டு நான் தேடியபோது அவளைப் பார்த்ததும்தான் நான் கன்பர்மா அவதான் நான் தேடும் பெண்ணுன்னு நம்பிட்டேன்.."

"அங்கேயும் நான் இருந்தேன்.. உங்களைப் பார்த்துக்கிட்டு இருந்தேன்.. என்னை நீங்க பார்க்கலை விக்ரம்.. ஏன்..?"

துயரம் நிரம்பிய கல்யாணியின் கேள்விக்கு பதில் கிடைக்கவில்லை..

# அத்தியாயம் 19

இந்த வாழ்வு முழுவதும் ஏன் என்ற கேள்விகளால் தான் நிரம்பியிருக்கிறது.. நல்லவர்களுக்கு மட்டுமே சோதனை வருவது ஏன்..? தீயவர்கள் நினைத்ததெல்லாம் நடக்கிறதே, அவர்களால் நடத்த முடிகிறதே ஏன்..?

அழகான ஓர் பாடலை ரசித்துப் பாடினாள் கல்யாணி.. பாடும்போது அவளுக்குத் தெரியாது.. அந்தப் பாடல் இந்தியன் ஒருவனை ஈர்க்கும்.. அவன் அந்தப் பாடலைப் பாடியது யார் எனத் தேடி வருவான் என்பது..

எதிர்பாராத ஒன்றை நடத்திக் காட்டுவதுதானே வாழ்க்கை.. எவருக்குத் தெரியும் வாழ்வின் எந்தத் திருப்பத்தில் பூச்செண்டு காத்திருக்கிறது என்பது..

கல்யாணி எதிர்பாராத ஒன்றாக அழகான தமிழ் இளைஞன் ஒருவன் பார்வையால் பாடலைப் பாடியவள் யார் என்று துழாவியபடி வந்தான்..

"ஏய்ய்.. அவன் உன்னைத்தான் தேடி வர்றாண்டி.."

தோழி கூறியதும் கல்யாணி ஓர் வித பயத்துடன் அவளுக்குப் பின்னால் மறைந்து கொள்ள, அதே நொடியில் சுதாரித்த ரூபா புருவங்களை உயர்த்தி.. இறக்கி விக்ரமை நோக்கி சமிக்ஞை செய்து அவனது.. தேடுதலை தடை செய்து அவன் கவனத்தை அவள்மீது ஈர்த்து விட்டாள்.. அதையும் கல்யாணி கவனிக்க வில்லை.. அவளுடைய தோழிதான் கவனித்துச் சொன்னாள்..

"கல்யாணி.. இவ எனக்குத்தான் வினையா இருக்கிறான்னு நினைத்தா உனக்கும் வினையா இருக்கிறாளே.."

"எனக்கென்ன இவ வினை..?"

"அவன் ஹீரோ போல இருந்தாண்டி.. செம ஹேண்ட்சம்.. எனக்கே சைட் அடிக்கத் தோணுச்சு.. அவன் உன்னைத்தான் தேடினான்.."

"ஹேய் மோனா.. பி சீரியஸ்.. அவுட்டிங் போன இடத்தில் யாரோ ஒருத்தனைப் பார்த்து நாம் இந்த அளவுக்கு ஆர்கியூ பண்ணனுமா என்ன..?"

"ஊஹூம்..? நீ இதை ஈஸியா எடுத்துக்கச் சொல்றியா..?"

"ம்ம்ம்.."

கல்யாணி கலகலத்துச் சிரித்தாள்.. அது உதடுகள் பூசிக் கொண்ட சிரிப்பு.. மனதோ ஏதோ ஒரு ஏமாற்றத்தைப் பூசிக் கொண்டது.. மனதின் வலியை மறைத்துக் கொண்டவளுக்கு ரூபாவின் மீது கோபம் வந்தது.. அவள் ரூபாவின் பொடித்தனமான செய்கையை மனதுக்குள் வெறுத்தாள்.. அருவெறுத்தாள்..

'இவள் ஏன் எங்ககூட ஒட்டுப்புல்லைப் போல ஒட்டிக்கிறா..'

கல்யாணிக்கு ரூபாவைப் பிடிக்கவில்லை.. ஏதோ ஒரு முகம் தெரியாத வாலிபனின் கவனத்தை அவள் கவர்ந்து விட்டாள் என்பதற்காக அல்ல.. அவன் வேறு ஒரு பெண்ணைத் தேடி வந்திருக்கிறான் என்று தெரிந்த பின்னாலும் அந்தப் பெண் இவளாக இருப்பாளோ என்று நினைக்க வைத்தாளே.. அதைத்தான் கல்யாணி வெறுத்தாள்..

காரை அடைந்த போது ரூபா முன்பக்கக் கதவைத் திறந்து கல்யாணியின் அருகே உட்காரப் போனாள்..

"ஸ்டாப்.." கண்டிப்புடன் அவளை நிறுத்தி வைத்தாள் கல்யாணி..

"மோனா..! நீ என் பக்கத்தில் வா.. உன் ஃபிரண்டை உங்க காரில் போகச்சொல்லு.. நாம் வேறு ஒரு இடத்திற்குப் போகிறோம்.. அங்கே நம் ஃபிரண்ட்ஸ் மட்டும் வந்தால் போதும்.. உன் அப்பாவின் யூனிட் வர வேண்டியதில்லை.."

ரூபா முகத்தில் அடி பட்டதைப் போல விலகி நின்றாள்.. அவளைத் துச்சமாக கல்யாணி பார்த்த பார்வையில் குன்றிப் போனாள்..

மோனாவிற்கு அது விடுதலையாக இருந்திருக்க வேண்டும்.. அவளுடைய அப்பா சொன்னதற்காக அவளுடைய கம்பெனியைச் சேர்ந்தவர்களைக் கூட வைத்துக் கொண்டு தோழியுடன் ஊர் சுற்றுவது அவளுக்குப் பெருத்த கொடுமையாக இருந்தது.. முடியாது என்றும் சொல்ல முடியவில்லை..

அகர்வாலுக்கு கோபம் வந்து விடும்.. தாயில்லாத மோனா தந்தையைப் பகைத்துக் கொள்ள முடியாது..

இப்போது ரூபா மோனாவைக் குறை சொல்ல முடியாது.. அவளைக் கழட்டி விடுவது கல்யாணிதான்.. மோனா இல்லை.. மோனா ரூபாவை அலட்சியமாகப் பார்த்தபடி கல்யாணியின் காரில் ஏறி விட்டாள்..

"பை ரூபா.."

ரூபா நிஷ்டூரமாக மோனாவை முறைத்தாள்.. பிடிவாதமாக அங்கேயே நின்றாள்..

"உன் அப்பாவிடம் யார் பதில் சொல்வது மோனா..? என்னால் அவரை சமாதானம் செய்ய முடியாது.. உன்னை விட்டுவிட்டு நான் மட்டும் திரும்பிப் போனா அவர் என்னை உண்டு இல்லைன்னு ஓர் வழியாக்கி விடுவார்.. ஒன்று என்னையும் உன்னுடன் கூப்பிட்டுக் கொண்டு போ.. இல்லைன்னா நீ எங்களுடன் வா.."

கல்யாணிக்குக் கோபம் வந்து விட்டது.. மோனா வாய் திறப்பதற்குள் இவள் முந்திக் கொண்டாள்..

"ரூபா.. உன் லிமிட் என்னன்னு உனக்குத் தெரியலை.. யார் நீ..? மோனாவின் கம்பெனியில் வொர்க் பண்ணுகிற ஓர் மாடல்.. மோனா உன் முதலாளி.."

"நோ கல்யாணி.. மிஸ்டர் அகர்வால்தான் என் பாஸ்.."

உதாசீனமாக மோனாவைப் பார்த்தபடி அவள் பேசிய பேச்சில் கல்யாணி கொதித்துப் போனாள்.. ரூபாவின் பார்வை அவளையே இந்த அளவுக்குப் பாதிக்கிறது என்றால் மோனாவை எந்த அளவுக்குப் பாதித்திருக்கும்..? ரூபாவால் எப்படி இத்தகைய தொனியில் பேச முடிகிறது என்று ஆத்திரம் கொண்டாள்.. மோனாவுக்கும் அகர்வாலுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்பதைப் போலவும், அகர்வாலும் ரூபாவும் ஒரே குடும்பம் என்பதைப் போலவும் ரூபா பேசி வைத்தாள்..

கல்யாணி ரூபாவைப் பார்த்து விரல்களைச் சொடுக்கினாள்..

"ஹேய்.. என்ன..? விட்டால் பேசிக்கிட்டே போகிற.. ஓடிப் போய்விடு.. நீயெல்லாம் என் நிழலிடம்கூட நெருங்க முடியாது.. மோனாவுடன் வந்திருக்கும் ஒரே தகுதிதான் உனக்கு.. இல்லைன்னா என் பக்கத்தில் கூட நீ நெருங்க முடியாது.."

அது.. அது.. அன்று கல்யாணி உதிர்த்த வார்த்தைகள்தான் அவளை விக்ரம் நெருங்க விடாமல் விலக்கி வைத்தது.. அவளது அடையாளத்தை விக்ரம் அறியவிடாமல் மறைத்து வைத்தது..

எப்போதுமே நல்லவர்களை பகைத்துக் கொள்ள லாம்.. மோசமானவர்களைப் பகைத்துக் கொள்ளக் கூடாது.. அவர்கள் பழிவாங்க எந்த எல்லைக்கும் போவார்கள்.. நியாய அநியாயம் பார்க்க மாட்டார்கள்.. ரூபாவும் அப்படித்தான்.. சும்மாவே அவள் மனதுக்குள் பொறாமைத்தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது.. கல்யாணி, மோனாவின் வயதுதான் அவளுக்கும்.. ஆனால் அவர்கள் இருவரும் வாழும் கவலையற்ற பணக்கார வாழ்வை ரூபாவினால் வாழ முடியவில்லையே..

ரூபாவின் தாய், தந்தை யாரென்று அவளுக்குத் தெரியாது.. அநாதை அசிரமத்தில் வளர்ந்தவள்.. கோட்பாடுகள் ஏதுமின்றி மனதில் பேராசையும் அசூசையும் மண்ட மோசமான பெண்ணாக வளர்ந்தாள்.. சேற்றில் செந்தாமரை மலரும் என்பார்கள்.. அவளோ நந்நீரில் வளர்ந்தும் மணம் கமழாத எருக்கலையாக இருந்து தொலைத்தாள்..

ரூபா வளர்ந்த அநாதை ஆசிரமம் அறநெறிகளைப் போதிக்கும் கோவில்.. அவளுடன் வளர்ந்த மற்றவர்கள் நீதி, நேர்மையென்று நெறி தவறாமல் வளர்ந்து நிற்க, ரூபாவோ குணமில்லாதவளாக அதை மறைத்து ஏமாற்றும் கலையில் கை தேர்ந்தவளாக வளர்ந்து நின்றாள்..

பொய் சொல்லத் தயங்க மாட்டாள்.. திருடுவாள்.. அந்தப் பழியைத் தூக்கி அடுத்தவர் தலைகளில் சுமத்தி விட்டு அப்பாவி போல இமை கொட்டி நிற்பாள்.. மற்றவர்கள் சிரிக்கப் பொறுக்கமாட்டாள்.. ஒருநொடியில் அவர்களை அழ வைக்க அவளுக்குத் தெரியும்..

ஆசிரமத்தில் அவளது குண நலன்களைத் தெரிந்தவர்கள் விலகி நிற்பார்கள்.. அவள் பக்கத்தில் வந்தாலே பத்தடி தூரத்துக்கு தள்ளி தலை தெறிக்க ஓடி விடுவார்கள்..

கல்லூரிப் படிப்பு முடிந்ததும் ரூபாவுக்கு ஆசிரமமே ஓர் வேலை வாங்கித் தந்து வழி அனுப்பி வைத்தது.. வெளியுலகத்தில் தன்னிச்சையாக வாழ விரும்பிய ரூபா ஆசிரமத்துக்கு டாட்டா காட்டி விட்டு தன் மனம் போன போக்கில் வாழ ஆரம்பித்தாள். லேடிஸ் ஹாஸ்டலின் விதிமுறைகள் அவளுக்கு சரிப்பட்டு வரவில்லை.. தனியாக ஓர் பிளாட்டை வாடகைக்கு எடுத்துத் தங்க பொருளாதார வசதி இடம் கொடுக்கவில்லை.. அவள் வாங்கிய சம்பளம் ஓரிரு நாள்களுக்குக் கூட வரவில்லை.. மீதி நாள்களைக் கடக்கக் கடன் வாங்கினாள்.. திருப்பிக் கட்டத் தடம் மாறினாள்.

தெரியாமல் தவறுவது ஓர்விதம்.. ரூபா தெரிந்தே தவறினாள்.. தன் இளமையை மூலதனமாக வைத்துத் தன் வசதிகளை மேம்படுத்திக் கொண்டாள்.. தனி அபார்ட்மெண்டுக்கு குடிபோனாள்.. என்ன ஒன்று..

மும்பையில் சொந்தமாக ஒரு சிங்கிள் பெட்ரூம் அபார்ட்மெண்டையாவது வாங்கிவிட வேண்டும் என்ற அவளது கனவு மட்டும் நிறைவேறவே இல்லை.. வரும் பணமெல்லாம் பிளாட் வாடகைக்கும், வகை வகையாக தின்பதற்கும் உடுத்துவதற்குமே சரியாகப் போனது..

ரூபாவிடம் பழகிய ஒருவன் அவளை மாடலிங் தொழிலில் இழுத்து விட்டான்.. கிடைத்த வாய்ப்பை இறுகப் பற்றிக் கொண்ட ரூபா தன் தொடர்புகளை விரிவு படுத்தினாள்.. அடுத்தடுத்த விளம்பரங்களில் இடம் மாறி அகர்வாலின் 'மோனா அட்வெர்டைஸிங் கம்பெனி'யில் மாடலாக வேலைக்குச் சேர்ந்தாள்..

எழுபது வயதில் இருந்த அகர்வால் மனைவியை இழந்தவர்.. ஒரே மகளான மோனா மட்டுமே அவருக்கென்று இருந்த சொந்தம்.. மகள்மீது உயிராக இருந்தவரின் மீது ரூபாவின் பார்வை விழுந்தது.. மெல்லக் கண்ணுக்குத் தெரியாமல் அவள் அகர்வாலுக்கும் மோனாவுக்கும் இடையே அகழியாக ஊடுறுவி விட்டாள்..

அகர்வால் ரூபாவின் கட்டுப்பாட்டுக்குள் செல்வதை அறியாமலே சென்று விட்டார்.. ரூபாவுக்கு அவர் கொடுக்கும் பணம் மட்டும் போதாது.. அவளுடைய மொத்தச் சொத்தும் வேண்டும் என்ற உண்மையை அவர் அறியாமல் ரூபா நடித்துக் கொண்டிருந்தாள்..

# அத்தியாயம் 20

**ல**ண்டனில் பிறந்து வளர்ந்த கல்யாணி கோடிஸ்வரத் தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்தவள்.. இந்திய வம்சாவழி.. கல்யாணியின் தந்தையான கல்யாண சுந்தரம் மதுரையில் பிறந்தவர்.. மும்பையில் தொழில் தொடங்கினார்.. அது வெற்றிகரமாக கிளை விரித்து உலகமெங்கும் பரவிப் படர்ந்தது.. லண்டன் கிளையில் பெருமளவுக்கு வருமானம் வந்ததால் தலைமை அலுவலகத்தை லண்டனுக்கு மாற்றிக் கொண்டு அங்கேயே செட்டிலாகி விட்டார்.. கல்யாண சுந்தரம் திருமணம் செய்து கொண்டது பால்ய கால நண்பரான ஜனார்த்தனனின் ஒன்று விட்ட தங்கையான அபிராமியை.. அபிராமியும் மதுரைதான்..

கல்யாணும் கல்யாணியும் லண்டனில் பிறந்து வளர்ந்தாலும் தமிழ் மண்ணின் கலாச்சாரம் மாறாமல் வளர்ந்தற்கு முக்கிய காரணம் அபிராமி.. மதுரையில் பிறந்து வளர்ந்த அபிராமி தமிழ் மொழியின் மீது

ஆழ்ந்த பற்றுக் கொண்டவள்.. பழைய தமிழ் திரைப்படப் பாடல்களை ரசித்துக் கேட்பாள்.. அவளிடமிருந்த அந்தப் பழக்கம் கல்யாணியையும் தொற்றிக் கொண்டது..

பள்ளி, கல்லூரிகளில் ஆங்கிலம் பேசினாலும் பிள்ளைகள் இருவரும் வீட்டில் தமிழில்தான் பேசியாக வேண்டும்.. அப்படிச் சட்டம் போட்டு வைத்திருந்தாள்.. மொத்தத்தில் லண்டனில் வாழ்ந்து வந்த தமிழ் குடும்பமாகத்தான் கல்யாண சுந்தரத்தின் குடும்பம் இருந்தது..

மும்பையில் கல்யாண சுந்தரம் வசித்த போது நண்பரானவர்தான் அகர்வால்.. தொழில் ரீதியான பழக்கம் நாளடைவில் குடும்ப நண்பர்களாக மாறும் அளவிற்குக் கனிந்தது.. அகர்வாலின் மனைவி நிஷா அபிராமியின் தோழியானாள்.. கல்யாண சுந்தரத்தின் குடும்பம் லண்டனுக்குக் குடி பெயர்ந்த பின்னாலும் இரு குடும்பங்களுக்கும் இடையிலிருந்த நட்பு தொடர்ந்து கொண்டுதான் இருந்தது..

உலகம் சுற்றும் அகர்வால் லண்டனுக்கு வரும் போதெல்லாம் கல்யாண சுந்தரத்தின் வீட்டிற்குச் செல்வார்.. அகர்வாலுக்கென்று லண்டனில் சொந்தமாக ஆறு அறைகளுடன் கூடிய லக்ஸரி அபார்ட்டெண்ட் இருந்தது.. அங்கே தங்கியிருப்பதாகத்தான் பெயர்.. ஆனால் நிஷா நாள் முழுவதும் அபிராமியுடன் அவள் வீட்டில்தான் இருப்பாள்..

கல்யாண சுந்தரம் - அபிராமி தம்பதியினருக்கு கல்யாண் பிறந்து விட்டான்.. அகர்வால் - நிஷா தம்பதியினருக்கு குழந்தை இல்லை.. ஐந்து வருஷங்கள் கழித்து அபிராமி கருவுற்ற போது நிஷாவும் தாய்மை அடைந்திருக்கும் செய்தி வந்தது.. கல்யாணி பிறந்த மறுநாளில் மோனா பிறந்தாள்..

அகர்வால் மனைவி குழந்தையைக் கொண்டாடினார்.. கல்யாணி லண்டனில் படிக்க, மோனா மும்பையில் படிக்க ஆரம்பித்தாள்.. விடுமுறை தினங்களை லண்டனில்தான் கழிப்பாள். கல்யாணியும், மோனாவும் சிறு வயதிலிருந்தே நெருக்கமான தோழிகளாக வளர்ந்தார்கள்..

மோனா பள்ளியிறுதிப் படிப்பைத் தொட்டபோதுதான் அது நிகழ்ந்தது.. மூச்சை அடைக்கிறது என்று சொன்ன நிஷா மாரடைப்பில் உயிர் விட்டாள்.. தாயை இழந்து நின்ற மோனாவை அபிராமி அரவணைத்து லண்டனுக்கு அழைத்துக் கொண்டாள்.. மோனா கல்லூரிப் படிப்பை லண்டனில் படிக்க ஆரம்பித்தாள்..

விடுதியிலோ, அகர்வாலின் ஃபிளாட்டிலோ தங்கியிருக்காமல் கல்யாண சுந்தரத்தின் வீட்டில் குடும்பத்தினரில் ஒருத்தியாக இருந்து அவள் படித்து வந்தாள்.. கல்யாணிக்கும் மோனாவுக்குமான நட்பு இறுகியது.. கல்யாண் மோனாவின் மீது காதல் கொண்டான்.. அதைத் தங்கையிடம் தெரிவித்தான்..

"முட்டாள் அண்ணா.. இதை மோனாவிடம் சொல்.." என்றாள் அவள்..

"எப்படிச் சொல்வது..?"

"உளராதே.. பிக் பிஸினெஸ் மேன் நீ.. காதலைச் சொல்ல இவ்வளவு தயக்கமா..? வெளியில் சொல்லி விடாதே.."

"நீ சொல்லாமல் இருந்தால் போதும்.."

"இப்பத்தானே மோனாவிடம் உன் காதலைப் பற்றிச் சொல்லச் சொன்ன..?"

"காரியத்தைக் கெடுத்தாயே.. என் காதலை அவளிடம் சொல்.. என் தயக்கத்தை யாரிடமும் சொல்லாதே.."

"பார்க்கலாம்.. என் வாய் ஓட்டை வாய்.. தாக்குப் பிடிக்குமான்னு தெரியலை.."

அண்ணனை முடிந்த வரை கலவரப்படுத்திவிட்டு கல்யாணியிடம் தமையனின் காதலைப் பற்றிச் சொன்னாள் அவள்.. அதைக் கேட்பதற்கு முன்னால் மோனா கல்யாணை அவள் காதலிப்பதை கல்யாணி அவளுடைய அண்ணனிடம் சொல்ல வேண்டும் என்று கோரிக்கை வைத்ததுதான் அழகிலும் அழகு..

"மோனா.."

"ம்ம்ம்.."

"என் அண்ணன் கல்யாண் இருக்கானே.."

"வெரி ஹேண்ட்சம் மேன்.. சக்சஸ்புல் பிஸினெஸ்மேன்.."

"அவன் உன்னை.."

"வெயிட்.. வெயிட்.. கல்யாணி, டோன்ட் மிஸ்டேக் மி.."

"எதுக்குடி.."

"ஐ திங்க், ஐ லவ் யுவர் பிரதர் கல்யாண்.. ப்ளீஸ்.. அவரிடம் இதைச் சொல்ல ஷையா இருக்கு.. எனக்காக இதை உன் அண்ணனிடம் சொல்லி விடேன்.. ப்ளீஸ்.. ப்ளீஸ்.."

முகம் சிவக்க அவள் கல்யாணியின் தாடையைப் பிடித்துக் கெஞ்ச.. கல்யாணி.. 'என்னடா இது..' என்று தமையனிடம் போனாள்.. அவன்..

"சொல்லி விட்டாயா..?" என்று ஆவலோடு கேட்டான்..

"அதுக்கு முன்னாலே அவ தன்னோட காதலைச் சொல்லி என்னை தூது போகச் சொல்லிட்டாளே.." கல்யாணி சோகமாக முகத்தை வைத்துக் கொண்டாள்..

"வாட்..? அவ காதலிக்கிறாளா..?"

"எதுக்கு இந்த சவுண்டு..? நீ காதலிக்கலாம்.. அவ காதலிக்கக் கூடாதா..?"

"ஹூ இஸ் தட் ப்ளடி ராஸ்கல்.."

"ஹி இஸ் கல்யாண்.. ஸன் ஆஃப் கல்யாண சுந்தரம் அண்ட் அபிராமி.. பிரதர் ஆஃப் தி கிரேட் கல்யாணி.."

முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு கல்யாணி சொல்ல கல்யாண் குதூகலமாகி அவளைத் தூக்கித் தட்டாமாலை சுற்றினான்.

"இப்ப நீ மோனாவைத்தான் அலேக் பண்ணனும்.." கல்யாணி சிரித்தாள்..

கல்யாண் - மோனா காதல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்து இருவருக்கும்

திருமணம் செய்து வைக்கும் முடிவை இருவீ ட்டினரும் எடுப்பதில் வந்து முடிந்தது..

"மேரேஜ் ஃபிக்ஸ் பண்ணின பின்னால் மோனா உன் வீட்டில் இருப்பது சரியாக இருக்காது.. மும்பை வந்து விடுவதுதான் சரி.. மேரேஜ் முடிந்த பின்னால் முறைப்படி உன் வீட்டுக்கு வரட்டும்.." அகர்வால் கண்டிப்பாக சொல்லி விட்டு மகளைத் தன்னுடன் மும்பைக்கு அழைத்துச் சென்று விட்டார்..

திருமணம் மறு வருஷத்தில் நடப்பதாக இருந்தது.. அகர்வால் புதிதாக ஒரு கம்பெனி தொடங்கும் வேலைகளில் இருந்தார்.. அது முடிந்த பின்புதான் மகளின் திருமண வேலைகளைப் பார்க்க முடியும் என்று சொல்லிவிட்டார்..

மோனா தினமும் கல்யானுடனும் கல்யாணியுடனும் வீடியோ காலில் பேசுவாள்.. அப்படிப் பேசும் போது அவள் முகத்தில் ஓர் பதட்டத்தை உணர்ந்த கல்யாணி..

"வாட் ஹேப்பன் மோனா..?" என்று கேட்டாள்..

"பயமா இருக்கு கல்யாணி.. இதை உன் அண்ணனிடம் என்னால் ஷேர் பண்ண முடியாது.. அஸ் எ ஃபிரண்டா உன்னிடம் மட்டும்தான் சொல்ல முடியும்.."

"என்னடி என்னென்னவோ பேசற..?"

"இங்கே என்னென்னவோ நடக்குது கல்யாணி.. ரூபான்னு ஒருத்தி.. புதிதாக எங்க அட்வர்டைசிங் கம்பெனியில் ஜாயின் பண்ணியிருக்கிறா.. அவளைப் பற்றி யாரும் குட் ஒபினியன் சொல்ல மாட்டேங்கிறாங்க.. அவளும் அப்படித்தான்.. பெண்களிடம் பேசவே மாட்டா.. எதற்கும் தயார் ரகம்.."

"இதோ பார் மோனா.. அவ எப்படி இருந்தா நமக்கென்ன..? எல்லோரும் நூறு சதவிகிதம் உத்தமர்களா இருக்க முடியாது.. வேலையில் கரெக்டா இருக்காளா.. வேலை செய்யும் இடத்தில் மிஸ்பிஹேவ் பண்ணாம இருக்காளா என்பதை மட்டும் பார்.. அவளுடைய பெர்ஸனல் லைஃபை நாம் கன்சிடர் பண்ணக் கூடாது.."

"இல்லையே கல்யாணி.. அவ வேலையை மட்டும் பார்க்கிறது இல்லை.. என் டாடியையும் சேர்த்தில்ல பார்க்கிறா.."

கல்யாணிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.. மோனாவின் பயத்தைக் கண்டு வேதனை கொண்டாள்.. மோனாவிற்கு எப்படியிருக்கும் என்பதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.. என்ன சொல்லி தோழியைத் தேற்ற முடியும்..?

"லுக் மோனா.. உன் அப்பா தனியாகவே வாழ்ந்து விட முடியுமா..? அவருக்கும் ஓர் துணை வேண்டாமா..?" மனதை திடப்படுத்திக் கொண்டுதான் தோழிக்கு ஆறுதல் சொன்னாள்..

"டாட் ரீமேரேஜ் பண்ணிக் கொள்வதில் எனக்கு எந்த விதமான அப்ஜெக்‌ஷனும் இல்லை கல்யாணி.. இந்த ரூபாவைப் பண்ணிக் கொள்வாரோன்னுதான் பயமா இருக்கு.. அம்மா இருந்த இடத்தில இவளா..?"

"அது உன் அப்பாவின் விருப்பம் மோனா.. நெக்ஸ்ட் இயர் உனக்கும் அண்ணனுக்கும் மேரேஜ்

ஆகப் போகுது.. நீ நம் வீட்டிற்கு வந்து விடுவ.. அதைப்பற்றி மட்டும் யோசி.."

தோழியின் மனநிலையை மாற்றி விட்டாலும் கல்யாணியின் மனம் ஆறவில்லை.. அந்த முகம் தெரியாத ரூபாவை வெறுத்தாள்.. இரு மாதங்களில் அந்த ரூபாவை நேரில் பார்க்க நேர்ந்த போது முதல் சந்திப்பிலேயே முகம் சுளித்தாள்..

"லண்டனுக்கு வந்தா நீ நம் வீட்டில்தான ஸ்டே பண்ணுவ.. இப்ப என்னடி புதிதா உங்க அபார்ட்மெண்டில ஸ்டே பண்ணியிருக்கிற..?"

"நான் மட்டும் தனியா வரலையே கல்யாணி.."

"அதைத்தான் ஏன்னு கேட்கறேன்.. அட்வர்டைஷிங் ஃபிலிம் ஷூட் பண்ண வந்தா யூனிட் மட்டும் வர வேண்டியதுதானே.. நீ ஏண்டி இவங்ககூட வந்த..?"

"நானா வந்தேன்..? இந்த ரூபா இழுத்து வந்திருக்கிறா.. எனக்கு சேன்ஜ் வேண்டுமாம்.. அதனால் ஷூட்டிங் முடிகிற வரைக்கும் லண்டனில் நான் இருக்கனுமாம்.. நம் வீட்டுக்கு வந்தால் நன்றாக

இருக்காதாம்.. ஸோ.. எங்க அபார்ட்மெண்டில் இவ காவலோடு தங்கியிருக்கனுமாம்.."

அழமாட்டாத குறையாக விவரித்தாள் மோனா..

# அத்தியாயம் 21

**ரூ**பா அகர்வாலுடனான தன் நெருக்கத்தை மோனாவுக்குத் தெரியப்படுத்துவதிலேயே குறியாக இருந்தாள்.. மோனா எதைக் கேட்டாலும் மறுக்காத அகர்வாலை தன் கைபிடிக்குள் இறுக்கி மறுக்க வைத்தாள்.. மோனா கல்யாணியிடம் புலம்பப் புலம்ப ரூபாவிடம் கல்யாணி வெறுப்பையும் கோபத்தையும் கக்க ஆரம்பித்தாள்..

ரூபாவுக்கு மோனாவின் மீது அளவு கடந்த பொறாமை இருந்ததைக் கண்கூடாக கண்டாள் கல்யாணி..

"டாட் ஓகே சொல்லிட்டார் கல்யாணி.." என்று மோனா சொல்லி வாய் மூடுவதற்குள் ரூபா மோனாவின் கண்ணெதிரேயே அகர்வாலுக்கு ஃபோன் பண்ணி விடுவாள்..

"ஐ திங்க்.. இது அன்னெசஸரி டியர்.." என்று கொஞ்சுவாள்.. மறு நொடியில் அகர்வாலிடமிருந்து மோனாவுக்கு ஃபோன் வந்து விடும்..

"ரூபா குட் கமெண்ட் கொடுக்கலை.. ஸோ.. நீ அதை அவாய்ட் பண்ணி விடு.."

ரூபாவே குட் வுமன் இல்லை.. அவள் கொடுக்கும் கமெண்ட் எப்படி குட் கமெண்டாக இருக்கும் என்று கேட்க முடியாமல் ஊமையாகிப் போவாள் மோனா..

தோழியின் விழிகளில் தெரியும் வலியில் கல்யாணி வெகுண்டு போவாள்.. மோனா கல்யாணிடம் எதுவும் சொல்லமாட்டாள்.. கல்யாணியிடம் மட்டும்தான் தன் வேதனையைப் பகிர்ந்து கொள்வாள்.. பெண்களுக்கே உரிய சுய மரியாதை உணர்வு அது..

தம் வாழ்க்கைத் துணையிடம் தந்தையின் பலவீனத்தை மறைத்து விடுவார்கள்.. சொல்ல மாட்டார்கள்..

கல்யாணி ரூபாவை உதாசீனப்படுத்த ஆரம்பித்தாள்.. நீ எனக்கு இணையில்லை.. தள்ளியே

நில் என்று வெளிப்படையாகவே சொன்னாள்.. அருவெறுப்பாகப் பார்த்தாள்.. 'ச்சீ..' என்று காறி உமிழாத குறைதான்.. இவை எதுவுமே ரூபாவைப் பாதிக்கவில்லை.. நீ எங்களுடன் வராதே என்று கல்யாணி அறிவுறுத்தினால் மறு நொடியில் ரூபா இல்லாமல் மோனா வெளியே செல்லக் கூடாது என்று அகர்வாலிடமிருந்து கட்டளை வந்து விடும்..

"இவளுடன் அபார்ட்மெண்டில் அடைந்து கிடந்தா எனக்குப் பைத்தியம் பிடித்துரும்டி.." மோனா அழுது விடுவாள்..

மோனாவுக்காக கல்யாணி ரூபாவின் வருகையைப் பொறுத்துக் கொள்ள வேண்டியிருந்தது.. தோழிகள் இருவரும் தனித்து ஒதுங்கி ரூபாவைத் தனிமைப் படுத்தியதில் ரூபா படப்பிடிப்பு இல்லாமல் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் மாடல் பெண்களையும் உடன் அழைத்து வர ஆரம்பித்தாள்.. அவர்களுக்கு அகர்வாலிடம் ரூபாவுக்கு இருக்கும் செல்வாக்கைப் பற்றித் தெரியும் என்பதினால் ரூபாவுக்கு காவடி தூக்கி

ஜால்ரா தட்டுவார்கள்.. எப்படியோ தொலையட்டும் என்று கல்யாணி விட்டு விடுவாள்..

கல்யாணியும் ரூபாவும் எதிரும் புதிருமாக பலமுறை மோதிக் கொண்டார்கள்.. கல்யாணி ஒற்றை விரலை உயர்த்தி ரூபாவை 'ஜாக்கிரதை..' என்று எச்சரித்த தருணமொன்றில் ரூபா மிதப்பாக 'உன்னை என்ன செய்கிறேன் பார்..' என்று அகர்வாலுக்குப் ஃபோன் போட்டாள்.. மறுமுனையில் பேசிய அகவர்வால் கோபப் பட்டார்..

"கல்யாணியிடம் உனக்கென்ன பிரச்னை..? அவள் என் ஃபிரண்டிடம் கம்ப்ளெயிண்ட் பண்ணி அவன் என்னை ஓர் வார்த்தை கேட்டு விட்டால் உன்னைத் தொலைத்துக் கட்டி விடுவேன்.."

ரூபா அலறியடித்துக் கொண்டு ஃபோனை அணைத்து விட்டாள்.. அசைக்க முடியாத கல்யாணியின் செல்வாக்கு அவளுக்கு ஆத்திரத்தைக் கொடுத்தது.. அகர்வாலே கல்யாணியின் தந்தையின் கோபத்திற்கு

அஞ்சுகிறார் என்றால் கல்யாணியின் பின்புலம் எத்தகையதாக இருக்கும்..!

'இந்த மோனாவும் கல்யாணியும் பிறந்ததிலிருந்து கோடிஸ்வர வாழ்க்கையை வாழ்பவர்கள்.. என்னைப் போல அநாதை ஆஸ்ரமத்தில் வளரவில்லை..'

இந்த எண்ணம் ரூபாவை ஆட்டிப் படைத்தது.. மோனாவைக் காயப்படுத்தி இன்பம் கண்டவளால் கல்யாணியை நெருங்கக் கூட முடியவில்லை..

'எனக்கொரு சந்தர்ப்பம் கிடைக்காமலா போய்விடும்..?'

ரூபா காத்திருந்தாள்.. அவள் காத்திருந்த சந்தர்ப்பம் ஓர் நாள் கிடைத்தே விட்டது.. தேம்ஸ் நதியில் பெண்கள் படகில் மிதந்த போது கல்யாணி உல்லாசமான மனநிலையுடன் அந்தப் பாடல் வரிகளைப் பாடினாள்..

"நீராட நதியா இல்லை..?

நிழல் தேட இடமா இல்லை..?"

கல்யாணி பாடிய பாடலில் ரூபா கேலியாக உதட்டைப் பிதுக்கினாள்.. சக மாடல் பெண்களிடம் கல்யாணியின் பாடலை ரகசியக் குரலில் கிண்டலடித்துச் சிரித்தாள்..

"எனக்காக வா - நான்

உனக்காக வா.."

என்று கல்யாணி பாடலை முடித்த போது..

"ராஜகுமாரன் இவளைத் தேடி ஓடி வரப் போறான் பாரு.." என்று சொல்லிச் சிரித்த ரூபா..

உண்மையாகவே ஒரு வாலிபன் கீழ்த்தளத்துக்கு பரபரப்புடன் வந்து பாடியது யார் என்று தேடியபோது பொறாமைத் தீயில் வெந்து போனாள்..

வசதியான வாழ்க்கைக்காக வயோதிகர்களின் ஆசைகளுக்கு இணங்கி வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பவள் அவள்.. பணக்கார அழகான இளைஞர்கள் அவளைப் பயன்படுத்திக் கொண்டார்கள்.. திரும்பிப் பார்த்ததில்லை..

'இப்படி ஒருவன் என்னைத் திரும்பிப் பார்ப்பானா..? காதலிப்பானா..?'

ரூபாவுக்குள் பொறாமைத்தீ கொழுந்து விட்டு எரிந்தது.. வந்தவனை கல்யாணி ஆவலுடன் பார்த்து தோழியின் முதுகுக்குப் பின்னால் மறைந்து கொண்டதில் இரையைக் கண்டவிட்ட வேட்டைப்புலியின் குரூர மின்னல் அவளது கண்களில் வந்தது..

'ஓ.. உன்னைக் காலி பண்ண இப்படியொரு வழி இருக்கா..'

கல்யாணியின் நிமிர்வையும் கோபத்தையும் மட்டுமே கண்டவள் ரூபா.. கண்டிப்பையும் கறாரையும் மட்டுமே பிரதிபலிக்கும் கல்யாணியின் கண்களில் வெட்கம் மின்னுவதைக் கண்டாள்.. விரல்கள் நடுங்குவதைக் கண்டாள்.. மனதின் உணர்வுகளை மறைக்க முடியாமல் அவள் தடுமாறுவதைக் கண்டாள்..உடனே விக்ரமைப் பார்த்து புருவங்களை உயர்த்தி இறக்கினாள்.. படகிலிருந்து இறங்கும் போது விக்ரமைத் திரும்பிப்

பார்த்து புருவங்களை உயர்த்தி இறக்கித் தூண்டில் வீசி விட்டுச் சென்றாள்..

கல்யாணிக்குச் சொந்தமான மேனரிசம் அது.. அடிக்கடி அவள் புருவங்களை கேலியாக உயர்த்தி இறக்குவாள்.. அது அழகாக இருக்கும்.. அதை அப்படியே காப்பி அடித்து விட்டாள் ரூபா.. அதை மோனா பார்த்து விட்டாள்..

"கல்யாணி.. இவ உன் மேனரிசத்தைக் காப்பியடித்து அந்த ஹேண்ட்சம் மேனிடம் ரெஃப்லெக்ட் பண்ணி அவனோட அட்டென்ஷனைத் தன் பக்கம் திருப்பிட்டாடி.."

கல்யாணிக்கு ஏமாற்றமாக இருந்தது.. அழகான பாடல் வரிகளை ரசித்து, அந்தப் பாடல் பாடியவளைத் தேடி வந்தான் ஒருவன்.. அவனது பார்வை தேடியது கல்யாணியை.. அதைப் பாடியதாக உணர்த்தியது ரூபாவா..?

கல்யாணி ரூபாவிடம் கொதிப்பைக் காட்டினாள்.. என் நிழலை நெருங்கக்கூட உனக்குத் தகுதியில்லை

என்று மற்ற பெண்களின் முன்னால் சுட்டிக்காட்டி அவமானப்படுத்தினாள்.. ரூபா மனதுக்குள் சூளுரைத்தாள்..

"உன் நிழலைக்கூட தட்மேன் நெருங்க முடியாமல் செய்கிறேன் பார்.. உன் அடையாளத்தை என்னுடைய தாக்கிக் காட்டுகிறேன்.."

எப்படியும் கல்யாணியின் மனம் கவர்ந்த கதாநாயகனை அவள் காண விரும்புவாள் என்பதைக் கணித்து வைத்திருந்தாள் ரூபா.. அவள் நினைத்ததுதான் நடந்தது.. இரண்டு நாள்கள் கூடத் தாண்டவில்லை..

"வெஸ்ட் மின்ஸ்ட்டர் பாலத்துக்குப் போகலாமா..?" என்று கேட்டு விட்டாள் கல்யாணி..

'அஃது..' ரூபாவின் மனதில் வெற்றிக் கூக்குரல்..

எங்கே தொலைத்தாளோ அங்கேதான் தேட வேண்டும் என்பது நியதி.. கல்யாணி புத்திசாலி.. அவளைத் தேடியவனும் அங்கே தேடிவரக் கூடும் என்பதை தெரிந்து வைத்திருந்தாள்..

"இப்போதுதானே தேம்ஸ் ரிவரில் போட்டிங் போய் வந்தோம்.. வேற இடத்துக்கு அவுட்டிங் போகலாமே.." மாடல் பெண்களில் ஒருத்தி சொன்னாள்..

"நைட் எபெக்ட்டில பிரிட்ஜோட லைட் எபெக்ட்ஸ் நல்லா இருக்கும்.. அங்கிருந்து பார்க்கும் போது வெஸ்ட் மின்ஸ்ட்டர் பேலஸ் தனி அழகோடு தெரியும்.." கல்யாணி விவரித்தாள்..

"ஹௌ நைஸ்.." பெண்கள் துள்ளிக் கொண்டு கிளம்பினார்கள்..

'பிரிட்ஜை ரசிக்கவா நீ போகிற..? அவன் வருவானாங்கிற எக்ஸ்பெக்டேஷனிலதான போகிற..' ரூபாவின் இதழ்களில் நமட்டுச் சிரிப்பு..

கல்யாணியின் எதிர்பார்ப்பின்படி விக்ரம் பாலத்தில் இருந்ததில் ரூபாவுக்குள் பொறாமைக் கனல்.. அவன் வருவான் என்று தெரிந்திருந்தும் நேரில் பார்த்ததும் கொந்தளித்தாள்..

'இப்படி என்னை யாரும் தேடினதில்லையே..'

அவளும் யாரையும் மனமார்ந்த காதலுடன் தேடியதில்லை என்பது அவள் மனதில் உறைத்தது.. அப்படியே அவளை யாராவது தேடினாலும் அவன் பணக்காரனா இல்லை ஓட்டாண்டியா என்றுதான் போய் பார்ப்பாள்.. அவன் பணக்காரனாக இருந்தாலும் ஓரிரு மாதங்களுக்கு மேல் தேங்கி நிற்க மாட்டாள்.. அவனை விடப் பணக்காரனிடம் தாவி விடுவாள்..

'மனசாவது.. மண்ணாங்கட்டியாவது.. பணம்.. அதுதான் முக்கியம்..'

இதுதான் ரூபாவின் தாரக மந்திரம்.. பாலத்தின் இந்தக் கோடியில் இவர்கள் நிற்க.. அந்தக் கோடியில் விக்ரமும் அஜய்யும் நின்றிருந்தார்கள்..

'இதோ.. இப்ப இவ பாடுவா..' ரூபா நினைத்து முடிக்கவில்லை..

"நதியோரம்.." கல்யாணி பாடி விட்டாள்..

விக்ரம் விரைந்து அவர்களை நெருங்கி வந்தான்.. கல்யாணி இப்போது மோனாவின் பின்னால் மறையாமல் படபடப்புடன் அவனைப் பார்த்தாள்.. அவனது

தேடுதலில் அவளுக்குள் எதுவோ நிகழ்ந்தது.. கல்யாணியின் இமைக்காத பார்வையை அவன் சந்திப்பதற்குள் ரூபா புருவங்களை வசீகரமாக உயர்த்தி இறக்கினாள்.. விக்ரமின் பார்வை அவளிடம் நிலைத்து விட்டதை கல்யாணி பார்த்தாள்..

அவளுக்கு மனம் வலித்தது..

ஏன் அவனால் அவளை அடையாளம் காண முடியவில்லை..? அவனுடைய பார்வையின் தேடல் போல அவளுடைய பார்வையிலும் தேடல் இருக்கிறதே.. அதை அவனால் உணர முடியவில்லையா..?

கல்யாணிக்கு அங்கே நிற்கப் பிடிக்கவில்லை.. பாலத்தை விட்டு விலகி நடந்து விட்டாள்.. அடுத்த சந்திப்பை அவள் திட்டமிடவில்லை.. ஆனால் அடுத்த சில நாள்களில் ஹாலந்த் பார்க்கில் விக்ரமை சந்தித்தாள்..

# அத்தியாயம் 22

"**அ**தை சந்திப்புன்னு சொல்ல முடியாது விக்ரம்.. உங்களைப் பார்த்தேன்.. தட்ஸ் ஆல்.. வழக்கம் போல என் பாடலைக் கேட்டுத் தேடி வந்தீங்க.. எப்போதும் போல ரூபா புருவங்களை உயர்த்தி உங்க கவனத்தை அவ பக்கம் திருப்பிட்டா.. இந்த முறை நிச்சயமா அவதான் நீங்க தேடிய பெண்னுன்னு நீங்க நம்பிட்டிங்க.. ரூபா உங்களோடு சுற்ற ஆரம்பித்ததை நானும் மோனாவும் பலமுறை பார்த்தோம்.. என் மனது உடைந்து விட்டது.. உங்க மேல வெறுப்பு வந்தது.. உண்மை எது, பொய் எதுன்னு கண்டு பிடிக்க முடியாத பலவீனமான மனிதரா நீங்கள்..?"

கல்யாணியின் சுட்டு விரல் விக்ரமை நோக்கி நீண்டு குற்றம் சாட்டியதில் அவன் விக்கித்துப் போனான்.. புடம் போட்ட தங்கம் போல ஜொலிப்பவளை கண்டு பிடிக்க முடியாமல் தரம் கெட்ட தகரத்தை தங்கம் என்று நினைத்து காலத்தை வீணடித்து விட்டானே..

"ரூபாவின் குறி நீங்கள் இல்லை மிஸ்டர் விக்ரம்.. நான்தான்.. என்னைக் காயப்படுத்தத்தான் உங்களுடன் அவள் பழகினாள்.. உங்களுக்கென்று லண்டனில் சொந்த அபார்ட்மெண்ட இருப்பது தெரிந்ததும் அதைக் கைப்பற்றிக் கொள்ள நினைத்தாள்.."

கல்யாணியின் வார்த்தைகள் கடந்த காலத்திற்கு அவனை இழுத்துச் சென்றன..

ஹாலந்த் பார்க்கில் விக்ரம் ரூபாவின் பின்னால் சென்று விட்டதைப் பார்த்த கல்யாணிக்கு நெஞ்சு வெடித்து விடும் போல ஆகிவிட்டது..

அவன் யாரென்று கூட அவளுக்குத் தெரியாது.. ஆனால் அவன் அவளைத் தேடியவன்.. அவளென்று ரூபாவை நினைத்து அவள் பின்னால் போய் விட்டான்.. அதைத்தான் அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

இமை மூடினால் விக்ரம் நினைவுதான்.. மூடிய விழிகளுக்குள் அவன் வந்து நின்றான்.. விழிகளால் அவளைத் துழாவினான்.. தேடுதல் நிரம்பிய அவனது

பார்வை இனிக் கல்யாணியைத் தேடாது என்பதில் அவள் துடித்துப் போனாள்..

ரூபா விக்ரமிடம் நெருங்கி விட்டாள்.. அவனோடு அவள் ஊர் சுற்ற.. மற்ற பெண்கள் விளம்பரப் பட ஷூட்டிங்கில் பிஸியானார்கள்.. மோனாவுக்குத் தனித்து கல்யாணசுந்தரத்தின் வீட்டுக்கு வந்து போகும் சுதந்திரம் கிடைத்தது.. அவளால் தோழியின் துயரத்தைச் சகித்துக் கொள்ள முடியவில்லை..

"ஆர் யு இன் லவ் வித் ஹிம்..?" என்று வினவினாள்..

"ஐ டோன்ட் நோ.." புதிராகப் பதில் சொன்னாள் கல்யாணி..

"நீ புத்திசாலிடி... இப்படி ஆன்சர் பண்றியே.."

"உண்மையாகவே என் மனதில் என்ன இருக்குன்னு எனக்குத் தெரியலை மோனா.. நான் அவனைக் காதலிக்கிறேனா..? தெரியலை.. ஆனா அவன் என்னைத் தேடினான்டி.. தேடியவன் வேறு ஒரு கேடு கெட்ட பெண்ணை நான்தான்னு அடையாளம் கண்டுக்கிட்டு

அவள் பின்னால் போயிட்டாண்டி.. அங்கேதானே நான் இருந்தேன்..? ஏன் அவன் என்னை அடையாளம் கண்டுக்கலை..?"

இதற்கு என்ன பதிலைச் சொல்வது..? சங்கடத்துடன் மௌனித்தாள் மோனா..

"அவன் யார்ன்னு எனக்குத் தெரியாது.. என் மனது ஏன் அவனை நினைக்குதுன்னும் எனக்குத் தெரியாது.. அவன்மீது எனக்குக் காதலான்னும் எனக்குத் தெரியாது.. ஆனா.. அவனை என்னால் மறக்க முடியலை மோனா.."

"முட்டாளாடி நீ..? அவன் இருக்குமிடம் இப்போது உனக்குத் தெரியும்.. நேராய் அவனிடம் போய் சட்டையைப் பிடித்து உலுக்கி, நீ தேடியவள் நான்தான்னு சொல்வதற்கென்ன..? வேறு ஒருத்தியை தப்பா அடையா ளம் கண்டுபிடிச்சுட்டு ஆடிக்கிட்டு இருக்கிறன்னு புரிய வைக்கிறதுக்கு என்ன..?"

மோனாவின் ஆதங்கத்தில் அதிர்ச்சியுடன் அவளைப் பார்த்தாள் கல்யாணி..

"என்ன மோனா சொல்கிற..? இதை நான் செய்வேன்னு எப்படி நினைத்த..? என்னைத் தேடியது அவன்தான்.. என் பாட்டைக் கேட்டது அவன்தான்.. நீ கேளுடான்னு அவன் முன்னால் நின்று நான் நேயர் விருப்பம் பாடலை.. பாட்டைக் கேட்டவன் அப்படியே போகாமல் என்னைத் தேடி வந்தான்.. என்னைப் பற்றி எதுவும் தெரியாமல், என் பாடலுக்காக மட்டும் அவன் என்னை தேடி வந்தான்.."

"ஹேய்.. நீ இவ்வளவு உருக வேண்டியதில்லை கல்யாணி.. அதுக்கு அவன் வொர்த்தில்லை.. உன் அழகு, பணம், படிப்புக்கு முன்னால் அவன் தூசி கூட இல்லை.. அதற்கும் கீழே.."

"இல்லை மோனா.. அவன் எல்லாவற்றுக்கும் மேலே.. அங்கேதானே நான் இருந்தேன்.. என் அழகை அவன் கவனிக்கலையே.. நான் யாருன்னே அவனுக்குத் தெரியாது.. தெரிந்தால்தானே என் படிப்பைப் பற்றியும், பணத்தைப் பற்றியும் தெரிந்திருக்கும்..? நான் யார்ன்னு தெரியாமலே அவன் என்னைத் தேடினான்.. எனக்காக

மட்டும் தேடினான்.. என் பாடலில் கசிந்துருகித் தேடினானன்.."

"ச்சும்மா அதையே சொல்லாதே கல்யாணி.. உன் பாடலுக்காக தேடியவன் இந்நேரம் ரூபாவைப் பாடச் சொல்லிக் கேட்டிருக்க வேண்டியதுதானே.. அவ வாயைத் திறந்தா கோட்டானைப் போலக் கத்தி வைப்பா.."

'ஆமாமில்ல..' என்று தோன்றியது கல்யாணிக்கு.. இதைப்பற்றி ஏன் அவள் சிந்திக்கவில்லை..

"அவ கத்தினா கழுதை கூடக் கேட்காது.. பின்னங்கால் பிடறியில் பட ஓடியே போயிரும்.. ஹா.. ஹா.. இதில் பாடகியை ஹீரோ கண்டு பிடிச்சுட்டாராம்.. ரெண்டும் காதல் பண்ணுகிறாங்களாம்.. ஹா.. ஹா.."

"ஷட் அப் மோனா.."

கல்யாணி எரிந்து விழுந்தாள்.. விக்ரமும் ரூபாவும் காதலிக்கிறார்கள் என்ற வார்த்தையைக் கேட்கக்கூட அவள் விரும்பவில்லை.. இந்த விக்ரம் ஏன் ரூபாவை பாடச் சொல்லிக் கேட்கவில்லை..?

கல்யாணியின் இதயத்தை வண்டாக இந்தக் கேள்வி துளைத்தது.. அன்றுதான் அவனால் கல்யாணியை அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை.. ரூபா கண்ணடித்து அவன் கவனத்தை திசை திருப்பி விட்டாள்.. இன்று அப்படியில்லையே.. விக்ரம் ரூபாதான் தான் தேடிய பெண் என்று உறுதியாக நம்புகிறானே.. இப்போது அவளைப் பாடச் சொல்லிக் கேட்டிருக்கலாமே.. அவனது காதலுக்கு அடிப்படை பாடலல்லவா..?""

"நீ வேற.." என்றாள் மோனா..

"ரூபாவைப் பற்றி நமக்குத் தெரியாது.. அவள் பக்கத்திலிருக்கும் போது வேறு நினைவை நினைக்க விட்டு விடுவாளா..?"

அர்த்த புஷ்டியுடன் மோனா கண்சிமிட்டினாள் கல்யாணிக்கு அது பிடிக்கவில்லை.. உண்மை சிலசமயம் சுடத்தான் செய்கிறது.. தங்களைப் பாதிக்காதவரை எந்த ஒன்றையும் விமரிசனம் செய்ய கேலி பேச மனித மனம் தயங்குவதேயில்லை.. இதே கேலியை ரூபா

அகர்வாலுடன் நெருங்கிப் பழகிய நேரத்தில் மோனா சொல்லியிருப்பாளா என்று கல்யாணி யோசித்தாள்..

எது எப்படியிருந்தாலும் விக்ரம் ரூபாவைப் பாடச் சொல்லி உண்மையைக் கண்டுபிடிக்க முனையவில்லை.. அவளது சாகசத்திற்கு கட்டுப்பட்டு விட்டான் என்பதில் கல்யாணி மனம் கசந்து போனாள்..

விக்ரம் எங்கே இருக்கிறான் என்று கல்யாணிக்குத் தெரிந்து விட்டது.. அவன் எம்.பி.ஏ படிக்க வந்திருக்கிறான் என்று மோனா சொன்னாள்.. அன்று மாலை கல்யாணசுந்தரம் கோபமாக வீட்டுக்கு வந்தார்.. அபிராமியிடம் சத்தம் போட்டார்..

"இந்த ஜனா செய்த வேலையைப் பார்த்தியா அபிராமி.. அவன் மகன் லண்டனுக்குப் படிக்க வந்திருக்கிறான்.. அதைப்பற்றி நம்மிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை.."

அபிராமியின் முகத்தில் ஓர் 'அப்படியா..?' என்ற அதிர்ச்சி கேள்வி வந்து போனது.. அதை மறைத்துக் கொண்டு விட்டுக் கொடுக்காமல் பதில் பேசினாள்..

"எப்படிச் சொல்வார்..? நாம்தான் புதுப் பழக்கம் வந்ததும் பழைய பழக்கத்தையும் சொந்தத்தையும் மறந்து விடுகிறோமே.. புதுப்பழக்கத்தையே புது சொந்தமாவும் மாத்திக்கிறோம்.. பிறந்த ஊரையே மறந்தாச்சு.. மத்த எது ஞாபகம் இருக்கும்..?"

அபிராமியின் குத்தல் பேச்சில் கல்யாணசுந்தரம் வருத்தமானார்.. குற்ற உணர்ச்சியுடன் பேசினார்..

"திரை கடலோடியும் திரவியம் தேடுன்னு நம்ம பெரியவங்க சொல்லி வைச்சிருக்காங்க அபி.. நான் அதைத்தானே செய்தேன்..? வேறென்ன செய்தேன்..?"

"ஊர் விட்டு ஊர் வந்ததில தப்பில்ல.. நம்ம பக்கத்து நட்பையும் சொந்தத்தையும் மறந்து போனதுதான் தப்பு.. நீங்க ஜனா அண்ணனை ஃபிரண்டா மட்டும் நினைச்சுட்டிங்க.. என் அண்ணனா, உங்க மைத்துனனா நினைக்கவே இல்லை.. அப்படி நினைத்துப் பார்த்திருந்தா என் அண்ணன் மகள் வீணாவை நம்ம கல்யாணுக்கு பெண் கேட்டிருப்பீங்க.."

"நீயே இப்படிச் சொன்னா எப்படி அபிராமி..? மோனா தாயில்லாத பொண்ணு.. நிஷாவை சொந்த பந்தமா நினைத்துப் பழகிட்டோம்.. நம்ம கல்யாணும் மோனாதான் வேண்டும்ன்னு ஒற்றைக் காலில் நிற்கிறான்.. இதை மாற்றுவது சரியாகுமா..?"

அபிராமி பேசவில்லை.. உறவுகளை நிர்னயிப்பதில் உருவாகும் மனச்சிக்கல் அவள் முகத்தில் பிரதிபலித்தது.. வீணாவும் மோனாவும் சம அந்தஸ்தில் இருக்கும் பெண்கள்தான்.. வீணா சொந்தம்.. மோனா நட்பு.. வீணாவின் குடும்பம் பாரம்பர்யமானது.. மோனாவின் குடும்பம் வடக்கத்திய பார்ட்டி கலாச்சாரத்தில் ஊறியது.. வீணாவின் தாய், தந்தை கட்டுக்கோப்பானவர்கள்.. அகர்வால் ஊர் மேய்பவர்..

"என்னவோ போங்க.. எனக்கு ஒன்றும் சொல்லத் தெரியலை.. பெரியம்மா வீணாவுக்கு நம்ம கல்யாணைக் கேட்கலைதான்.. அங்கேயே விக்ரமின் நண்பனை மாப்பிள்ளையாத் தேர்வு செய்துட்டாங்களாம்.. எனக்குத் தான் மனது கேட்கலை.. நம்ம கல்யாணியை விக்ரமுக்குக் கொடுத்து விடனும்னு மனதுக்குள் ஓர்

ஆசை.. அதுவும் இப்ப நீங்க சொன்ன தகவலில் இருந்து நொறுங்கிப் போச்சு.. நம்ம சொந்தம் வேண்டும்ன்னு நினைத்திருந்தால் நிச்சயமா பெரியம்மா, ஜனா அண்ணன்னு யாராவது ஒருத்தங்க தகவல் சொல்லியிருப்பாங்க.. அவங்க மனசில அந்த எண்ணம் இல்லை போல.."

தாய், தந்தையின் உரையாடலை செவி மடுத்துக் கொண்டிருந்த கல்யாணி உடைந்து போனாள்..

அவளைத் தேடியவன்.. அவள் தேடியவன்.. அவளைத் திருமணம் பண்ணிக் கொள்ளும் சொந்தத்தில் இருப்பவனா..?

# அத்தியாயம் 23

"அவன் எனக்கு ரிலேட்டிவ்வாம் மோனா.."

உணர்ச்சியற்ற குரலில் சொன்னவளை வேதனை யுடன் அணைத்துக் கொண்டாள் மோனா.. மனம் கேட்காமல் சொன்னாள்..

"இப்பவும் காலம் கடந்து விடவில்லை கல்யாணி.. உன் டாடியிடம் சொல்லி விக்ரமை உன் வீட்டுக்கு இன்வைட் பண்ணச்சொல்லு.."

"ஃபார் வாட்..?"

"ஏய்ய்.. என்னடி.. எதுக்காகன்னு கேட்கிற.. விக்ரம் உன் வீட்டுக்கு வந்தா நீங்க ரெண்டு பேரும் பேசிப் பழகலாம்.."

"என்ன தேவைக்கு..?"

"நீதான் அவர் தேடிய பெண்ணுன்னு கண்டுபிடித்து விடுவாரே.."

"ரூபா என்ன அவரை விருந்துக்கு அழைத்து இன்ட்ரொடுயூஸ் பண்ணிக்கிட்டாளா..? இவன்தானே அவ பின்னால் போய் அவ எங்கே தங்கியிருக்கிறான்னு கண்டுபிடித்தான்..?"

"அவ சிக்னல் கொடுத்து மயக்கினா கல்யாணி.."

"சிக்னல் கொடுக்கிறவ பின்னாடியெல்லாம் இவன் போய் விடுவானா..?"

கல்யாணி பிடிவாதமாக இருந்தாள்.. விக்ரமை வீட்டுக்கு அழைக்கக்கூடாது என்று கல்யாண சுந்தரத்திடமும் அபிராமியிடமும் கண்டிப்பாகச் சொல்லி விட்டாள்..

"நமக்கு இம்பார்ட்டன்ஸ் கொடுக்கிறவங்களுக்குத்தான் நாம் இம்பார்ட்டன்ஸ் கொடுக்கணும்மா.."

"இது பெரியவங்க விவகாரம் கல்யாணி.."

"நான் ஒன்றும் பச்சைக் குழந்தையில்லைப்பா.. அவன் நம் வீட்டுக்கு வருவதை நான் விரும்பலை.."

கல்யாணசுந்தரம் ஏற்கனெவே கடுப்பில் இருந்தார்.. அபிராமி என்ன சொல்வாளோ என்றுதான் அரை மனதாக விருந்துக்கு அழைக்க நினைத்தார்.. கல்யாணி தலையிடவும் அதுதான் சாக்கென்று விக்ரம் லண்டனுக்கு வந்திருப்பது தெரியாதது போல இருந்து விட்டார்..

கல்யாணி வெளிப்பார்வைக்கு எப்போதும் போல இருப்பதை போலக் காட்டிக் கொண்டாள்.. மனதுக்குள் ஓர் சூறாவளி சுழன்று கொண்டிருந்தது.. வாயிருந்தும் ஊமையாகிப் போனவளிடம் ஓர்நாள் ஓடிவந்தாள் மோனா..

"கல்யாணி.."

"என்னடி ஆச்சு..? ஏன் இப்படி ஓடி வர்ற..?"

"விக்ரமுடன் ரூபா குளோஸாப் பழகுனது டாடிக்குத் தெரிஞ்சுருச்சு கல்யாணி.."

"நல்லதுதானே.. அவ குணம் தெரிஞ்சு உன் டாடி அவளை துரத்தி விட்டிருவார்.. உனக்கு நிம்மதி.."

மனம் கனக்கச் சொன்னாள் கல்யாணி.. இனி ரூபாவுக்கும் விக்ரமுக்கும் திருமணம் நடக்கும்..

என்பதை நினைத்துப் பார்க்கும் போதே நெஞ்சம் நடுங்கியது..

"அதுதான் நடக்கலை கல்யாணி.. நானும் அப்படித்தான் நினைத்தேன்.. டாடி அவளை வெறுத்துத் தூரத் தூக்கிப் போட்டு விடுவார்ன்னு எதிர்பார்த்தேன்.. பட் டாடி ரூபாவை இம்மீடியட்டா மேரேஜ் பண்ணிக்கிட்டார் கல்யாணி.. இல்லைன்னா ரூபா விக்ரமை மேரேஜ் பண்ணிக்கிட்டு லண்டனில் செட்டிலாகிருவேன்னு மிரட்டினாளாம்.. ஐ கான்ட் பிலிவ் திஸ்.."

மோனா குமுறி அழுதாள்.. தோழிக்குத் தோள் கொடுத்துத் தாங்கிக் கொண்ட கல்யாணியின் மனதில் சந்தோஷமா, துக்கமா என்று இனம் பிரித்துக் காண முடியாத விசித்திர உணர்வுக் கலவையொன்று எழுந்தது..

"என்னால் அவளை என் அம்மாவின் இடத்தில் வைத்துப் பார்க்க முடியாது கல்யாணி.. அவ இருக்கும் இடத்தில் நான் இருக்க மாட்டேன்.."

மோனா கல்யாணசுந்தரத்தின் வீட்டிலேயே தங்கி விட்டாள்.. ரூபா அகர்வாலைத் தூண்டி விட, அவர் கல்யாண சுந்தரத்திடம் மோதினார்..

"திஸ் இஸ் நாட் ஃபேர் சுந்தரம்.."

"எதைச் சொல்கிற அகர்வால்.. என் குடும்பம் கட்டுக் கோப்பான குடும்பம்.. மகள் வயதிலிருக்கும் குணம் கெட்ட பெண்ணை இந்த வயதில் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கும் நீ சொல்லிக் காட்டுவதைப் போல என் குடும்பத்தில் எதுவும் இல்லையே.."

அகர்வால் குன்றிப் போனார்.. அது கோபமாக தலைதூக்க நண்பனுடன் எதிரி போல மோதினார்..

"அப்பேற்பட்ட ஒழுக்கசீலன் எதற்காக ஊரான் வீட்டுப் பெண்ணை உன் வீட்டில் ஒளித்து வைத்திருக் கிறாய்..?"

"ஊரான் வீட்டுப் பெண்ணா..? என் வீட்டுப் பெண்.. என் மகனின் காதலி.. வருங்கால மனைவி.."

"உன் மகனுக்குப் பெண் கொடுக்க எனக்கு விருப்பமில்லை சுந்தரம்.. என் மகளை அனுப்பி விடு.."

"உன் விருப்பத்தையும் அனுமதியையும் யார் கேட்டது அகர்வால்..? மோனா மேஜர்.. இது லண்டன்.. அவளை நீ கட்டாயப்படுத்தினால் நான் போலிஸின் உதவியைக் கேட்க வேண்டியிருக்கும்.."

கல்யாணசுந்தரம் உடனடியாக மகனின் திருமணத்தை நிச்சயித்தார்.. ரூபா அகர்வாலை முடுக்கி விட்டாள்.. அகர்வாலின் சொத்துக்களும், கம்பெனிகளும் மோனாவின் பெயரில்தான் இருந்தன.. அது தெரியாமல் அகர்வாலைக் கணக்குப் பண்ணிக் கழுத்தை நீட்டி விட்டோமே என்று பதறிப் போனாள்..

மோனாவை அழைத்து வந்து அவள் பெயரில் இருக்கும் சொத்துக்களை அகர்வால் பெயருக்கு மாற்றிக் கொள்வதுதான் அவருக்கு பாதுகாப்பு என்று உபதேசம் செய்தாள்.. அகர்வால் ரூபாவை சந்தேகப் படவில்லை..

கல்யாணசுந்தரம் அவரை இகழ்வாகப் பேசிவிட்டார் என்ற கொதிப்பில் நண்பனைத்தான் சந்தேகப்பட்டார்..

"என் ப்ராப்பர்ட்டீஸை நீ அபகரிக்கப் பார்க்கிறாய்.." கல்யாணசுந்தரத்தைக் குற்றம் சாட்டினார்..

"என்னிடம் ஒன்றுமேயில்லை பார்.. உன் ப்ராப்பர்ட்டீஸ்க்கு நான் ஆசைப்படுகிறேன்.. போடா டேய்.."

"அப்படின்னா நான் நீட்டுகிற பேப்பர்களில் மோனாவை ஸைன் பண்ணச் சொல்.."

"அதை உன் மகளிடம் நீயே கேட்டுக் கொள்.. ஊடே என்னை இழுக்காதே.."

அகர்வால் வீட்டுக்கு வந்தார்.. கல்யாண சுந்தரத்தின் குடும்பத்தினர் முன்னிலையில் மோனாவிடம் சத்தம் போட்டார்.. மோனா அசைந்து கொடுக்கவில்லை.. சொத்துக்களை அகர்வால் பெயருக்கு மாற்றிக் கொடுக்க மறுத்துவிட்டாள்..

"டாட்.. ஆல்ரெடி உங்க பெயரில் கோடிக்கணக்கில் மதிப்புப் பெறும் பராப்பர்ட்டீஸ் இருக்கு.. இது போதும்.. மற்றது உங்களுக்கு எதற்கு..?"

"அதை நீ தீர்மானிக்கக் கூடாது.. என் பேச்சை மீறி மேரேஜ் பண்ணிக்கப் போகிற.. என்னை

அவமானப்படுத்தியவன் வீட்டுக்கு மருமகளாகப் போகிற.."

"இது நீங்கள் செய்ததுதானே டாட்.. நீங்க ரீமேரேஜ் பண்ணிக்கறதை நான் தடுக்க நினைத்ததில்லையே.. ரூபா வேண்டாம்ன்னுதானே சொன்னேன்.. அவளும் என்னை டீஸ் பண்ணியவள்தான் டாட்.."

"அதுக்காக பழிக்குப் பழிவாங்க நினைக்கிறாயா..?"

"நோ டாட்.. என் பக்க நியாயத்தைச் சொன்னேன்.."

"என் புராப்பர்டீஸ் என்பெயரில்தான் இருக்கணும்.."

"அதைத்தான் நானும் விரும்பறேன் டாட்.. உங்க புராப்பர்ட்டீஸ் உங்க பெயரில்தான் இருக்கணும்.. இப்ப் இதை நான் மாற்றிக் கொடுத்தேன்னா இது அத்தனையும் ரூபா பெயருக்கு டிரான்ஸ்பர் ஆகிரும்.. ஸோ.. நான் ஸைன் பண்ண மாட்டேன்.. அப்புறம் இன்னொன்றையும் நீங்க மறந்துட்டிங்க.. நினைவு படுத்தறேன்.. இது அத்தனையும் என் அம்மாவின் புராப்பர்ட்டி டாட்.. அம்மாவின் கம்பெனியில் நீங்க மேனேஜரா வொர்க் பண்ணினீங்களாம்.. அம்மாவை லவ் பண்ணி மேரேஜ்

பண்ணிக்கிட்டதாலே அவங்க புராப்பர்ட்டீஸுக்கு சொந்தக்காரரா ஆனிங்களாம்.. நீங்க பிஸினெஸை விரிவு பண்ணியிருக்கலாம் டாட்.. பேஸிக் அம்மாவுடையது தான்.. டோன்ட் ஃபர்கெட் இட்.. அம்மாவின் ப்ராப்பர்ட்டீஸை நான் ஒர் நாளும் விட்டுத்தரமாட்டேன்.."

நிஷாவை நினைவுபடுத்தியதும் அகர்வால் வாயை மூடிக் கொண்டு தோற்றுப் போனவராக திரும்பி விட்டார்.. கல்யாண் - மோனாவின் திருமணம் நடைபெற்றது.. ரூபாவின் நச்சரிப்பு தாங்காதவராக அகர்வால் தன் பெயரிலிருந்த சொத்துக்களை அவள் பெயருக்கு மாற்றி விட்டார்.. வருஷம் முடிவதற்குள் ரூபா அவரை விவாகரத்து செய்துவிட்டு வேறு ஒரு வயோதிகப் பணக்காரருடன் செட்டிலானாள்..

"இப்படித்தான் நடக்கும்ன்னு நினைச்சேன்.."

மோனா சொன்னதற்கு கல்யாண சுந்தரத்தின் குடும்பத்தினர் பதிலேதும் சொல்லாமல் அமைதி காத்தார்கள்..

"அப்பாதானே.. கோபத்தை விட்டுவிட்டு அவரிடம் பேசு மோனா.." கல்யாண் தனிமையில் அறிவுறுத்தினான்..

"உடனே பேச வேண்டாம் கல்யாண்.. கொஞ்சநாள் போகட்டும்.. என் அருமையையும் அம்மாவின் அருமையையும் டாடி உணர்ந்து கொள்ளட்டும்.. என் பாசம் பெரிதுன்னு என்னைத் தேடி வரட்டும்.. அதற்குப் பின்னால் பேசுகிறேன்.." மோனா கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள்..

அகர்வாலும் வந்தார்.. மகளிடம் மன்னிப்புக் கேட்டார்.. மோனா கரைந்து விட்டாள்.. கல்யாண சுந்தரம் நெகிழ்ந்து நண்பருடன் ஒன்று சேர்ந்து விட்டார்.. அகர்வால் பழையபடி தொழிலில் தீவிர கவனம் செலுத்த ஆரம்பித்தார்.. ரூபா என்ற ஒருத்தி அவர்களின் வாழ்க்கைப் பாதையில் குறுக்கிட்டாள் என்பதையே தந்தையும் மகளும் மறந்து போனார்கள்..

கல்யாணி மறக்கவில்லை.. விக்ரம் படிப்பை முடிக்கும் வரை அவனைக் கண்காணித்துக்

கொண்டுதான் இருந்தாள்.. அவன் லண்டனில் இருக்கும்வரை அவனை நிழலாகப் பின்தொடர்ந்தாள்.. விக்ரம் தேம்ஸ் நதிக்கரைக்கு வருவான்.. பாலத்தில் நின்று நதியில் மிதக்கும் படகுகளைப் பார்த்துப் பெருமூச்சு விடுவான்.. அவனுடன் இணை பிரியாமல் அஜய் இருப்பான்..

"நீராட நதியா இல்லைன்னு அவ அன்றைக்கு கேட்டா அஜய்.. இதோ தேம்ஸ் நதி இருக்கு.. என்னால் நீராட முடியலையேடா.. ஏண்டா..?"

விக்ரமின் துயரம் தோய்ந்த வார்த்தைகள் கல்யாணியின் மனதைக் கசக்கிப்பிழிந்தன..

'நானில்லையா உனக்கு..?' மனதுக்குள் அவள் அழுதாள்..

விக்ரம் படிப்பு முடிந்து இந்தியாவுக்குத் திரும்பி விட்டான்.. கல்யாணி தொய்ந்து விட்டாள்.. அவளுக்கு திருமணம் செய்து வைக்க முடிவு செய்த கல்யாண சுந்தரம் மாப்பிள்ளை தேட ஆரம்பித்த போது மறுத்து விட்டாள்..

"எனக்கு கல்யாணம் வேண்டாம்ப்பா.."

"ஏன்..?"

கல்யாணசுந்தரத்தின் விழிகள் மகளைத் துளைத்தன.. அவள் தேம்பி அழுதாள்.. மகளைத் தேற்றி அவர் விவரம் கேட்டபோது நதியின் மீது அவள் இசைத்த பாடலைப் பற்றித் தெரிய வந்தது..

"எனக்கு அவன் மேல காதலான்னு தெரியலை.. ஆனா அவனை என்னால் மறக்க முடியலை.. என்னை அவன் அடையாளம் காணலைப்பா.. வேறு ஒருத்தியை இந்தக் கல்யாணின்னு நினைச்சுட்டான்.. அந்த வேதனை என் மனதைக் கூறுபோடுது.."

"அப்படின்னா நீ இந்தியாவுக்குப் போ.. கொடைக் கானலில் விக்ரமின் வீட்டில் தங்கு.. அவரிடம் பேசிப் பழகு.. உன்னை அடையாளம் கண்டு பிடிக்கவை.."

"நோ.. அவனைத் தேடிப் போய் நான்தான் நீ தேடிய பெண்ணுன்னு சொல்லனுமா.. ஐ கான்ட்ப்பா.."

"நீ சொல்ல வேண்டாம்.. அவரை 'யார் நீ'ன்னு கேட்க வை.. அதுக்குப் பின்னாலே அவர் தேடிய பெண்

நீதான் என்பதைத் தெரியப்படுத்து.. அப்போதுதான் உனக்கு அமைதி கிடைக்கும் கல்யாணி.. நீ விக்ரமைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு நான் ஃபோர்ஸ் பண்ணலை.. அது உன் விருப்பம்.."

கல்யாணிக்கும் அது சரியென்றே பட்டது.. அவள் இழந்திருந்த அமைதியை மீட்க இந்தியாவுக்கு வந்தாள்.. கொடைக்கானலில் விக்ரமின் வீட்டில் தங்கினாள்..

"எதற்காக நான் வந்தேனோ அந்த வேலை முடிந்து விட்டது.. குட்பை மிஸ்டர் விக்ரம்.. நான் லண்டனுக்கு ரிட்டர்ன் ஆகிறேன்.."

விக்ரமின் பதிலை எதிர்பார்க்காமல் கல்யாணி லண்டனுக்குப் பறந்து விட்டாள்..

# அத்தியாயம் 24

**தே**ம்ஸ் நதியின் மீது படகுகள் மிதந்து கொண்டிருந்தன.. வெஸ்ட் மின்ஸ்ட்டர் பாலத்திலிருந்து அவற்றைப் பார்க்கையில் அழகிய அன்னப்பறவைகள் மிதந்து கொண்டிருந்ததைப் போலவே இருந்தது.. விழிகளில் வெறுமையுடன் அவற்றை விட்டேற்றியாக பார்த்துக் கொண்டிருந்த கல்யாணியும் ஓர் அழகிய அன்னப்பறவை போலதான் இருந்தாள்.. அடர்ந்த கூந்தல் அலையலையாய் முதுகில் படிந்து இடுப்பைத் தொட்டுக் கொண்டிருந்தது.. ஜீன்ஸ், டிசர்ட்டின் மீது கனத்த நீண்ட ரெயின் கோர்ட் போன்ற உல்லன் ஸ்வெட்டர் அணிந்திருந்தாள்.. தலையில் மப்ளர் போன்ற தொப்பி முகத்தில் மாறாத சோகத்துடன் மெதுவாக.. தனியாக நடந்தாள்..

"முடிவா என்னதான் சொல்கிற கல்யாணி..?"

"ஸாரிப்பா.. என்னால் நீங்க சொல்கிற நிர்மலை மேரேஜ் பண்ணிக்க முடியாது.."

"அதுதான் ஏன்..?"

"ஐ டோன்ட் லைக் ஹிம்.."

மகளையே இமைக்காமல் தீர்க்கமாகப் பார்த்தார் கல்யாண சுந்தரம்.. அவரது பார்வையின் தீவிரத்தை தாங்கிக் கொள்ள முடியாதவளாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள் கால்யாணி.. நேர்கொண்ட பார்வையுடன் அஞ்சாமல் எதிர்பார்வை பார்க்கும் மகளிடம் தெரிந்த மாற்றத்தில் கல்யாண சுந்தரத்தின் விழிகளில் குற்றச்சாட்டு வந்தது..

"நீ நீயாக இல்லை கல்யாணி.."

அது கல்யாணிக்குத் தெரியும்தானே.. அவள் விழிகளில் கண்ணீர் நிரம்பியது.. கல்யாண சுந்தரத்திற்கு மனம் தாளவில்லை..

"இப்படி நீ அலைபாய்வதைக் காணப் பொறுக்காமல்தான் உன்னை கொடைக்கானலுக்கு அனுப்பினேன்.."

"நானும் போன காரியத்தை சக்சஸ்ஃபுல்லா முடித்துட்டுத்தானே வந்தேன்ப்பா.. விக்ரம் தேடிய பெண் நான்தான்னு தெரிய வைத்துட்டேனே.."

'அது போதுமா மகளே..!' கல்யாண சுந்தரத்திற்கு ஆற்றாமையாக இருந்தது..

'உன் மனதில் அவன்தான் இருக்கான்னு தெரியப்படுத்தியிருக்க வேண்டாமா..? அதைச் செய்யாமல் வந்து விட்டாயே..'

கல்யாணி திருமணத்தை மறுத்தாள்.. சோர்ந்து சரிந்தாள்.. கம்பெனிக்கு வர மறுத்து அவளுடைய அறைக்குள்ளேயே முடங்கிப் போனாள்.. அவளைத் தேற்றி வெளியே கொண்டுவர குடும்பத்தினர் ஆனமட்டும் போராடிப் பார்த்தார்கள்.. முடியவில்லை..

"இவ பிடிச்சா உடும்புப் பிடிதான்.." அபிராமி கண்ணீர் விட்டாள்..

மோனா தோழியிடம் மல்லுக்கு நின்றாள்..

"உன் மனதில் அவன் இருக்கும்போது எதற்காக லண்டனுக்கு ரிட்டர்ன் ஆன கல்யாணி.. இன்னும் கொஞ்சநாள் கொடைக்கானலில் இருந்திருக்கலாமே.."

"எதுக்கு மோனா..?"

"என்னடி இப்படிக் கேட்கிற..? உன் மனதில் விக்ரம் இருக்கிறார்.."

"அவன் மனதில் நானில்லையேடி.. ரூபாதானே இருந்திருக்கிறா..?"

"ஏய்ய்.. அது 'நீ'ன்னு நினைத்து அவ கூடப் பழகியது.."

"அப்படின்னா ஏண்டி இதுவரைக்கும் காதல் தோல்வின்னு வெறுப்பா இருக்கிறான்..? அவளை அவனால் மறக்க முடியலைதானே..?"

"கல்யாணி.." மோனா திகைத்துப் போனாள்..

'இவ மனசில் இப்படியொரு எண்ணமிருக்கா..?'

அப்படியொரு கோணத்தில் யாரும் நினைக்கவில்லையே.. கல்யாணிதான் விக்ரம் தேடிய

பெண் என்று தெரிந்தால் எல்லாம் சரியாப் போகும் என்றுதானே நினைத்தார்கள்..

கல்யாணி தன்னைச்சுற்றி ஓர் வளையம் போட்டுக் கொண்டாள்.. அதைத்தாண்டி அவளும் வெளியே வரவில்லை.. குடும்பத்தினரை உள்ளே வர விட்டது மில்லை.. எப்போதாவது வீட்டை விட்டு வெளியே போவாள்.. அவள் தேம்ஸ் நதிக்கரைக்குத்தான் போவாள் என்பது குடும்பத்தினருக்குத் தெரியும்.. தங்களுக்குள் மருகுவார்கள்.. கல்யாணியைத் தடுக்க மாட்டார்கள்..

'அன்றைக்கும் இப்படித்தான்.. கிளைமேட் அருமையா இருந்தது..'

விக்ரமை கண்டு கொண்ட அந்த முதல் நாள் படகுப் பயணத்தை நினைத்துப் பார்த்தாள் கல்யாணி.. நினைவுகள் சுகமானவை.. அதே நினைவுகள் கனமானவையும் கூட..

கனத்த மனதுடன் கால்களில் இரும்புக் குண்டை கட்டி விட்டிருப்பதைப் போல மெதுவே அடியெடுத்து

வைத்து நகர்ந்தாள் கல்யாணி.. திடிரென்றுதான் அவள் செவிகளில் அந்தப் பாடல் கேட்டது..

"நீராட நதியா இல்லை..?

நிழலாட இடமா இல்லை..?

பசியாற உணவா இல்லை..?

பரிமாறத் துணையா இல்லை..?"

கல்யாணி உடலில் புது ரத்தம் பாய்ந்தது.. சோர்வெல்லாம் பறந்து போக அவள் வேகமாக திரும்பினாள்.. திரும்பிய வேகத்தில் மிக அருகில் நின்று கொண்டிருந்த விக்ரமின் மீது மோதி விழப் போனாள்.. அவன் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.. அவனது கழுத்தில் கை வைத்து சாய்ந்த நிலையில் அவள்.. அவளது இடுப்பில் கை கொடுத்து அவளைத் தாங்கிப் பிடித்து அவள் முகம் பார்த்த நிலையில் அவன்..

"எனக்காக வா - நான்..

உனக்காக வா..

என்னைக் காண வா - என்னில்

**உன்னைக் காண வா.. வாவா.."**

அவள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவனது கரங்கள் அவளை உயர்த்திக் கட்டித் தழுவிக் கொண்டன.. அவளது முகமெங்கும் அவன் பதித்த ஆவேச முத்தங்களில் அவள் மூச்சுத் திணறிப் போனாள்..

"விடுங்க என்னை.." திமிறினாள்..

"விடமுடியாதுடி.. உன்னைக் கடத்திட்டுப் போகத்தான் வந்திருக்கிறேன்.."

"போவீங்க.. போவீங்க.. கேட்க யாருமில்லைன்னு நினைத்தீங்களா..?"

"யாருடி கேட்பா என்னை..? உன் அப்பா கேட்பாரா..? கேட்டா கல்யாணம் பண்ணிக் கொள்கிற சொந்தம் எனக்கிருக்குன்னு சொல்வேன்.. அபிராமி அத்தையைக் கேட்டு உறுதி பண்ணிக்கங்கன்னு சொல்வேன்.. உன் அண்ணன் கேட்டா நீ மட்டும் உன் காதலியை கடத்திட்டு வந்து கல்யாணம் பண்ணிக்கிட்ட..

என் காதலியை நான் கடத்திட்டுப் போகிறேன்னு சொல்வேன்.."

"சொல்வீங்க சொல்வீங்க.. தப்புத்தப்பா பாட்டைப் பாடிக்கிட்டு கடத்த வந்துட்டாராம்.. நானென்ன உங்க காதலியா..?"

கண்கள் கலங்க, உதடுகள் துடிக்கக் கேட்டவளின் தலை கோதி அவளது உதடுகளில் மென்மையாக முத்தமிட்டு அவளைச் சோதித்தான் விக்ரம்.. அவனுக்காக ஏங்கிய அவளது உடலும் மனமும் பாகாகத் துடித்தன.. அவனைத் தள்ள நிறுத்த அவளால் முடியவில்லை அவன் தொட்டவுடன் குழைந்த உடலை குற்றம் சொல்வதெப்படி..?

"தப்பாப் பாடினா சொல்லிக்கொடு.. பாட்டை மட்டுமில்ல.. வாழ்க்கையையும்தான்.. நீதான் என் காதலி கல்யாணி.. நீ மட்டும்தான் என் காதலி.. உன் காதலன் பொய் மானைத் துரத்திப் போனவன்.. மெய்மானாய் நீ என்னை மீட்க வந்து விட்டாய்ன்னு

சந்தோஷப்பட்டேன்.. நீ என்னை விட்டு விட்டு வந்து விட்டாயே.."

"நீங்க ரூபாவின் காதலர்.. அவளைக் காதலித்தவர்.."

கல்யாணி குமுறினாள்.. அவனிடமிருந்து விலக முயன்றாள்.. விக்ரம் விடவில்லை.. அவனது பிடி இரும்புப்பிடியாக இருந்தது.. எலும்புகள் நொறுங்கும் அளவுக்கு இறுக்கி அணைத்தான்..

"ஊஹூம்.. உன்னை விடவே மாட்டேன்.. விட்டுக் கொடுக்கவும் மாட்டேன்.. என்னோடு நீ வாழ்வதாக இருந்தால் மட்டுமே இந்த இடத்தை விட்டு அடியெடுத்து வைப்பேன்.. உன் பிடிவாதத்தை நீ விட மறுத்தால், வா.. இந்த தேம்ஸ் நதியில் ஒன்றாகக் குதித்து உயிரை விடுவோம்.."

"என்னால் உங்களை மன்னிக்க முடியலையே.."

கல்யாணி தேம்பினாள்.. தவித்தாள்.. அவளது உணர்வுப் போராட்டத்தை உணர்ந்து கொண்டவனைப் போல அவன் அவளது உச்சந்தலையில் முத்தம்

வைத்துத் தன் மார்போடு அவளை சேர்த்து அணைத்து அமைதிப் படுத்தினான்..

"மன்னிக்க வேண்டாம்.. தண்டனை கொடு.. சந்தோஷமா ஏற்றுக் கொள்கிறேன்.. ஆனா என்னை விட்டு பிரிந்து நிற்க மட்டும் நினைக்காதே.. உன் பாட்டுத்தான் எனக்குத் தேடுதலைத் தந்தது.. நான் ரூபாவைக் காதலிக்கலை.. இந்த தேம்ஸ் நதியின் படகில் 'நீராட நதியா இல்லை..?'ன்னு கேட்ட அந்தப் பெண்ணைத்தான் காதலித்தேன்.. இப்ப உன்னைக் கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்தேனே.. இது போல ரூபாவிடம் நடந்து கொண்டதே இல்லை.."

"ஆர் யு ஷ்யூர்..?"

ஆவலுடன் விழிகள் விரியக் கேட்டவளின் இமைகள் மீது முத்தம் பதித்து தலையசைத்தான் விக்ரம்..

"ஹண்ட்ரெட் பெர்சென்ட் ஷ்யூர்டி.. அவதான் என் மீது விழுவா.. லிமிட்டைக் கிராஸ் பண்ண டிரை பண்ணுவா.. எனக்கு ஏனோ அவளைத் தொட்டுப் பேசப்

பிடிக்காது.. அது ஏன்னு எனக்குத் தெரியலை.. இப்ப என்னடான்னா உன்னைத் தொடாம பேச என்னால் முடியலை.. ஏன்டி..?"

அப்பாவி போல முகத்தை வைத்துக் கொண்டு கேட்டவனின் அடாவடித்தனத்தில் கல்யாணி அழுகையும் கோபமுமாக அவன் மார்பில் குத்தினாள்.. உரக்கச் சிரித்தபடி அவளது கைகளைப் பிடித்து அவற்றில் முத்தங்களைப் பதித்தான் விக்ரம்..

"ரூபாவை நினைத்துக்கிட்டு நான் காதல் தோல்வின்னு வாழ்க்கையை வெறுத்துப் போய் வாழலை.. எங்கேயோ தப்பு நடந்திருக்குன்னு தோணுச்சு.. நான் தேடின பெண் அவ இல்லைன்னு என் மனது சொல்லுச்சு.. ஈஸியா ஏமாந்துட்டேனேன்னு என் ஈகோ காயப்பட்டுச்சு.. அதனாலதான் அந்த சேஞ்ஜ்.."

கல்யாணியின் முடிகோதி.. முகத்தோடு முகம் புதைத்து.. பாட்டுப்பாடி.. மன்னிப்புக்களாகக் கேட்டுத் தள்ளி அவள் மனதை வென்று விட்டான் விக்ரம்..

புண்பட்டிருந்த இருவர் மனங்களும் ஆறி பூவாய் மலர்ந்தன..

விக்ரம் - கல்யாணியின் திருமணம் கொடைக் கானலில் வெகு விமர்சையாக நடந்தது.. அடுத்த முகூர்த்தத்தில் அஜய் - வீணாவின் திருமணமும் நடந்து முடிய.. இரு ஜோடிகளும் தேநிலவுக்கு லண்டனுக்குப் பறந்தார்கள்..

"டேய்.. எனக்குத்தான் தேநிலவு.. உனக்கு மறுவீட்டு விருந்து.." என்று நண்பனைக் கிண்டலடித்தான் அஜய்..

இந்த வாழ்க்கை நமக்கு எதைத்தான் தரவில்லை..? நீராட நதியைத் தந்திருக்கிறது.. இளைப்பாற நிழலைத் தந்திருக்கிறது.. பசியாற உணவைத் தந்திருக்கிறது.. பரிமாற துணையையும் தந்திருக்கிறது..

நாம்தான் எது எங்கே இருக்கிறது என்று தேடிக் கண்டு கொள்ள வேண்டும்..

## முற்றும்


லட்சுமி பாலாஜி பதிப்பகம்